
www.tamilarangam.net

# மனிதம்



**Manitham**

P. RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

24

september + oktober
1993

Now, the future: P.L.O. rally in Gaza last week

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வாசகர்களுடன் ....

**மனிதம்** இந்த இதழுடன் (24) 5வது வருடத்தைத் தொடங்குகிறது.

எமக்கு உற்சாகம் தரும் வகையில் விமர்சனங்கள், ஆக்கங்கள், அபிப்பிராயங்கள் .... என்பவற்றைத் தாங்கி உங்களிடமிருந்து எமக்குக் கடிதங்கள் வந்து கிடைக்கின்றன. இலங்கையிலிருந்து வரும் கடிதங்களுள் பல மாணவ,மாணவிகளினது உற்சாகமான எழுத்துக்களும் அடக்கம்!

எல்லோருக்கும் நாம் ஒழுங்காகப் பதில் அளிக்கவில்லை. எமக்கு எழும் நேரப் பிரச்சினை முக்கிய பங்காற்றினாலும், எமது வேலைமுறைமீதுதான் நாம் சுயவிமர்சனம் செய்தாக வேண்டும் என்பதே உண்மை!

இலங்கையிலிருந்தோ, இந்தியாவிலிருந்தோ ஒரு கடிதத்தை எமக்கு எழுதி அனுப்புவதென்றால் அது சாதாரண வேலையல்ல. முத்திரைச் செலவு, வாழ்நிலைமை, ... என பல பிரச்சனைகள். இந் நிலைமைகள், எம்மிடமிருந்து பதிலை எதிர்பார்ப்பதில் உள்ள வேட்கையை இன்னமும் அதிகரிக்கும் என்பதையும் நாம் அறிவோம். அந்த உணர்வுகளை நாம் மதிப்பதென்றால், நாம் பதில் எழுதியே ஆகவேண்டும் என்பது தார்மீக ரீதியில் நியாயமானது. இந்தவகையில் எமது தவறைத் திருத்தி, இனி அனைத்து வாசகர்களினதும் கடிதங்களுக்கு பதில் எழுதுவதாக உள்ளோம்.

மனிதம் இதழ்களில் கணிசமான தொகை இலங்கை, இந்தியாவிற்குப் போய்ச் சேர்கிறது. எந்தவித வியாபார நோக்கற்றதாகவும் மனிதம் தன்னை நிலைநிறுத்தி இருப்பதால், (சுவிஸ் உட்பட மற்றைய நாடுகளுக்கு) இயன்றளவு குறைவான சந்தாவே நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. உதவிப் பணம் எதுவும் சுவிஸில் இதற்காகப் பெறமுடியாது. இந்த நிலையில் எமது சகல விதமான உழைப்புகளோடும் கூட்டுமுயற்சியினூடுமே மனிதம் வழமையான இடைஞ்சல்களைத் தாண்டி வெளிவருகிறது.

எனவே வாசகர்களாகிய உங்களை மனிதம் நட்போடு கேட்டுக் கொள்வதெல்லாம் ....

- சந்தாவை உரிய நேரத்தில் செலுத்தி உதவுங்கள்.
- சந்தா விடயத்தில் எமது தவறுதல்கள் ஏதும் இருப்பின் அதைத் தெரியப்படுத்துங்கள்.
- சந்தாதார் விலாச மாற்றங்கள் இருப்பின் எமக்கு அறியத் தரவும். (எமது கவனக் குறைவாலும் இது நிகழலாம்)
- இலங்கையிலிருந்து கூட்டாக எழுதும் மாணவ, மாணவிகள் சிலர், ஒரே இடத்தில், சிலவேளைகளில் ஒரே வீதியில் (அல்லது ஒரே பாடசாலையில்) இருப்போரும்கூட தனித்தனியாக தமக்கு பிரதிகள் அனுப்பக் கேட்டுள்ளீர்கள். உங்களது ஆர்வத்தை நாம் மதிக்கிறோம். மனிதத்தின் நோக்கையும், அது முகங்கொடுக்கக்கூடிய நிதிப் பிரச்சினையையும் கவனத்தில் எடுத்து, இயன்றளவு கைமாற்றிப் படிப்பது, முடியாத நிலைமையில் தனித்தனியாக பிரதிகளைக் கேட்டு எழுதுவது என்ற வகையில் உங்கள் கடிதங்கள் அமைந்தால் நல்லது.
- வாசிகசாலைக்கு மனிதம் முன்னுரிமை வழங்குகிறது. (அவற்றின் விலாசங்களை நீங்கள் அனுப்பிவைக்கும் பட்சத்தில் நேரடியாகவே அனுப்பிவைப்பதுபற்றி நாம் கவனத்தில் எடுப்போம்)
- மனிதம் கிடைக்காத மற்றைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் எமக்கு அறியத்தந்தால் அனுப்பிவைக்கலாம்.

தொடர்ந்தும் விமர்சனம், ஆக்கம், ஆலோசனைகள் ஆகியவற்றினூடாக **மனிதம்— வாசகர்கள்** தொடர்புகள் தொடரட்டும்!

**—ஆர் குழு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEPTEMBER
+
OCTOBER

1993

Zwei Monatlich Einmal

*Impressum*
&
*Herausgeber :*

Manitham
Postfach-12
3000 Bern -11
SCHWEIZ



# மனிதம்

## உள்ளே ....

- ♣ பாலஸ்தீன—இஸ்ரேல் ஒப்பந்தம் ஒரு தீர்வாகுமா?
- ♣ ஓர் அவதார புருஷனின் அவலம்
- ♣ அதிகாரத் திமிரும் அதிரடித் தாக்குதலும்
- ♣ நூல் அறிமுகம் - மறையாத மறுபாதி
- ♣ மலையக மக்களும் இதொகாவும்
- ♣ அகம்

**கவிதைகள்:**

- ♣ மக்கள்
- ♣ பிரியமானவளுக்கு
- ♣ நட்பும் நானும்
- ♣ தோல்வியடைந்தேன்...
- ♣ ஒரு கொலை
- ♣ கைவலிக்குது...

*Redaktion :*
V.Logadas
M.Narendran
S.Ragavan
&
Manitham Redaktion komitee

*Abonnament :*
22 SFr
(pro Jahr)

*Post Konto :*
Manitham
3000 Bern-11
PC : 30-37152-1

*Bank Konto :*
Schweizerische Kreditanstalt
3001 Bern
**Manitham**
220348-70

www.tamilarangam.net

**இந்தியா**

# பூமி அதிர்ந்தது! அரசு தூங்கியது!!

செப்ரம்பர் 30ம் தேதி அதிகாலை 4 மணியிலிருந்து 7 மணிவரை ஒரு தடவை 30 விநாடிகள் என்ற கணக்கில் 5 முறைகள் பூமி அதிர்ந்தது, பூமி நடுங்கியது. கட்டிடங்கள் பொலபொல என்று விழுந்தன. 30,000 க்கு மேற்பட்ட மனித உயிர்கள் பலியாகின. இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் கன்னடம், ஆந்திரம், மகாராஷ்டிரம் எல்லைப் பிரதேசங்களை அண்டித்தான் அண்மைக் காலங்களில் மனித இனம் காணாத இந்த அவலம் நிகழ்ந்தது.

சுவிஸ் பூமி அதிர்வுக் கருவிகள் இதனை வெளிப்படுத்தின. உடனடியாக இந்திய அரசுக்கு செய்தி அனுப்பப்பட்டது. செய்தி கிட்டித்தான் என்ன பயன்? எல்லாம் முடிந்தது.



மீட்புப் பணியை துரிதப்படுத்தக்கூட இந்திய அரசு முயலவில்லை. மக்கள் மாட்டு வண்டிகளிலும் கைத்தாங்கல்களிலுமாக காயப்பட்டவர்களை எடுத்துச் சென்றனர். ஈழத்துக்கு ஒரு லட்சம் துருப்புகளை அனுப்பிய இந்திய அரசு, தமது சொந்த மக்களின் மீட்புப் பணிக்காக 6000 இராணுவத்தினரை மட்டும் முதல் அனுப்பியது.

அசர்பைசான் போன்ற இடங்களில் பூமியதிர்வு நிகழ்ந்து, சில தினங்களின் பின்கூட சில மனித உயிர்கள் நிலத்தின் கீழிருந்து தப்பிய செய்திகளைப் படித்திருக்கிறோம். ஆனால் இந்திய அரசோ அம் மக்களையும் அப் பிரதேசங்களையும் அழிந்துவிட்டதாக முடிவெடுத்திருக்க வேண்டும். அதனால்தானோ மீட்புப் பணியில் அவ்வளவு சுணங்கல்! இறந்தவர்களின் உறவினரது ஆன்மீகத் துடிப்புக்காயினும் இறந்தவர்களை மீட்டிருக்க வேண்டாமா?

உலகின் பல பாகங்களிலிருந்தும் மீட்புப் பணிக்கான நிதி உதவிகள் அனுப்பப்பட்டன. மீட்புப் பணிக்கான ஆளுதவி தேவையா? என்று கேட்கப்பட்டபோது தேவையில்லையென்று இந்திய அரசு மதறுத்துவிட்டது.

இதனைக் கேள்வியுற்ற BBC தொலைக்காட்சி நிருபர் லண்டனிலுள்ள இந்தியன் உயர் ஸ்தானிகரை அவசர அவசரமாகச் சந்திக்கிறார். நிதியுதவியை ஏற்கும் நீங்கள் ஆளுதவியை ஏன் மறுக்கிறீர்கள்? என்ற வினாவை எழுப்பியதற்கு ....

இந்தியா ஒரு பெரிய நாடு. இதில் மீட்புப் பணிகளை செய்வதற்கு நாமே பல ஒழுங்குகளை (well plan) தயாராக வைத்திருக்கிறோம். இதற்கு வெளிநாட்டு ஆளுதவிகள் அவசியமில்லை என்று அண்டப்புளுகாக புளுகித் தள்ளுகிறார் உயர் ஸ்தானிகர்.

உண்மை என்ன? பூமி அதிர்வு நிகழ்ந்த இடம் வறியவர்கள் பரந்தளவில் வாழும் பிரதேசம். இதில் வெளிநாட்டவரின் கண் படக்கூடாது என்பது ஒரு விசயம். அடுத்தது வறிய மக்களின் மேலான அக்கறையற்ற தன்மை. ஆனால் இதுவே பம்பாய் போன்ற பாலிவூட் இல் நிகழ்ந்திருக்குமானால் நிலைமை வேறாகவே இருந்திருக்கும். வெளிநாட்டவரை வரவழைத்தாயினும் மீட்புப் பணியை வேகப்படுத்தியிருக்கும் இந்திய அரசு.

வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் மீட்புப் பணிக்கான நிதியை இந்திய அரசும் அரசாளர்களும் தமது பைகளை நிரப்பப் பயன்படுத்த மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

www.tamilarangam.net

Brugg நகரில்

# தமிழ் தளிர்ச் சோலை.

*"அந்நிய மண்ணிலும்*
*தமிழ் படிக்க வழிசெய்த*
*அன்னை தந்தையரை ஏற்றிப் போற்றுவோமே!*

என்று கிராமிய இசைக்கேற்ப இயற்றப்பட்ட பாடல்களுடன் கூடிய சிறுவர்களின் அந்த கிராமிய நடனம் இன்னும் கண்களை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

சிறுமிக் கிழவி ஒருத்தி அங்கும் இங்கும் அங்கலாய்த்துப் பார்த்தாள், சத்தமிட்டாள், பரக்கப் பரக்கத் தேடினாள் ..... காணவில்லை. அவள் சுட்டு வைத்த அப்பத்தைக் காணவில்லை. யார் திருடியது? சிறுமிக் கிழவிக்குத் தெரிந்ததோ தெரியவில்லையோ, பார்வையாளருக்குத் தெரிந்து விட்டது. ஆம்! கள்ளப் பூனைகள் இரண்டும் அப்பத்தை கொண்டு சென்றுவிட்டன! பூனைகள் தாம் திருடிய அப்பத்தை சமமாகப் பங்கிடுவதில் உள்ள பிரச்சனையால் பிரித்துத் தரும்படி குரங்கிடம் கொடுக்க குரங்கு சிறிது சிறிதாக அப்பம் முழுவதையும் தானே சாப்பிட்டு முடித்தது.

குரங்கு அப்பம் பிரித்த கதை பாடல்களாக வடிக்கப்பட்டு **தளிர் கல்வி கலாச்சார நிலைய** சிறுவர்களின் 'தாளலய' நாட்டிய நாடகமாக மேடையேறியது. இரு சிறுவர்கள் பூனைகளாகவும் ஒருவர் குரங்காகவும் வேடமிட்டும், இன்னுமோர் சிறுமி கிழவியாகவும் வந்து சுமார் முப்பது நிமிடங்களுக்கு மேல் தாளலயத்திற்கு ஏற்ப ஆடிக்கொண்டிருந்த இக் காட்சிகள் இன்னும் விழிகளை சுற்றிக்கொண்டிருக்கின்றன.

இத்தகைய புதிய முயற்சிகளும், நிகழ்ச்சிகளும் இன்னும் வெளிக்கொணரப்பட வேண்டும் என்று மனம் உந்துதல் பெறுகிறது.

**தமிழ்த் தளிர்ச் சோலை** பார்வையாளர்க்கு வழங்கிய இச் சிறப்பு விருந்தில் சிறுவர்களை வழிநடத்தி இயக்கிய க.தர்மரத்தினம் பாராட்டுக்குரியவர்.




இத்தகைய முயற்சிகளில் சிறுவர்கட்கு விளங்கும் வகையில் பாடல்களும் வசனங்களும் அமைக்கப்பட்டு பாத்திரங்களின் ஊடாக பேசவழி செய்யப்படின் மேலும் சிறப்பாக அமையும்.

*19.9.93* ஞாயிற்றுக்கிழமை Brugg நகரில் 'தளிர் கல்வி கலாச்சார நிலைய' ஆதரவில் நடாத்தப் பெற்ற 'தமிழ்த் தளிர்ச் சோலை' (சிறுவர்) நிகழ்ச்சிக்கு சிறுவர்களும் பெற்றோருமாக சுமார் 200 க்கு மேற்பட்ட பார்வையாளர் வருகை தந்திருந்தனர். இது அந்நிய மண்ணிலும் சிறுவர் தமிழ் படிக்க வேண்டும் என்பதன் ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

நிகழ்சிகளின் தொடக்கமாக சிறுவர்கள் பாடசாலைச் சீருடையணிந்து 'வாழ்க வாழ்க வாழ்கவே' என்ற தளிர் கல்வி நிலைய கீதம் இசைக்கப்பட்டமை சில கணம் பார்வையாளர்களை ஈழத்தின் பால் இழுத்துச் சென்றது.

இன்னும் சிறுவர்களின் பேச்சு, கவிதை, கூட்டுப் பாடல்கள் என்று இடம்பெற்ற இந் நிகழ்சியில் மூத்த கலைஞர்கள் என்ற வகையில் 'நிர்மலா' போன்ற தமிழ்ப் படங்களை இலங்கையில் இயக்கிய ஏ.ரகுநாதன் (60) அவர்களும், 'வாடைக்காற்று' திரைப்பட நடிகர்களில் ஒருவரும், வரணியூரானின்

19 →



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாலஸ்தீன – இஸ்ரேல் ஒப்பந்தம்

# ஒரு தீர்வாகுமா ?

புயலுடன் கூடிய பனி விசிறி அடித்துக் கொண்டிருக்க இரவில் இரத்தத்தை உறையவைக்கும் குளிரும், பகலில் சுட்டெரிக்கும் வெப்பமும் தான் அந்த பிரதேசத்துக்குரிய காலநிலை. துணிக் கூடாரத்தினுள் குழந்தைகள் முதியோரென சகலரையும் உள்ளடக்கிய அகதி முகாம்கள்! இவ் அகதிமுகாம் களிலிருந்தே பல்லாயிரக் கணக்கான போராளிகளை உருவாக்கித் தந்தவண்ணம் இடம்பெற்று வந்த பாலஸ்தீன மக்களது வீரம்செறிந்த போராட்டமானது அரை நூற்றாண்டை மிண்டு விழுங்கி ஒரு வரலாறு ஆகிவிட்டது. போராளிகளும் மக்களுமாக ஒரு லட்சத்திற்கு மேற்பட்டோரை பலிகொண்டு, மில்லியன் கணக்கான மக்களை அண்டைய நாடுகளுக்கு விரட்டியடித்து, சர்வதேச ரீதியில் பாலஸ்தீனியர்களை முகவரியற்றவற்களாக்குவதில் படிப்படியாக வெற்றிகண்டு வந்தது சியோனிச இஸ்ரேலிய அரசு! இத்தகைய ஓர் நிலையில் இன்று இஸ்ரேலுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்துக்கும் இடையே இடம்பெற்றுள்ள ஒப்பந்தம் ஆனது குறிப்பிடத்தக்க அளவு பாலஸ்தீன மக்களிடம் ஓர் நம்பிக்கையை உண்டு பண்ணியுள்ளது என்பது உண்மைதான். இஸ்ரேலினுடைய இந்த மனமாற்றத்திற்கான காரணம் யாது? இவ் ஒப்பந்தத்தை இஸ்ரேல் எவ்வளவு நேர்மையுடன் நடைமுறைப்படுத்தப் போகிறது. பாலஸ்தீன விடுதலை இயக்கம் இன்றுள்ள நிலையில் பாலஸ்தீன மக்களை இவ் ஒப்பந்தத்தின் மூலம் திருப்திப்படுத்தி விடமுடியுமா? போன்ற பல்வேறு கேள்விகள் எழுந்த வண்ணம் உள்ளன. இவை பற்றிய சாத்தியப்பாடுகளை பாலஸ்தீன மக்களின் கடந்தகால போராட்ட வரலாற்றுடன் ஒப்பிட்டு புரிந்துகொள்ள முடியுமெனக் கருதுகிறேன்.

1947 ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தத்தில் நாசிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி உலகெங்கும் சிதறியோடிய யூத மக்களை தனது காலனி ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த அரபு மண்ணில், அரபு மக்களின் பலத்த எதிர்ப்பின் மத்தியில் கொண்டுவந்து குடியேற்றியது பிரித்தானிய ஏகாதிபத்தியம். இவ்வாறு குடியேற்றப்பட்ட யூத மக்கள் தாம் குடியேறிய பகுதிகளை விஸ்தரித்துக்கொள்வதற்கு சகல வழிகளிலும் உதவிசெய்து கொடுத்து வந்தது. பின்னர் அரபு மண்ணை விட்டு வெளியேறும் போதும் தனது இராணுவத் தளபாடங்களை யூதர்களிடம் கையளித்துவிட்டும் வெளியேறியது. இதனைத் தொடர்ந்து யூதர்கள் ஏழரை மாதம் அம் மண்ணின் மைந்தர்களான பாலஸ்தீனர்களுடன் யுத்தம் புரிந்து 1948 இல் மே மாதம் இஸ்ரேல் என்னும் நாட்டை பிரகடனம் செய்துகொண்டது. அன்று பிரித்தானிய, அமெரிக்க ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது. அதில் இருந்து தனது கோரமுகத்தை அரபு மண்ணில் வெளிக்காட்டத் தொடங்கியது.

இஸ்ரேல் படிப்படியாக தனது பிரதேசத்தை விஸ்தரிக்கும் முயற்சியை ஆயுத முனையில் தொடர ஆரம்பித்ததனால் பாலஸ்தீனர்கள் அச்சம் காரணமாக தமது பிரதேசங்களை மலிவு விலையில் இஸ்ரேலியர்களுக்கு விற்றுவிட்டு வெளியேறுவது ஒருபுறம், யுத்தத்தினால் அதிகளாக



வெளியேறிக் கொள்வது ஒருபுறமுமாக தமது பாரம்பரிய பிரதேசத்தை இழக்க நேரிட்டது. இவ்வாறான நிலையில் பல்வேறு குழுக்களாக இஸ்ரேலியர்களுடன் போரிட்டுக் கொண்டிருந்த பாலஸ்தீன குழுக்களை ஒன்றிணைத்து 1964 ம் ஆண்டு யாசீர் அரபாத்தின் முயற்சியில் ஜெருசலேம் நகரில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இவ் அமைப்பின் தோற்றமானது அரபு நாடுகளின் மத்தியில் மேலும் புத்துணர்வை ஏற்படுத்திய அதே காலகட்டத்தில் இஸ்ரேலை ஆதரித்து வளர்த்து வந்த ஏகாதிபத்தியங்களுக்கு மிகவும் அச்சுறுத்தலாக அமைந்தது. இஸ்ரேல் என்ற நாட்டை உலக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரைபடத்திலிருந்து அகற்றுவோம் என திடசங்கம் பூண்டு பல போராளிகள் தமது உயிரைத் தியாகம் செய்து போராடிய வேளை தமக்குள் எவ்வளவோ பகைமை கொண்டிருந்த ஏனைய அரபு நாட்டு தலைவர்கள் பாலஸ்தீன மக்களுக்கும், விடுதலை இயக்கத்திற்கும் சகல வழிகளிலும் வழங்கிய உதவி, உலகிலேயே பெரிய விடுதலை இயக்கமாக வளர வழிவகுத்தது. பாலஸ்தீன விடுதலை இயக்கமானது அரபாத்தினது அல்பற்றாக் கட்சியையும் அதேயளவு சராசரி பலம் வாய்ந்த ஜோர்ஜ் வாஸ் என்பவரை தலைவராகக் கொண்ட இடதுசாரிக் கட்சியான பி. எல். எவ். டி (PLFD) யையும், ஏனைய பதினைந்துக்கு மேற்பட்ட கெரில்லாக் குழுக்களையும் கொண்ட பலமான அமைப்பாக தன்னை வழிநடத்தி வந்தது. இதில் யசீர் அரபாத்துக்கு குறிப்பிடத்தக்களவு பங்குண்டு. மேற்குலக நாடுகள் ஏனைய அரபு நாடுகளின் இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் வரிசையில் பாலஸ்தீனத்தை நிறுத்த முயன்ற போதெல்லாம் தகுந்த பதிலடி கொடுத்து ஒரு மதவாத அமைப்பாக அல்லாமல், ஒரு விடுதலை இயக்கமாக வளர்த்து வந்தமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும். இத்தகைய நிலைப்பாடு அரபாத்தை ஏனைய அரபுத் தலைவர்களிலிருந்து சர்வதே ரீதியில் வேறுபடுத்திக் காட்டியது. இதனூடாக கிடைத்த ஆதரவின் மூலம் ஏகாதிபத்தியங்களின் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும் பாலஸ்தீனியர்களுக்கு ஐநா. சபையில் அங்கத்துவம் பெற்றுக் கொடுப்பதில் ஏனைய உறுப்பு நாடுகள் வெற்றி பெற்றன. இவ்வுறுப்புரிமை பாலஸ்தீன மக்களின் போராட்டரத்தினது தார்மீக ஆதரவை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தியது.

இவ்வாறான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியும் ஏகாதிபத்திய ஏதிர்ப்புப் போராட்டமும், அரபு நாடுகளில் தமது கட்டற்ற சுரண்டலை மேற்கொண்டு வந்த ஏகாதிபத்தியங்களுக்கு அச்சுறுத்தலாக அமைய, இவை இஸ்ரேலை வளர்த்து விடுவதற்கான வேலைகளில் மும்மரமாக ஈடுபட்டன. இதை வெளிப்படையாகவே செய்தனர். ஐ. நா. சபையில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக பல தீர்மானங்கள் கொண்டு வந்த போதெல்லாம் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இஸ்ரேலைக் காப்பாற்றிக் கொண்டனர். இந் நடவடிக்கைகள் இஸ்ரேலை மேற்காசியாவின் கேட்பாரற்ற பேட்டை ரவுடியாக மாற்றிவிட்டது. சிறிய நாடாகவும் குறைந்தளவு சனத்தொகையை கொண்டிருந்த போதும் இராணுவ ரீதியில் மிகவும் பலம் வாய்ந்ததாக, அதாவது அனைத்து அரபு நாடுகளுடனும் ஒரே நேரத்தில் மோதுமளவு இராணுவ ரீதியில் பலம்பெற்று வந்தது. இவ்வாறு இராணுவ ரீதியில் பலம்பெற்ற இஸ்ரேல் தனது அண்டைய நாடுகளான எகிப்து, லெபனான், சிரியா, யோர்டான் ஆகிய நாடுகளின் மீதும் காலத்துக்குக் காலம் தாக்குதல் நடாத்தி பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. இதற்கு அந் நாடுகள் செய்தது நியாயமான பாலஸ்தீன மக்களது போராட்டத்தை ஆதரித்தமை, போராளிகளுக்கு புகலிடமளித்தமை போன்றவற்றை காரணம் காட்டி தனது சியோனிச வெறியை நியாயப்படுத்தியது.

இந் நடவடிக்கையால் ஆத்திரமுற்ற பாலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட பல்வேறு அரபு அமைப்புக்கள் ஏகாதிபத்தியங்களிற்கு எதிரான தாக்குதலை பழிவாங்கல்களாக மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளியது. 70 களின் நடுப்பகுதிகளில் அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகளை இவர்களது தற்கொலைப்படைத் தாக்குதல்கள் குலைநடுங்க வைத்தன. தூதரகங்கள், வங்கிகள் மீதான குண்டுவைப்பு, விமானக் குண்டு வெடிப்புக்கள், முக்கிய பிரமுகர்கள், தலைவர்கள் கடத்தல்கள், கொலைகள் என பட்டியல் நீண்டது. இதில் பெரும்பாலானவை பாலஸ்தீன விடுதலை இயக்கம் தவிர்ந்த ஏனைய அரபு நாடுகளும் இஸ்லாமிய மத அடிப்படைவாத அமைப்புக்களும் பங்கேற்றன. இந்த நடவடிக்கைகள் பல அப்பாவி மக்களை பலிகொண்டதுடன் விமானப் போக்குவரத்துக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதனால் பாலஸ்தீனர்களது போராட்டத்தை மானசீகமாக ஆதரித்தவர்கள் கூட கண்டிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டனர். பல தீவிரவாத அமைப்புக்கள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல்கள் கூட PLO வின் தலையில் வீழ்ந்தது. இஸ்ரேலுக்கும் அதனை வளர்த்து வரும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான தாக்குதல் என்பதால் அரபு மக்கள் இவ் வெற்றிகளை கொண்டாடவும் செய்தார்கள். இந் நிலைமைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி PLO வை ஒரு பயங்கரவாத அமைப்பாக இலகுவில் முத்திரை குத்துவதற்கு ஏகாதிபத்தியங்களுக்கு வாய்ப்பாகியது. 1972 இல் முன்சனில் (Munich) இடம்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்களின் போது 11 இஸ்ரேலியர்களை படுகொலை செய்தமையானது அன்று பெரும் இழுக்கை பாலஸ்தீனர்களுக்குத் தேடித் தந்தது. தொடர்ந்து 1990 இல் இடம்பெற்ற ஈராக்கினது குவைத் ஆக்கிரமிப்பின் போது மேற்குலக கூட்டுப்படைகளுக்கும் ஈராக்குக்கும் இடம்பெற்ற யுத்தத்தில் ஈராக் அதிபர் சதாம் குசைனை அரபாத் ஆதரித்தமையானது, பல அரபு நாடுகளின் மத்தியில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மீது வெறுப்பைக் கிளறியது. இதன் விளைவால் குவைத், சவூதி அரேபியா மற்றும் எமிரேற் நாடுகளில் தொழில்புரிந்த பல பாலஸ்தீன தொழிலாளர் பலவந்தமாக நாடுகடத்தப்பட்டனர். இவ்வாறாக PLO வின் நடவடிக்கைகள் அதனையோர் சிக்கல் நிறைந்த போராட்ட சூழலுக்கு இட்டுச் சென்றது. இதனால் அரபுநாடுகளின் மத்தியிலேயே அதன் செல்வாக்கு சரிய வேண்டிய நிலை உருவானதுடன், PLO விற்கான நிதிவழங்கலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதிப்படைந்தது. என்றுமில்லாதவாறு நெருக்கடியில் சிக்க வேண்டி ஏற்பட்டது.

இவை மட்டுமன்றி சோவியத்யூனியனின் சிதைவு, பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாகவும் இஸ்ரேலுக்கு எதிராகவும் நீண்டகாலமாக யுத்தத்தில் பங்கெடுத்து வந்த எகிப்து தனது யுத்தத்தை கைவிட்டு இஸ்ரேலுடன் சமரசம் செய்துகொண்டமை, மத ரீதியில் பாலஸ்தீனத்தை கையாண்டு வந்த ஈரான் அதிபர் அயத்தொல்லா கொமெய்னியின் இறப்பு, அமெரிக்காவிற்கு எதிராக பல பயங்கரமான தாக்குதல்களை வெளிப்படையாக மேற்கொண்டு வந்த லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி அமெரிக்காவால் பலமாக நசுக்கப்பட்டு பெட்டிப் பாம்பாகியமை, யோர்டான் அரசர் குசையின் உறுதியற்ற போக்கு, லெபனான் நாட்டு தலைநகரான பெய்ரூட் இஸ்ரேலின் தாக்குதலினால் அழிவுக்குள்ளானமை, பாதுகாப்பு செலவுகள் அதிகரித்ததுடன் பாலஸ்தீன அகதிகளை பராமரிப்பதற்கான செலவு என கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளமை PLO வை பலவீனப்படுத்தும் அம்சங்களாக இருந்து வந்துள்ளது. மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஓர் பேச்சுவார்த்தை சூழ்நிலைக்கு இழுத்துச் சென்றுள்ளதை உணரமுடிகின்றது.

இனி ஒப்பந்தத்திற்கு வருவோம். 1990ம் ஆண்டு ஆரம்பமான குவைத் ஈராக் பிரச்சனையை சாட்டாக வைத்து ஈராக் மீது அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் அமெரிக்கா பெற்ற எதிர்பாராத வெற்றியும், ஈராக் அதிபர் சதாம் குசைன் பலவீனமடைந்தமையினால் அங்கு ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்த குர்திஸ் இன மக்களின் எழுச்சியை கையாண்டதில் கிடைத்த வெற்றியும், தன்னை ஓர் சமாதான நாயகனாக காட்டிக் கொள்ளும் வாய்ப்பு அமெரிக்காவிற்கு கிடைத்தது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் அரபு நாடுகள் தமக்குள் மோதிக் கொண்டிருந்த போதும் அரபு மண்ணுக்குள் இஸ்ரேலினது செயற்பாடுகளை ஆதரிக்கத் தயாராக இருக்கவில்லை. இந்நிலையில் அந்நாடுகளால் பாலஸ்தீன மக்களுக்கான ஓர் தீர்வை போலியாகவேனும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அத்துடன் எதிர்காலத்திலும் தனக்கெதிராக செயற்படக்கூடிய அணியாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் திகழ்ந்தமையால் அதனை முடக்கவேண்டிய ஓர் அவசியம் அமெரிக்காவிற்கு ஏற்பட்டது. இதற்கான முதல் முயற்சியில் அன்றைய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பெக்கர் செயற்பட ஆரம்பித்தார். PLO முதலில் இதற்கு மறுப்பு தெரிவித்திருந்த போதும் பின்னர் சில பிரதிநிகளை அனுப்ப சம்மதித்திருந்தது. இஸ்ரேலும் மறுப்பைத் தெரிவித்த போதிலும் பெக்கரின் தொடர்ச்சியான இஸ்ரேலிய விஜயம் அதனையும் சம்மதிக்க வைத்தது. இந்த ஏற்பாட்டின் பேரில் 1991 செப்ரெம்பர் 30 ந் திகதி மட்றிட் நகரில் இதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தை இடம்பெற்றது. பாலஸ்தீன விடுதலை இயக்க சார்பில் அரபாத் இதில் கலந்து கொள்ளாது, சில பிரதிநிதிகளும் வேறு அரபு பிரதிநிதிகளுமே கலந்து கொண்டனர். அதில் தொடர்ந்து இப்பிரச்சனை தொடர்பாக பேசுவதற்கான உடன்பாடு காணப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலும் புதிய ஜனாதிபதி மாற்றத்தையும் தொடர்ந்து நோர்வே அரசு பிரதிநிதிகளின் முயற்சியில் இதற்கான உட்சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்று கடந்த செப்ரெம்பர் 13 ந் திகதி வாசிங்டனில் வைத்து பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்திற்கும் இஸ்ரேலிய பிரதமர் ராபினுக்கும் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் வருமாறு 1967 ம் ஆண்டு இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா பிரதேசம், வெஸ்பாங் நகரத்தையும் சுயாட்சிப் பிரதேசங்களாக அங்கீகரிப்பதெனவும், இப் பிரதேசத்தின் பாதுகாப்பு இராணுவம் இஸ்ரேல் வசமே இருப்பதெனவும், உள்நாட்டில் சட்டம், நீதி, நிர்வாகம், கல்வி அதிகாரம் முதலியன பாலஸ்தீனர்கள் வசம் ஒப்படைக்கப்படும். நிர்வாகத்திற்கான குழுவை முதலில் PLO வே நியமிக்கும்.

பத்து மாத இடைவெளிக்குள் தேர்தல் நடத்தி முறையான நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்படும். இவ் உத்தேச ஒப்பந்தத்தின் பிரகாரம் ஐந்து வருடகாலத்தில் இஸ்ரேலிய இராணுவம் படிப்படியாக இப் பிரதேசத்தை விட்டு வெளியேறும். இரண்டு வருடம் கழித்து இப் பிரதேசங்களில் புதிதாக குடியேற்றப்பட்ட யூதர்கள் பற்றியும் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட கிழக்கு ஜெருசலேம் பற்றியும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகும். யோர்டானின் மேற்குக் கரையிலும் படிப்படியாக இதே நடைமுறை ஆரம்பமாகும். இவ் ஐந்து வருட காலத்திற்கான வேறு முறைகள் இவ் ஒப்பந்தத்திலேயே வரையப்பட்டுள்ளன. இதுதான் ஒப்பந்தத்தின் முக்கிய சாராம்சம்.

ஒப்பந்த ஏற்பாட்டின்படி பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேலும், இஸ்ரேலை பாலஸ்தீன விடுதலை இயக்கமும் பரஸ்பரம் அங்கீகரித்துக் கொண்டன. இன்றைய இஸ்ரேலிய அதிபர் ராபின் தனது தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முக்கிய வாக்காளராக இருந்த பாலஸ்தீனப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட யூதர்களிற்கு (இவர்கள் அடிக்கடி யுத்தங்களினால் பாதிக்கப்படுபவர்கள்) அளித்த தேர்தல் வாக்குறுதியான பாலஸ்தீனர்களிடம் இருந்து நிரந்தர பாதுகாப்பை பெற்றுத்தருவேன் என்பதை நிறைவேற்ற கிடைத்த சந்தர்ப்பமாக இதை கருதியமையும், அத்துடன் இவ் ஒப்பந்தம் சம்மந்தமாக இஸ்ரேலினுடைய




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யெடியோட் அப்ரோறோட் என்ற பத்திரிகை நடாத்திய கருத்துக் கணிப்பில் 53 சதவீனமானவர்கள் ஆதரித்திருப்பதாக அறியமுடிகின்றது. இதில் பெரும்பான்மை யானவர்கள் புதிய குடியேற்ற வாசிகள் என்பது கவனத்திற்குரியது. மாறாக PLO இன்று மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து செல்லும் அதேநேரம் பல இடதுசாரிக் குழுக்களும், ஈரான் சார்பு மத அடிப்படைவாதக் குழுக்களும் பலம்பெற்று வருவதால் PLO வை அங்கீகரித்து ஒரு சமசரத்துக்கு வந்து நிலைமையை சமாளிக்கலாம் என இஸ்ரேல் கருதியிருக்கவும் வாய்ப்புள்ளதாக உணரமுடிகின்றது. இவ் ஒப்பந்தத்தை ஆதரித்து இஸ்ரேலின் பல இடங்களில் ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளன. அதேநேரம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நிகழ்ந்துள்ளது. வாசிங்டனில் இடம்பெற்ற ஒப்பந்த நிகழ்ச்சியில் அரபாத்தும் ராபினும் பரஸ்பரம் கைகுலுக்கிக் கொள்வதற்காக அரபாத் முயன்றபோது, ராபின் தெரியாதது போல் நிற்க, கிளின்ரன் ராபினைத் தட்டி கைகுலுக்க வைத்தமையை காட்டி ராபின் இவ் ஒப்பந்தத்தில் மனப்பூர்வமாக பங்குபற்றினாரா என தொலைக்காட்சிகளும் பத்திரிகைகளும் சர்ச்சையை கிழப்பின. அதேநேரம் ராபினதும் வெளியுறவு அமைச்சர் பெரசினதும் பேச்சுக்கள் உணர்வு பூர்வமானவை என கூறின.

பாலஸ்தீனர்கள் பக்கத்தில் சமாதானம், ஒப்பந்தம், சுயாட்சி என்றவுடன் அவர்கள் அடைந்த உற்சாகம் தனியானதுதான்! அத்தகைய கொடுமைகளை அனுபவித்ததன் வெளிப்பாடு இது. ஆனால் இஸ்ரேல் இவ்வளவு தூரம் இறங்கி வந்ததென்பது இன்னமும் நம்பமுடியாமலே உள்ளது. இந்த அரை நூற்றாண்டு காலம் வரை எத்தனையோ சமாதான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டது. அதையெல்லாம் இஸ்ரேல் எவ்வாறு மீறியதென்பதை வரலாற்று அனுபவங்கள் மூலம் நிறையவே கற்றுள்ளார்கள். இங்கு முக்கியமான கவனத்துக்குரிய கருத்து, அரபாத்துடன் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் தோளோடு தோள் நின்று போராடிய, PLO வைப் போல் சமபலம் உள்ள இடதுசாரி அமைப்பான பி.எல்.எவ்.டி யின் தலைவரான ஜோர்ஜ் வாஸினது கருத்து, அதாவது இவ் ஒப்பந்தமானது ஒரு வெறும் கண்துடைப்பு எனவும் இவ் ஒப்பந்தத்தை தாம் எதிர்ப்பதாகவும் பாலஸ்தீனர்களது பூரண விடுதலை நோக்கி தொடர்ந்து போராடப் போவதாகவும் சூளுரைத்துள்ளார். அத்துடன் PLO வில் இருந்து பிரிந்து சென்ற தீவிரவாத அமைப்புக்களும் இதனை எதிர்த்துள்ளதோடு அரபாத் பாலஸ்தீனர்களுக்கு துரோகமிழைத்து விட்டதாகவும் அவருக்கு மரணதண்டனை விதித்துள்ளதோடு அதை நிறைவேற்றுபவர்களுக்கு 50.000 டொலர் பரிசுத் தொகையும் அறிவித்துள்ளது. இதற்கான முதல் முயற்சியில் அரபாத் தப்பியுள்ளார். அத்துடன் அமெரிக்கா சார்புடைய சவூதி அரேபியா, ஓமான், பா:ரெய்ன், எகிப்து போன்ற நாடுகளே இவ் ஒப்பந்தத்தினை வரவேற்றுள்ளன. மறுமுனையில் PLO விற்கு இதுவரையும் பலவழிகளிலும் உதவி செய்து வந்த லிபியா, லெபனான், சிரியா பேன்ற நாடுகள் இவ் ஒப்பந்தமானது அமெரிக்காவின் கபட நாடகம் எனவும், அரபாத் அமெரிக்காவின் சதிக்கு துணைபோய்விட்டதாகவும் கண்டனம் செய்துள்ளனர். அரபாத்தும் அவரது சகாக்களும் இவ் ஒப்பந்தமானது சுதந்திர பாலஸ்தீனத்தை நோக்கிய முதல் படியே எனவும் இவ் ஒப்பந்தத்தின் மூலம் பாலஸ்தீன மக்களின் முழு அபிலாசைகளையும் பூர்த்தியாக்க முடியும் என்பதில்




தமக்கு இன்னமும் நம்பிக்கையில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இன்று இஸ்ரேல் சுயாட்சிப் பிரதேசமாக அங்கீகரிக்க முன்வந்துள்ள காஸா பிரதேசமும், ஜெரிக்கோ நகர்ப்பகுதியும் பாலஸ்தீனர்கள் செறிவாகவும் இஸ்ரேலியர்கள் மிகச் சிறுபான்மையினராகவும் வசிக்கும் பகுதிகளாகும். ஏற்கனவே இஸ்ரேலியர்களினால் அபகரிக்கப்பட்ட ஜெருசலேம் நகரையிட்டு இவ் ஒப்பந்தத்தில் உறுதியாகப் பேசப்படவில்லை. ஜெருசலேம் நகரும் முன்னர் பாலஸ்தீனர்களது நகரமாகவே இருந்தது. இப் பகுதியில் இருந்து பாலஸ்தீனர்களை விரட்டியடித்து படிப்படியாக யூதர்களைக் குடியேற்றி இன்று அப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள பாலஸ்தீனர் மிகச் சிறுபான்மையினராக ஆக்கப்பட்டதுடன், ஜெருசலேமை இஸ்ரேலின் ஒரு நகரமாக உரிமை கோருகின்றது இஸ்ரேல். இந் நடவடிக்கையை இலங்கையில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் எவ்வாறு திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் மூலம் பறிக்கப்பட்டதோ அத்தகைய ஓர் நடவடிக்கை போன்றதே. இதுவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னர் தமிழர்கள் மிகப் பெரும்பான்மையாக வாழ்ந்த கிழக்கு மாகாணம் இன்று சிங்களவர் பெரும்பான்யாக வருவது போன்று ஜெருசலேமிலும் இடம்பெற்றது. இன்று சிங்கள அரசு வடக்கைத் துண்டித்து கிழக்கு மாகாணத்தை சிங்களவர்களது பிரதேசமாக ஆக்கிக் கொள்ள முனைவது போன்றே இஸ்ரேலியர்கள் மிக மிகச் சிறுபான்மையாகவுள்ள பகுதிகளை மட்டும் பாலஸ்தீனர்களுக்கு வழங்க முன்வந்துள்ள நடவடிக்கையாகும். குறைந்த பட்சம் கிழக்கு ஜெருசலேமையாவது பாலஸ்தீனர்களுக்கு வழங்க வேண்டுமென்பது சம்பந்தமாக அப் பகுதியில் வசிக்கும் PLO பிரதிநிதிகள் அரபாத்துக்கும் ராபினுக்கும் எகிப்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது உறுதிசெய்ய வேண்டுமென அரபாத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இது, தொடரும் பேச்சுக்களை ஓர் இக்கட்டான நிலைக்கு தள்ளியுள்ளது. இஸ்ரேல் இன்னமும் உலகெங்கும் சிதறி வாழும் யூதர்களை இஸ்ரேலில் வந்து குடியேமாறு தொடர்ந்து அழைப்பு விடுத்த வண்ணம் உள்ளது.

இவ் ஒப்பந்தத்திற்குள் அரபாத்தை விழ்த்துவதன் மூலம் பாலஸ்தீன போராளிகள் குழுக்களை மேலும் பிளவுபடுத்தி தமக்குள் மோதவைப்பதன் மூலம் இஸ்ரேல் மீதான யுத்தத்தை திசைதிருப்பி விட மேற்கொண்ட முயற்சியாகவும் கருத வேண்டியுள்ளது. தற்போது அங்கு இடம்பெறும் அரபாத்திற்கு எதிரான ஒப்பந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் இதனைக் கோடிட்டுக் காட்டுகிறது. கடந்த காலத்தில் பல்வேறு முரண்பாட்டின் மத்தியிலும் இஸ்ரேலுக்கு எதிராக போராடுவதில் ஒன்றாக கைகோர்த்து நின்ற போராட்டக் குழுக்களை இவ் ஒப்பந்தம் நிரந்தரமாக பிளவுபடுத்தியுள்ளது. அத்துடன் சிரியா, லெபனான், ஜோர்டான் மற்றும் அரபு நாடுகளில் மில்லியன் கணக்கான மக்கள் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந் நாடுகளின் விருப்பத்திற்கு மாறாக இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை யானது இவ் அகதிகள் பிரச்சனையை சிக்கலாக்கியுள்ளதாக அறிய முடிகின்றது. ஜோர்டான் மன்னருக்கும் ராபினுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் இப் பிரச்சனை முக்கிய இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவை தவிர இவ் ஒப்பந்தத்தின் மூலம் பாலஸ்தீனத்தை அங்கீகரித்து அதற்கு உலக வங்கி உட்பட பல நாடுகள் நிதியுதவி செய்ய முன்வந்திருக்கும் அதேவேளை இஸ்ரேல், பாலஸ்தீனம், யோர்டான் தலைவர்களுக்கிடையே நடத்தும் பேச்சுவார்த்தைகளில் ஒப்பந்த நிபந்தனைகளையிட்டு பேசுவதைவிட இந் நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகள் பற்றி பேசுவதற்கே அங்கு அழுத்தம் கொடுப்பதானது ஒப்பந்தத்தையிட்டு பல்வேறு சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட பல்வேறு சிக்கலான பிரச்சனைகளை பின்தள்ளி இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது. இருப்பினும் அரை நூற்றாண்டு யுத்த மேகங்களின் கீழ் தமது வாழ்க்கையை கழித்த பாலஸ்தீன மக்களுக்கு இன்று கொடுத்த குறைந்தபட்ச வாக்குறுதிகளையாவது நேர்மையுடன் நிறைவேற்றி அதன்படி இஸ்ரேல் செயற்படுமாயின் இவ் ஒப்பந்தம் ஓர் நல்ல சகுனமே. அதைவிடுத்து கடந்தகால ஒப்பந்த மீறல்கள் போல் தனது பாதையில் செயற்பட முனைந்தால் பாலஸ்தீன மக்களது போராட்டமானது அரபாத் போன்றவர்களையும் ஓரம்கட்டி தொடர்ந்து முன்னேறுவதை எந்த ஒப்பந்தங்களினாலும் தடுத்துவிட முடியாது.

**வரதன்**

— 1947 நவெம்பர் 29ம் தேதி ஆங்கிலேயர் அரபு நாடுகளை விட்டு வெளியேறினர்.
— 1948 மே இஸ்ரேல் என்ற நாடு பிரகடனம் செய்துகொள்ளப்பட்டது.
— 1964 யூன் 2ம் தேதி ஜெருசலேம் நகரில் வைத்து பாலஸ்தீன இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது.
— 1967 யூனில் இஸ்ரேல் தனது அயல்நாடுகளான எகிப்து, சிரியா, பாலஸ்தீனம், ஜோர்டான் ஆகியவற்றின்மீது கடுமையான தாக்குதலைத் தொடுத்தது. எகிப்தின் சீனாய் பாலைவனத்தின் பெரும்பகுதியையும் சிரியாவின் கோலான் குன்றுகள் (மலைப் பிரதேசம்) பாலஸ்தீனத்தின் கிழக்கு ஜெருசலேம், காஸா பிரதேசம், வெஸ்ட் பாங் நகரம் (West Bank) போன்றவற்றையும் ஜோர்டானின் மேற்குப் பகுதி சிலவற்றையும் கைப்பற்றிக் கொண்டது.
— 1973 ஒக்டோபரில் மீண்டும் எகிப்தின் மீதும் சிரியா மீதும் தாக்குதல் தொடுத்து சுயஸ் கால்வாயைத் தனதாக்கிக் கொண்டது.
— எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக 1977ம் ஆண்டு நவெம்பர் 19 இஸ்ரேல் சென்றார். இஸ்ரேலுக்கு முதலில் சென்ற அரபுத் தலைவர் சதாத் என்பதும், இதற்காகப் பாலஸ்தீனப் போராட்டக் குழு ஒன்றினால் ஜெருசலேம் இல் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.
— 1979 ம் ஆண்டு இடம்பெற்ற காம் டேவிற் உச்சி மாநாட்டுத் தீர்மானப்படி எகிப்தின் சீனாய் பாலைவனத்தை மீண்டும் எகிப்திடம் கையளித்தது.
— 1990 ஆகஸ்டில் பாலஸ்தீனப் பிரதேசத்திலிருந்து இஸ்ரேலியர்கள் வெளியேற வேண்டுமென ஈராக் வருட யுளளை மீது ஏவுகணைத் தாக்குதல் நடாத்தியது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சாமிபாபா**

# ஓர் அவதார புருஷனின் அவலம்

-சி. வசந்தன்

மனிதன் தன் சிந்தனையை வளர்த்துக் கொள்ள முயன்ற ஆரம்பகால தேடல் முயற்சிகளில், இயற்கையின் சீற்றங்களுக்குகான காரண காரியங்கள் புரியாதபோது எழுந்த பய உணர்வின் வெளிப்பாடே தன்னிலும் மேலானதோர் சக்தி பற்றிய அறிவாகும். சுருங்கக் கூறின் தன்னிலும் மேலான அந்த சக்தியின் விருப்பு, வெறுப்புகளுக்கான காரணங்களே தான் சந்திக்கின்ற அனர்த்தங்கள் என எண்ணினான்.

மனிதனது பட்டறிவானது வரலாற்றோடு வளர்ந்து கொண்டு வருகின்ற வேளையில், இயற்கையின் பூடகமான இரகசியங்கள் அவிழத் தொடங்கின. அவற்றில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ள இனிமேலும் அந்த சக்தியை மட்டும் அவன் நம்பியிருக்கத் தயாராக இல்லை. அதனால்தான் போலும் கோயில் கோபுரத்தின் மீதும் இடிதாங்கியை நட்டு இடியின் தாக்குதலில் இருந்து கோயிலை காப்பாற்ற வேண்டியவனாகிவிட்டான்.

ஆனால் சமுதாய அளவில் அவன் எண்ணியபடி கருமமாற்ற முடியாது உள்ளது. அவன் என்னதான் முயன்றாலும் தான் விரும்புகின்றவற்றில், தான் நினைப்பவற்றில் சிலவற்றை மட்டுமே சாதிக்க முடிகிறது. அவன் விரும்புகின்ற பலவற்றை நிர்ணயிக்கும் காரணிகளாக புற உலகில் பல்வேறு சக்திகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த ஏனையவர்களான பிறர், அரசு மற்றும் நிறுவனங்கள், இனம், தேசம், மொழி ....என்பவற்றிற்கு தகவமைந்து அல்லது முரண்பட்டே வாழவேண்டியிருந்தது. இதுவே சமுதாயத்தின் முன்னான அவனது நிர்க்கதி நிலையாகும்.

இவற்றை வெற்றிகொள்ள பகுத்தறிவை நாடாது தனது துன்பியலின் விடியலை வேண்டி இறைவனிடம் சரணடைகின்றான்.இறைவனிடம் சரண்புகுந்த மனிதன் இரப்பவை எதுவும் கடவுள் காதுக்கு எட்டாது. அப்போ அவன் ஏன் மீண்டும் மீண்டும் கடவுளை நாடுகின்றான்? தனக்கு வேண்டியதை, தனது எதிர்பார்ப்பை பூர்த்தியாக்காத, தனது துயரங்களை போக்காத ஒன்றை அவன் வழிபடவேண்டிய இழிநிலை. இதற்குத்தான் உலகம் முழுவதும் நிறுவனமாகிவிட்ட மதபீடங்கள், மதப் பிரச்சாரங்கள், தத்துவங்கள், கோசங்கள், குருமார்கள் என்று ஒவ்வொரு மதமும் தனக்கேயுரிய சூழல், பண்புகள் அளவுக்கேற்ப உருவாகி உள்ளது. இவற்றின் தொடர்ச்சியான பிரச்சார வலிமையே மனித மனம் இலகுவில் கடவுளைவிட்டு அகலாததிற்கு காரணம்.

பரீட்சைக்குச் செல்லும் மாணவனுக்கு தெரியும், தான் படிக்காமல் இருந்திருந்தால் சித்தியடைந்திருக்க முடியாது என்று. இருந்தும் தான் அன்றாட வழிபட்ட கடவுளே தன்னை சித்தியடைய வைத்திருப்பதாக எண்ணுகிறான். வயலில் நின்று உழாமல் கடவுளை மட்டும் வழிபட்டுக்கொண்டு நின்றால் பயிர் அறுவடையாகாது என்று விவசாயிக்குத் தெரியும். ஆனாலும் கடவுளே பயிர் விளைச்சலுக்கு காரணம் என அவன் நம்புகின்றான். இப்படி தனது உழைப்பினால் அடைந்த பயன்கள் யாவும் கடவுளால் கொடுக்கப்பட்டவையென்றே சிந்திக்குமளவுக்கு மனிதன் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளான்.

இத்தகைய தன்னை இழந்த மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் தரகர்கள் போல அவதார புருஷர்களாக தங்களை கூறிக்கொண்டு குட்டிச் சாமிமார்கள் வேறு, பலவகையான அவியல் தத்துவங்களால் அவனை குழப்புகின்றார்கள். மனிதனும் தனது கோரிக்கையை கோயிலில் நின்று காலங்காலமாக வைப்பதைவிட, இத்தகைய குட்டிச் சாமிகளிடம் தெரிவித்துவிட்டால் இலகுவில் தனது கோரிக்கை கடவுளிடம் சென்றடைந்துவிடும் என நம்புகின்றான். அதானால்தான் இன்று சாமிபாபா, குருபாபா ரஜினிஸ், பிரேந்திர .... போன்ற குட்டிச் சாமிமார்களுக்கு மிகவும் கிராக்கியாக உள்ளது. இச் சாமிமார்களும் மனிதனின் பலவீங்களை நன்றாக தெரிந்துகொண்டும், கறப்பதற்காக பணக்காரர்களிடம் ஒட்டிக்கொண்டும், பிரபல்யத்துக்காக சாமானியர்களை பகைத்துக் கொள்ளாதும் சித்துவேலைகள் புரிந்து வருகின்றனர்.

முன்னர் என்றால், சாமியாராக ஆவதற்கு குறைந்தபட்சம் எளிமை வேண்டும். காவி உடை, உருத்திராட்சம், விபூதி .... இப்படி சில்லறைச் சாமன்கள் போதும். யாருமே நினைத்த மாத்திரத்தில் சாமியாராக ஆகிவிட முடியும். இப்போது சாமிமார்களும் அப்படியிருக்கத் தேவையில்லை. ஏனென்றால் மத்தியதர குடும்பங்களில் படித்தவர்கள் தொகை அதிகரிக்கின்றது. எல்லோருமே தம்மை விட அறிவாளிகள் இல்லையென்ற நினைப்பு வேறு பிடித்து ஆட்டுகிறது. சமூக அளவில் பிரச்சனைகளும் அதிகரித்துக் கொண்டு செல்லுகிறன. ஒருவர் மீதும் நம்பிக்கை வைக்க முடியாது உள்ளது. மனதிற்கு நிம்மதி வேண்டும். அந்தக் காலங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆன்மாவிற்கு விடுதலை வேண்டிப் புறப்பட்டவர்கள் துறவறம் பூண்டார்கள். இல்வாழ்வின் இன்ப, துன்பங்களை நிராகரித்துவிட்டு காடு மலைகளில் தவம் புரிந்தார்கள். இப்போ காலம் மாறிவிட்டது. வாழ்வே இயந்திரகதியாகிவிட்டது. ஆடம்பர வீடுகள், பதவிகள், கார்கள் ...போன்ற இன்னோரன்ன, தங்களது போலிக் கௌரவங்களுக்கு சாட்சிகளாயுள்ளவையும் வேண்டும். கூடவே சற்று மன நிம்மதியும் வேண்டும்.

தாங்களும் எதையும் இழக்க தயாரில்லாதபோது தங்களது சாமியாரிடமும் இவர்கள் எளிமையைப் பார்ப்பதில்லை. அன்பான பேச்சு, ஆறுதலுக்கு சிறிது அருளுரை (24 மணிநேர தொலைபேசி சேவையிலும் கிடைக்கிறது), பணக்காரர்கள் தங்களது மோசடிக்குப் பாவமன்னிப்பு அதாவது சாமிக்கும் கொள்ளையில் கொஞ்சம் பங்கு (அது அறக்கட்டளை, அன்பு இல்லம், கல்வி நிலையம் ... என்று பல்வேறு வழிகளில் செலுத்தப்படும்).

இத்தகைய கொள்ளைக்கார நவீன சாமிகளில் முதலிடம் பெறுபவர்தான் சாயிபாபா. பரட்டைத் தலை, டாம்பீகமான ஆடைஅணிகள், மன்னர்கால சிம்மாசனம் போன்ற இருக்கைகள், பயணம் செய்ய ஆடம்பர சொகுசு கார்கள், விமானங்கள், காவலர்கள், ஏவல்புரிய பக்தர் கூட்டம்! இப்படியும் ஏமாற்ற முடியும் என்பதற்கு சாட்சியாய் தன்னை ஓர் அவதார நாயகனாக பாவனை பண்ணித் திரிபவர்தான் சாயிபாபா. தனது அவதார புருசன் இமேஜ்ஜை தக்கவைப்பதற்கு கிப்னாட்டிசம், மெஸ்மெரிசம் போன்ற உளவியல் முறைகளையும் சில மாஜிக் வகைகளையும் வைத்துக் கொண்டு தாராளமாகவே சனங்களை ஏமாற்றத் தெரிந்தவர். சாதாரண மக்கள் சாயிபாபா கைகளை சுழற்றி அந்தரத்தில் விபூதி எடுப்பதையும், தங்க மோதிரம், சிவலிங்கம் எடுப்பதையும் பார்த்து பிரமித்து நிற்பர்.

இத்தகைய மாஜாஜால செயல்கள் மூலம், தான் கடவுளிடம் தொடர்புடையவராக மக்களுக்கு காட்டிக் கொள்கின்ற அதேசமயம், நிஜவாழ்க்கையில் சாயிபாபா சிறுவர்களுடன் தன்னினச் சேர்க்கை (Homo Sexuall) போன்ற பாலியல் வக்கிரங்களிலும், ஆடம்பர கேளிக்கை வாழ்க்கை முறைகளிலும், அரசியல்வாதிகள் பெரும் பணக்காரர்கள் கடத்தல்காரர்களின் God Father போன்றும் செயற்பட்டு வருகின்றார். இதன் பின்னணியில் தான் அண்மையில் சாயிபாபாவின் மாளிகையில் உள்ள விடுதியில் தங்கி கல்வி பயிலும் நான்கு மாணவர்கள் சாயிபாபாவை கொலைசெய்ய முயன்ற சம்பவத்தை நோக்க முடிகிறது.

இதன்போது சாயிபாபா கதவை உட்புறமாக தாழிட்டு விட்டு பின்பக்க வழியாக உயிரைக் காப்பாற்ற தப்பியோடியது மட்டுமல்லாமல், மற்றவர்களின் உதவிக்காக அபாய ஒலி எழுப்பும் பொத்தானையும் (Alarm) அழுத்தி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியேற்பட்டது. பின்னர் வந்த பொலிஸ் நிராயுதபாணிகளான அம் மாணவர்களை கைதுசெய்யக்கூட முயற்சிக்காமல் சுட்டுக் கொன்றது. இந்த வகையில் இந்திய அரச மேலிடம் சாயிபாபாவின் மோசடிகள் அம்பலத்திற்கு வராது தடயங்களை அழிப்பதில் சாயிபாபாவிற்கு துணை நின்றது. இதுவரை சாயிபாபாவை அவதார புருசனாக தலையில் வைத்துக் கொண்டாடிய இந்தியப் பத்திரிகைகள் எல்லாம் இப்போ சாயிபாபா தன்னைக் காப்பாற்ற விஞ்ஞானத்தை (அபாய ஒலியை இயங்க வைக்க வேண்டிய தேவை) நாடவேண்டிய தேவை ஏன்? எனக் கேள்வி எழுப்புகின்றன.

1976 களிலேயே சாயிபாபாவின் செயல்கள் ஒன்றும் கடவுள் அனுக்கிரகம் அல்ல, வெறும் மோசடியே என்று அம்பலப்படுத்தினார் பிரபல மனோதத்துவ நிபுணரும் பகுத்தறிவுவாதியுமான காலம் சென்ற டாக்டர் கோவூர் அவர்கள். அந் நாட்களில் கோவூர் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பல ஊர்களிற்குச் சென்று சாயிபாபா செய்வது போல அந்தரத்தில் கையசைத்து விபூதி எடுத்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி சாயிபாபாவின் சித்துவேலைகளை அம்பலப்படுத்தினார். சாயிபாபா உட்பட உலகம் பூராக உள்ள இப்படியான சித்துவேலைக்காரர்கள், சோதிடர்கள், மந்திரவாதிகள் எல்லோருக்கும் பகிரங்க சவால் விட்ட கோவூர் 20க்கு மேற்பட்ட போட்டிகளை வைத்து அவற்றில் ஒன்றைத்தன்னும் செய்து காட்டி தனது ஒரு லட்சம் ரூபா பரிசை வெல்ல முடியுமா என்று கேள்வியெழுப்பினார். தனது அவதாரத் தன்மைக்கு விடப்பட்ட இச் சவாலை சாயிபாபா சந்திக்க தயாராகக்கூட இருக்கவில்லை.

இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் நரசிம்மாயா என்பவர் தலைமையில் இயங்கும் பகுத்தறிவாளர்கள் குழு சாயிபாபா படத்திலிருந்து விபூதி தோன்றுவதற்கு காரணம், படத்தின் சட்டத்தில் லாக்டிக் அமிலத்தை தெளித்து விட்டால் காற்றில் உள்ள ஈரப்பதனுடன் அது தாக்கமுற்று சாம்பல் உருவாகும் என்றும், மேலும் மோதிரம், சங்கிலி, கைக்கடிகாரம், எடுப்பதெல்லாம் வெறும் மாஜிக் மூலமே, இதில் மந்திரமில்லை என்று அம்பலப்படுத்தியுள்ளனர். இதேபோன்று தமிழ்நாடு மக்கள் கலை இலக்கிய கழகத்தினரும் தங்களது மந்திரமா? தந்திரமா? என்ற நிகழ்ச்சியில் நாயின் படத்தை வைத்து அதிலிருந்து விபூதி கொட்டவைத்து பார்வையாளர்களை அதிசயிக்க வைத்து, இதில் மந்திரமில்லை என்று நிரூபித்துக் காட்டினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாயிபாபா போன்ற இத்தகைய குட்டிச் சாமியார்களது செயல்கள் எடுபடுவது கூடுதலாக மத்தியதர வர்க்கத்தினரிடம் தான்! ஏனென்றால் தாம் கற்கின்ற அறிவை தங்களது வாழ்க்கைக்கான ஒன்றாக விரித்துக் கொள்ளாமல் தனியே பரீட்சைக்காக, வேலைக்காக என்பதுடன் மட்டுமே நிறுத்திக் கொள்வார்கள். இத் தன்மைக்கு சிறுவயது முதலே பழக்கப்பட்டு கொள்கின்றார்கள். எப்படியெனில் பாடசாலையில், காலையில் சமய பாடத்தின் போது உலகமும், உயிர்களும் இறைவனாலேயே படைக்கப்பட்டது என்றும், பின்னர் விஞ்ஞான பாடத்தின் போது பூமியின் உருவாக்கம், உயிர்களின் பரிணாமம் பற்றிய விஞ்ஞானக் கோட்பாடுகளையும் படிப்பர். அவ்வாறே பரீட்சையிலும் சமய, விஞ்ஞான பாடங்களிற்கு ஏற்ப முறையே தமது பதில்களை எழுதுவர். சமய ஆசிரியர், விஞ்ஞான ஆசிரியர் இருவரின் கூற்றுக்கும் இடையேயான முரண்பாடுகளைப் பற்றி சிந்திப்பதில்லை. இத்தகைய கல்வி முறையினால் நடைமுறையில் சமுதாயத்தில் தங்களிற்கு ஏற்படுகின்ற நிர்க்கதி நிலைக்கு காரணமானவற்றை தேடித் தீர்ப்பதற்குப் பதில் கடவுள்களை, அவதார புருசர்களை தேடியோட வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். இவர்களின் இயலாமைக்கு ஏற்றாற் போலவே, இந்தக் குட்டி சாமிமார்களும் ஏதாவது அவியல் தத்துவங்களால் குளிப்பாட்டுவர். இதனால் எல்லாம் ஞானம் பெற்ற இவர்களும் பூஜை, பஜனை என்பதில் தங்கள் பொழுதை செலவிடுகின்றனர்.

நடந்து முடிந்த சம்பவங்களால் சாயிபாபா பற்றிய பிரமை பலர் மத்தியில் கலைந்து கொண்டு வருகிறது. ஆனாலும் என்ன! பகுத்தறிவு ரீதியாக மனிதன் தன் அறிவை அகல விரித்துக் கொள்ளாத வரையில் வேறு ஒரு குட்டிச்சாமியாரிடம் தங்களை இழக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

# நட்பும் நானும்

எனக்கு
எதிர்மாறாகவே
இந்த உலகம்
இருண்டு கிடக்கிறது.

இப்போதெல்லாம்
ஆவேசமும்
ஆக்ரோசமும் தான்
என்னில், அதிகமாய்
ஆர்த்தெழுகின்றன.

சோமாலியாவைப் போல்
வாழ்க்கையும்
பொஸ்னியாவைப் போல்
மனசும்
சுக்கு நூறாய்
சிதறிக்கிடக்கிறது.

இந்த உலகமும்
மனிதர்களும்
நன்றி கெட்டவர்கள்
என்னைப் பாருங்களேன்
நன்றாகவே புரியும்.

இந்த உலகின்மீதும்
இந்த மனிதர்களின் மீதும்
வானம் எரிந்து
அக்கினித் துண்டுகளாய்
விழுந்தாலும் என் ஆவேசமும்
ஆத்திரமும் தீரப்போவதில்லை.

நன்றாகவே பட்டுவிட்டேன்
இருந்த நம்பிக்கைகளும்
காக்கைகள்
கொத்தித் தின்ற
சோற்றுப் பருக்கைகளாய்
காணாமல் போய்விட்டது
அந்த நண்பர்களுடன். . . . .

P. ரவிவர்மன்
(16. 5. 93)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரஷ்யா

# அதிகாரத் திமிரும் அதிரடித் தாக்குதலும்

மகத்தான அக்டோபர் புரட்சியை நடாத்தி உலக மக்களுக்கு விடியலின் வெளிச்சத்தைப் பாய்ச்சிய ரசிய வானில் இன்று முழுமையாய் இருள் கவ்விக் கொண்டது. மே தினத்தில் புரட்சிகர மக்கள் இராணுவம் அணிவகுத்த மொஸ்கோ நகரம் குருதியிலும் கொலையிலும் விழிபிதுங்கி நிற்கிறது. நாட்டின் பாராளுமன்றம் பீரங்கி குண்டுகளால் மாடிமாடியாய் சல்லடையிடப்பட்டது. ஜனநாயகத்தின் பெயரால் ஜனநாயகத்தின் ஆன்மா கொல்லப்பட்டது. எல்லாம் ஜனநாயக சர்வாதிகாரி என அழைக்கப்படும் பொறிஸ் ஜெல்சின் தலைமையில்.

சோவியத் யூனியன் உடைந்து வீழ்ந்த சுமார் இரண்டு ஆண்டுகளின் பிற்பாடு மொஸ்கோ நோக்கி சர்வதேச தொலைத் தொடர்பு சாதனங்கள் மீண்டும் தம் கண்களையும் காதுகளையும் அகலத் திறந்து வைத்திருந்தன. செப்ரம்பர் 22 ம் திகதி யெல்சின் பாராளுமன்றத்தைக் கலைத்ததைத் தொடர்ந்து ரசியாவின் இரு அதி உயர் அரசு அதிகார அமைச்சுக்களுக்கிடையேயான போட்டி உச்ச நிலைக்கு சென்றது.

மக்கள் திரள்களை விட மேற்கு நாடுகளின் குறிப்பாக அமெரிக்க கூட்டாளியின் ஆதரவைப் பெரிதும் நம்பி யெல்சின் அதிகாரப் போட்டியில் கைகளை உயர்த்திப் பிடித்தார்.



நாட்டின் பாராளு மன்றத்தினதும் 88 சுயாட்சி– சுயாட்சிப் பிரதேசங்களின் அதிகாரங்களையும் தனக்குக் கீழ் கட்டுப்படக் கூடிய சர்வாதிகாரியாக வெளிப்படுத்தினார்.பதிலுக்கு பாராளுமன்றம் யெல்சினை நாட்டின் அதிபர் பதவியிலிருந்து தூக்கியெறிந்ததோடு உப அதிபர் அலெக்ஸ்ஸாண்டர் றூஸ்கோய்யை நாட்டின் அதிபராக அதிரிவு செய்தது. நாட்டின் மக்களை வேலை நிறுத்தங்களில் குதிக்கும் படியும் மாபெரும் குற்றங்களை இழைக்கும் யெல்சினுக்கு எதராக இராணுவத்தை விழித்துக் கொள்ளுமாறும் பாராளுமன்றத் தலைவர் றூஸ்லல் கஜஸ்புலாரோவ் அறை கூவல் விடுத்தார்.

பாராளுமன்றம் தேசிய வெறியர்களதும் கம்யூனிஸ்டுகளதும் கூடாரமாகவே இருக்கிறது. நாட்டின் ஜனநாயகத்தையும் பொருளாதார சீர்திருத்தங்களையும் கொண்டுவருவதற்கு இது பெருந்தடை. எப்படியாயினும் இவர்களை பாராளுமன்றத்தில் (வெள்ளை மாளிகை) இருந்து விரட்டி துப்பரவு செய்யவேண்டும். ஜனநாயகத்தை மலரச் செய்ய வேண்டும் இதுதான் யெல்சின் யெல்சின் ஆதரவாளர்களின் வாதம்.

மேற்கு நாடுகளுக்கு அமெரிக்காவைப் பொறுத்தவரையும், தமக்கு நம்பத்தகுந்த கூட்டாளி யெல்சின் ஒருவரைத்தவிர ரசிய நாட்டில் யாரும் பிரபலமில்லாத நிலையில் யெல்சினைக் காப்போம் என உறுதியளித்தனர்.

அதிபர் யெல்சின் ஜனநாயக முறையில் தேர்தல் நடாத்தப் போவதாக அறிவித்ததை அசட்டை செய்து பலாத்கார முறையில் பாராளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு இவர்கள் கலகம் செய்கிறார்கள் இவர்களின் நோக்கம் மீண்டும் சோசலிச சோவியத் யூனியனைக் கட்டுவதே. இவர்களுக்கு ஜாரியவாதிகளும், புதிய நாசிய குழுக்களும் கம்யூனிஸ்டுக்களும் பெரும் ஆதராவாக இருக்கிறார்கள். இது ஆபத்தானது முறியடிக்கப்பட வேண்டியது. மேற்கின் பிரச்சார சாதனங்கள் உலகிற்கு (இதன் தலைவர் CNN செய்தி)இவ்வாறு அலறும் போது ரசிய பாராளுமன்ற பிரதிநிதிகளோ மக்கள் தாம் நாம் அவர்கள் எங்களை அங்கிகரித்திருக்கிறார்கள். ஜனாதிபதி தான் தோன்றித் தனமாக பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. இதற்கு எதிராக கடுமையாக போராடியே தீருவோம். பாராளுமன்றத் தேர்தலை எப்படி உரிய காலத்திற்கு முதல் நடாத்தப்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போவதாக அறிவித்தாரோ அப்படி ஜனாதிபத தேர்தலையும் ஒன்றாக நடாத்த வேண்டும். இல்லையேல் அதுவரை நாம் பாராளுமன்றத்தை விட்டு நகரப் போவதில்லை என்று சூழுரைத்தனர். இது ஒரு சிக்கலான கட்டம். யெல்சின் பராளுமன்றத்தைக் கலைக்கிறார். பாராளுமன்றத் தலைவர்களோ(சோவியத்துக்கள்) யெல்சினை ஜனாதிபதி பதவியிலிருந்து தூக்கி எறிவதாக அறிவிக்கின்றனர். குழப்பமாக இல்லையா? ஆம் இதற்கான காரணம் என்ன? ஜனாதிபதியும் சரி, பாராளுமன்றமும் சரி மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தாம் (1990-1991 ம் ஆண்டுகளில் கோர்பச்சேவ் ஆல் முறையே நடாத்தப்பட்ட பாராளுமன்றம், குடியரசுத் தலைவர் இதற்கான தேர்தல்களில்) சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பிற்பாடு ரசிய குடியரசுத் தலைவர் ரசியா நாட்டின் அதிபராகவும் பாராளுமன்றம் ரசியா நாட்டின் பாராளுமன்றமாகவும் அதிகாரத்தை நிறுவின. ஆக பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பழைய கம்யூனிஸ்டுக்கள், அதிகார வர்க்கம். இவர்கள் ஜெல்சினின் அதிதீவிர பொருளாதார சீர்திருத்த திட்டங்களுக்கு எதிராகவே எப்போதும் இயங்கி வந்தனர். பொருளாதார சீர்திருத்தங்களை செய்யக் கூடிய திறமையாளர் என்று யெல்சினால் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டவரையும் (கைடரை) சென்ற ஆண்டு பாராளுமன்ற பெரும்பான்மை தூக்கியெறிந்தது.

யெல்சின் அளவுக் அதிகமான அதிகாரங்களை கையில் எடுக்கிறார். ரசிய நாட்டின் தேசிய கௌரவத்தையே அமெரிக்காவுக்கு(மேற்கு நாடுகளுக்கு) விற்று விட்டார். என்ற பொதுவான கருத்து பாராளுமன்றத்தில் வளர்ந்து வந்தது.இது ஒரு எதிர்பலையாகி விட்டது. இதற்கு தலைமை கொடுத்தவர்கள் உப ஜனாதிபதியும் பாராளுமன்றத் தலைவரும். இவர்கள் இருவரும் சோவியத் யூனியன் உடைப்பின் போது யெல்சின் இரு தோள்களாக இருந்தவர்கள். பாராளுமன்றத்துக்கும் யெல்சினுக்குமான போட்டி முடிவுக்கு கொண்டுவர ஜெல்சின் மக்களிடம் ஒரு கருத்து கணிப்பீடு தேர்தல் நடாத்தப் போவதாக அறிவித்தார். இவ்வருடம் ஏப்ரல் மாதம் நிகழ்ந்த மேற்படி தேர்தலில் 58% க்கும் மேலான மக்கள் யெல்சினுக்கு எதிராகவே வாக்களித்தனர் இருந்தும் மீண்டும் ஒரு நெருக்கடியான நிலமை தோன்ற இந்தத் தேர்தலே காரணமாகியது. அது கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்காய் முன் மொழியப்பட்ட ஆறு கேள்விகளில் ஜனாதிபதியை அங்கீகரிக்கிறீர்களா என்பதற்கு ஆம் என்றும்.... பாராளுமன்ற தேர்தல் முன் கூட்டியே நடாத்தப்படுவதை விரும்புகிறீர்களா என்பதற்கு இல்லை என்றும் மக்கள் அளித்த தீர்ப்புதான் ஜனாதிபதியும் பாராளுமன்றமும் எதிர் முனைகளில் நின்று ஜனநாயக கயிறு இழுத்து போட்டி நடாத்த காரணமாகியது. (இந்த தேர்தல்கூட ஜனநாயக ரீதியில் நடைபெறவில்லை என்றும் சைபீரியா போன்ற பகுதிகளில் இருந்து முழுமையாக வாக்குகள் வந்து சேராத நிலையிலே முடிவுகள் அறிவிக்கப்பட்டதாயும் சில தகவல்கள்)

எப்படியோ ஜெல்சினைப் பொறுத்தவரை பழைய சோவியத்துக்களில் கம்யூனிச அரசு அதிகார அமைப்பு வடிவத்தை தூக்கி எறிந்து விட்டு பிரான்ஸ் உள்ளது போன்ற முறை ஒன்றைக் கொண்டு வருவதே அவரது திட்டம்.

பாராளுமன்றத்திலும் பெரும்பான்மை பழைய அதிகார வடிவத்தில் சில மாற்றங்கள் தேவை என்பதை வலியுறுத்தினும் நாட்டின் உயர் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே என்பதில் உறுதியாய் நின்றனர். மேற்கு நாடுகளிலுள்ளது போன்ற ஜனாதிபதி ஆட்சி முறை ரசியாவிற்கு பொருந்தாது.ரசிய அரசியல் சமூக கட்டுமானத்திற்கேற்ப மாற்றம் தேவை என்று வலியுறுத்துகின்றனர்.

அமெரிக்கா உட்பட மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமது சந்தைப் பொருளாதார திட்டத்தை ரசியாவில் செவ்வனே நடைமுறைப்படுத்த தனிமனித அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையே சிறப்பாக அமையும் என்ற உள்ளார்ந்த நோக்கில் அதற்கான அரசியல் மாற்றங்களை ஜெல்சினை செய்யும்படி நிர்ப்பந்தித்து வந்ததன் விளைவே செப்ரம்பர் 22இல் ஜெல்சினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும், இதைத் தொடர்ந்த நாகரீகமற்ற நிகழ்வுகளும்:- பாராளுமன்றத்திற்கான புதிய தேர்தல் டிசம்பர் 11-12ம் திகதிகளில் நடைபெறும் என்றும் இந்த தேர்தலை எதிர்ப்பவர்களும் தடுப்பவர்களும் தண்டனைக்குரிய குற்றம் செய்தவர்களாக கைது செய்யப்படுவர் என்றும் சட்டம் போட்டார் ஜெல்சின்.

இதன் மறுதாக்கமாய் ஜெல்சினுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் எல்லாம் (ஜெல்சினுக்கு என்றோ கட்சி எதுவும் இல்லை) போர்க்கொடி தூக்கி மொஸ்கோவை நோக்கி அணிவகுத்தனர். சோவியத் யூனியனின் செங்கொடிகளோ ஆயிரமாயிரமாய். மக்கள் திரள் ஜெல்சினின் சர்வாதிகாரத்துக்கு எதிராக பொருளாதார திட்டங்களுக்கு எதிராக உண்மையான ஜனநாயகத்துக்காக போர்க் கொடி தூக்கிய நேரம்! ரசிய பெருந்தேசிய வாதமும் செங்கொடியுடன் கூடவே திரண்டு வந்தது.

எதிர் அணியினர் மொஸ்கோவை முற்றுகையிட ஜெல்சினோ மொஸ்கோவுக்கு வெளியே நிலை கொண்டிருந்த உள்நாட்டு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் சோவியத்தின் K.G.B இன் தேவைக்காக கட்டப்பட்ட ELITE இராணுவ பிரிவுடன் தன்னை ஐக்கியமாக்கினார் பாராளுமன்றத்தைக் கலைக்க முன்பே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெல்சின் இந்த இராணுவப் பிரிவுக்குக்கு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தினார். அதிகாரப் போட்டி வரும் போது ஒரு அடியாள் படையாக இயக்க இந்த இராணுவப் பிரிவை விசேடமாக நவீனப்படுத்தினார்.

செப்ரம்பர் இறுதியில் தொடங்கிய அதிகாரப் போட்டியில் சோவியத் இராணுவம் (பொதுநல அமைப்பின் இராணுவம்) நடுநிலையைப் பேணுவோம் என்று அறிவிக்கவும் யெல்சின் அடியாள் படை(விசேட இராணுவப் பிரிவு) மொஸ்கோவை நோக்கி நகரத் தொடங்கிற்று.

பாராளுமன்றத்துக்கு மின்சாரம் நீர் என்பன தடைசெய்யப்பட்டதோடு அக்டோபர் 4ம் திகதிக்குள் பாராளுமன்றத்தை விட்டு எதிர்கட்சியினர் வெளியேறாது போயின் பலவந்தமாக வெளியேற்றப்படுவார்கள் என்று யெல்சின் ஆணைபிறப்பித்தார்.பதிலுக்கு உப ஜனாதிபதி றூஸ்கோஸ் பாராளுமன்றக் கட்டிடத்திலுள்ள சக்திகளை பாதுகாக்க பாதுகாப்புப் படை ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு ஆயுதம் வழங்கியதோடு தானும் ஓர் தானியங்கித் துப்பாக்கியைத் தோளில் மாட்டினார். மெழுகு வர்த்திகளுடன் பாராமன்றமும், கூட்டங்களும், தேசிய புரட்சிக் கீதங்களுமாய் அமர்களமாயின. மொஸ்கோவில் எப்போதும் ஒரு உள்நாட்டு யுத்தம் மூளலாம் என்ற நிலமை தோன்றியது. இந்த அதிகாரப் போட்டியில் முக்கிய பங்காளி அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் இவர்கள் எந்த கொடுரங்கள் ரசியாவில் நிகழினும் ஜெல்சின் அதிகாரத்தை இழக்கக் கூடாது என்பதை உறுதி செய்தனர்.

அமெரிக்காவின் சர்வதேச தொலைக் காட்சி நிறுவனமான CNN ரசிய மக்களுக்கு ஜெல்சின் வெல்வார், ஜெல்சின் வெல்வார் என்று ஓதிக் கொண்டிருந்தது. அமெரிக்காவும் மேற்குலகும் அதிகாரம் ஜெல்சினின் கையைவிட்டு போகாவண்ணம் ஒரு திட்டத்தை வரைந்திருந்தன. ஜெல்சின் விரும்பினும் நாம் அவரக்கு உதவ தயாராக அங்கே இருப்போம் என்றார் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர்.

மொஸ்கோவில் மக்கள் திரள் பெருக்கெடுப்பதைக் கண்ட ஜெல்சின் செப்ரம்பர் இறுதி நாள் எதிரணியருடன் சமரசத்தைக் கோரி நாட்டின் உயர் மதபீடத் தலைவரை நாடினார். எதிரணியினர் ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் ஏக காலத்தில் வைக்கும்படி நிபந்தனை விதித்த போது ஜெல்சின் அதற்கு சம்மதித்தார். அக்டோபர் 1ந் திகதி ரசிய பாராளுமன்றத்தின் முன்திடலில் மக்கள் திரள் வெற்றிக் களிப்பைக் கொண்டாடியது. பாராளுமன்றத்தை சூழ போட்டிருந்த தடைகளை தகர்த்து தீமூட்டி செங்கொடிகளுடன் மொஸ்கோ வீதியெங்கும் வெற்றிக் களிப்பில் அணிவகுத்தனர். ஜெல்சின் சமசரத் திட்டம் உயிர் வாழ்ந்தது ஒரு குறுகிய காலம்தான். அக்டோபர் 3ந் திகதி சமரசத் திட்டத்தை முறித்தார். பாராளுமன்றத்தில் எதிரணியினரை வெளியேற்றும் நடவடிக்கையில் இறங்கினார். ஜெல்சின் அடியாள் படை இராணுவப் பிரிவும் மொஸ்கோ நகரப் பொலிசும் பாராளுமன்றத்தை சூழ்ந்தன. பொலிசார் பாராளுமன்றத்திற்கு முன்பாக திரண்டிருந்த 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை பாராளுமன்ற பகுதியை விட்டு வெளியேற பணித்தனர். பொலிசுக்கும் மக்களுக்குமிடையே கலகம் மூண்டது. ஜெல்சின் உப ஜனாதிபதி றூஸ்கோல்வின் பதவியைப் பறிப்பதாக அறிவித்தார்.மக்கள் முன் உரையாற்றிய உப ஜனாதிபதி, ஜெல்சினுக்கு எதிரான ஜனநாயகத்துக்கான சோசலிச ரசியாவுக்கான, போராட்டத்தில் மக்களை குதிக்கும்படி அறைகூவல் விடுத்தார். 30 நிமிடத்திற்குள் பாராளுமன்றத்துக்கு அருகில் அமைந்த அரசு செயலகம் மக்கள் திரளின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. (Rathaus) ஜெல்சின் அவரசகால சட்டத்தை பிறப்பித்தார்.



300 க்கும் அதிகமான ஆயுதம் தாங்கிய போராளிகள் தலைமையில் பாராளுமன்றக் கட்டிடத்திலிருந்து 10கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மொஸ்கோ வானொலி தொலைக் காட்சி நிலையத்தை தாக்க 10 ஆயிரத்துக்கு அதிகமான மக்கள் படை திரண்டது. பொலிசின் தாக்குதல்களை முறியடித்து ஒரு சில மணிப் பொழுதில் தொலைக் காட்சி நிலையமும் சோவியத்துக்களின் அதிகாரத்துக்கான போராளிகளால் (இவர்கள் அப்படித்தான் தங்களை அழைத்தார்கள்)கைப்பற்றப்பட்டது.

அக்டோபர் 3ந் திகதி இரவு 8 மணிக்கு ரசியாவின் செய்தி சேவையான Itar-Tass சோவியத் அதிகாரத்துக்கான போராளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. மேற்குலகமும் ஜெல்சினும் அதிகாரம் தம் கைகளை விட்டு போகப் போவதை உணர்ந்து தீவிர நாசகார வேலையில் இறங்கினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொலைக்காட்சி நிலையம் போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு இயங்காத நிலைமையில் ரசியா தனியார் தொலைக்காட்சி செய்தியும், C.N.N உம் ஜெல்சினுக்கு ஆதரவாக தீவிர பிரச்சாரத்தைமுடுக்கின. C.N.N ஜெல்சின் வெல்வார் என்ற கருத்தை ரசிய மக்களுக்கு விதைத்துக் கொண்டிருந்தது. அதற்காக பொய்களை அவிழ்த்து விட்டன. பயங்கர ஆயுதங்களுடன் வெடிகுண்டுகளுடனும் பாராளுமன்றத்தில் பயங்கர வாதிகள் இருக்கிறார்கள் என்றன. போராட்ட உணர்வு பெறும் மக்களை சாகடிக்கும் வகையில் அமெரிக்க C.N.N தொலைக் காட்சி சேவை (மொஸ்கோ நகர மக்கள் அதிகமானோர் இதையே பார்த்தனர்) செய்தியைப் பரப்ப மறுபுறம் ஜெல்சின் அடியாள் படை இராணுவப் பிரிவு தொலைக் காட்சி நிலையத்தை போராளிகளிடமிருந்து கைப்பற்ற மூர்க்கமாகப் பாய்ந்தன. ஞாயிறு அதிகாலை 2மணிக்கு 500 க்கும் அதிகமான சோவியத் போராளிகளை பலிகொண்டு தொலைக் காட்சி நிலையம் ஜெல்சின் படையினர் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.பீரங்கிகளும் அடியாள் படையும் தொலைக் காட்சி நிலையம் உட்பட மொஸ்கோ நகரத்தை வீதிகளாயே சல்லடை போட்டன.

ஜெல்சினின் அடியாட்படை (இராணுவப் பிரிவு) கண்மூடித்தனமாய் பீரங்கிகளோடு நிகழ்த்திய தாக்குதலில் தொலைக் காட்சி நிலையம் உட்பட மொஸ்கோ வீதிகள் எல்லாம் நூற்றுக்கணக்கான பிணங்களும் குருதிச்சேறுமாய் மரணபீதியில் தவிக்க அக்டோபர் 4ம் திகதிகாலை 9 மணிக்கு ஜெல்சின் கொலைபிரட்டலில் விழிபிதுங்கி இருந்த ரசிய மக்களுக்கு உரையாற்றினார். பயங்கரவாதிகளிடமிருந்து பாராளுமன்றத்தை மீட்போம் என்றார். வெறி கொண்ட படையும், பீரங்கிகளும் மக்கள் வெள்ளத்தை குருதியில் சிதறடித்ததை அறிந்த பாராளுமன்றத் தலைவர்கள் ஜெல்சினுடன் சமாதானத்துக்கான அறிவிப்பை வெள்ளக்கொடியை பாராளுமன்றத்தில் தொங்க விட்டனர். ஆயினும் ஜெல்சினோ பாராளுமன்றத்தை நோக்கி தாக்குதலுக்கான ஆணைபிறப்பித்தார். பீரங்கிகள் முன்திடலில் நின்று பாராளுமன்றத்தை நோக்கி குண்டுகள் பொழிந்தன மாடிமாடியாய் குண்டுகள் பாய பெரும் கரும்புகையும் தீயும் மொஸ்கோ நகரத்தையும் ரசியாவையம் சூழ்ந்து கொண்டிருந்தது. விசேட இராணுவத் துருப்புக்கள் ஒவ்வொரு மாடிமாடியாய் அறை அறையாய் தேடி ஆயுதம் தாங்கிய சோவியத் அதிகாரத்துக்கான போராளிகளை சுட்டுக் கொன்றது. எல்லாம் ஜனநாயகத்தின் பெயரால் நிகழ்ந்தன. மனிதாபிமானம் மனித உரிமைகள் என்று கூக்குரல் இடும் மேற்கு நாடுகள் குறிப்பாக அமெரிக்கா கம்யூனிசத்தின் அடிச்சுவடையே ரசியாவில் இருந்து அழித்தொழிக்க இதைத்தவிர ஜெல்சினுக்கு வேறுவழி இல்லை என்றது. ஆம் ரசியாவானில் முழுமையாய் இருள் கவ்வியது போராட்டத்திற்கு தலைமை கொடுத்த உப ஜனாதிபதி பாராளுமன்றத் தலைவர், உள்நாட்டு அமைச்சர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஜெல்சினால் கைது செய்யப்பட்டனர்.

அக்டோபர் 3ம் திகதி இரவும் கண்விழித்திருந்த ரசிய அதிபர் பொறிஸ் ஜெல்சினுக்கு ஒரே களைப்பு. பாராளுமன்றத்தை பீரங்கி கொண்டு தாக்கும்படி ஆணைபிறப்பித்து விட்டு மொஸ்கோவுக்கு வெளியே உள்ள தனது ஸ்தலத்துக்கு இளைப்பாறச் சென்று விட்டார். பாராளுமன்றம் பீரங்கிக் குண்டுகளால் கம்யூனிஸ்டுக்கள் துப்பரவு செய்த பின், எதிர் கட்சிகள் எல்லாம் தடைசெய்யப்பட்டதாகவும் பத்திரிகைகள் செய்தி தணிக்கைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் சட்டம் போட்டார். 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கும் கொலைக்கும் இரையாகினர். ஒருவாறு ஜெல்சின் ரசிய நாட்டில் ஜனநாயகத்தை காப்பாற்றினார். டிசம்பர் 12 ந் திகதி (முன்பு 11,12)மட்டும் பாராளுமன்ற தேர்தல் நடாத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்கள் எல்லோருமே ரசிய நாட்டின் குழந்தைகள். கம்யூனிச வாதிகளிடமிருந்து நாட்டை மீட்க ஜனநாயகத்தைக் காக்க நிகழ்ந்த கொடுமைகளை இந்த அக்டோபர்(3,4)நாட்களை நாங்கள் யாரும் மறக்கக் கூடாது என்றார்.

ஆம்! ரசிய மக்கள் அந்த அக்டோபர் நாளை மறக்கவில்லை. அதனால்தான் இதுதான் ஜனநாயகம் பாருங்கள் என்று பீரங்கி துளைத்த பாராளுமன்றத்தைக் காட்டுகிறார்கள். மக்கள் கொதிப்படைந்திருந்தார்கள், அமெரிக்காவின் சப்பாத்து கால்துடைக்கும் ஜனநாயகம் மேற்குலகின் அடியாள் அரசொன்று எமக்கு வேண்டாம் என்கிறார்கள்.

— க.தீபன்

5 →

வானொலி நாடகங்களில் நடித்தவருமான குணபதி கந்தசாமி அவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

சிறுவர்களுக்கான இந் நிகழ்சியில் கவியரங்கு, நாடகம், நடனம் கரகாட்டம், பட்டிமன்றம், இசையமுதம் என்று பெரியவர்களுக்கான நிகழ்சியையும் அளவுக்கு அதிகமாக உள்ளடக்கியிருந்ததனால் இவை (பெரியவர் நிகழ்சிகள்) எதுவும் உற்சாகமூட்டும் வகையிலும், முழுமைபெற்று அமையவில்லை.

19 →



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நூல் அறிமுகம்

# மறையாத மறுபாதி




புகலிடத்துப் பெண்கள்
கவிதைத் தொகுப்பு.

27. Rue JEANMOULIN
924000 COURBEVOIE
FRANCE

ஐரோப்பா வாழ் ஈழத்துப் பெண்களைப் பொறுத்தவரையில், ஒரு பகுதியினர் சக்தி (நோர்வே), ஊதா (ஜேர்மனி) ஆகிய பத்திரிகைகள் மூலமாகவும், இன்னும் சிறுசிறு குழுக்களாகவும் பெண்ணிலைவாதக் கருத்துக்களைப் பேசத் தலைப்பட்டுள்ளனர்.

ஆணாதிக்கமும், பெண்கள் மீதான சமூக ஒடுக்குமுறைகளும் எமது சமூகத்தில் பல பரிமாணங்களுடன் புரையோடிப் போய் இருப்பது பற்றியும் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். இவ் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான தமது குரல்களை பலத்து ஒலிக்கவும் முனைப்பட்டுள்ளனர். அத்தகைய ஒரு முனைப்பாட்டின் வெளிப்பாடே **மறையாத மறுபாதி** கவிதைத் தொகுதி ஆகும்.

தரத்தைப் பொறுத்தவரை ....

நிழல்வாடி மரத்தடியில்
நிலத்தில்
முளைக்கால்கள் ஊன்றி
வேப்பம் விதைகள்
உச்சி மரத்தை அண்ணாந்து
கிளைகளூடே
சிதறும் சூரியத் தெறிப்பை
எப்போது விடியும் என்று
கேட்டு வைக்கும்.

இன்னும் விடியவில்லை என்பதை மட்டும்
உச்சிமரக் காகங்கள்
உளறிக்கொண்டிருக்கும்

என்று **இருளினுள்ளே** கவிதையில் பெண்களின் இருப்பு எத்தகையது என்பதை படிமங்களூடே கூறிவிடும் பானுபாரதி போன்றோரது தரமான கவிதைகள் சிலவும் இத் தொகுதியில் அடக்கம்.

ஆயினும் அனைத்துக் கவிதைகளும் ஒரே தரத்தின என்றோ, கவிதைகளுக்குரிய நுண்ணிய பண்புகளுடன் கூடியவை என்றோ கூறுவதற்கில்லை யாயினும் சீரான தொனியுடன் கூடிநின்று பெண்களின் விடுதலைக் குரலாக ஒலிக்கின்றன என்பது திண்ணமே!

இந்த
அண்ட வான் வெளியில்
ஏதோ செய்தியாய்
ஒளி சிமிட்டும்
ஒற்றை நட்சத்திரமாய்
எல்லையில்லாது
செய்தி சொல்லி
காலங்கள் தங்களுக்குள்
கைகுலுக்கிக் கொள்கையில்
எங்கள்
மத்தியில்
வளர்ந்து விட்ட
எனது பொம்மை
அக்காமார்கள்

எமது சகோதரிகளுக்கு மட்டும்
இயங்கியல் விதிகள்
பொய்த்துப் போகையில்
காலச் சக்கரத்தின்
கண்காட்சிச் சாலையில்
தலையாட்டும் பொம்மையாய்
வேண்டாம்
. . . . . . . . .

என்று **உன்னோடு** கவிதையில் இ.வசந்தி பொருமிப் போவதும்,

மதங்களையும், மரபுகளையும்
உளறியவர்கள்
உனக்கு வாழ்க்கையின்
நிஜ வெளிச்சத்தைக்
காட்டவில்லை
அதனால் தான்
இன்னும் நீ இருட்டிலேயே . . .
– – – – – –
வேடங்களைக் கலைத்து விடு!
மௌனங்களும் இன்றே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரணிக்கட்டும்
வெளியே வா
வெளிச்சம் உனக்காகவும் தான்
பாதையில் தடைகள் வரலாம்
பயப்படாதே!
ஒதுக்கிவிட்டு முன்னேறு
ஒதுங்கி விடாதே!

*என்று **விடிவை நோக்கி** கவிதையில் நிருபா துணிச்சலுடன் விழிப்பதுவும்,*

*போன்ற பல குரல்கள் இத் தொகுதியை நிரப்புவதில் முக்கியத்துவம் பெறுகின்றன.*

*இத்தகைய விழிப்புகளை நோக்கி இவை கோசங்களாகத் தென்படவில்லையா? என்று கேள்வி எழுப்புவோரும் உள.*

*அறுபதுகளின் மத்தியிலும், பிற்பகுதியிலும் யாழ்குடா நாட்டில் சாதீய எதிர்ப்புப் போராட்டங்கள் (தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்) வலுப் பெற்றிருந்த நேரம்......*

சாதித்திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா – அவர்
நீதி தனக்கொரு நீதி பிறர்க்கொரு
நீதியென் றாருதடா – தமிழ்
நீதிமறந்தவர் எந்த மதத்திலிற்
சாதி படித்தனரோ – அதை
மோதி உடைப்பது தானொரு பாதையென்று
ஓதி எழுந்திடுவாய்.

அந்த மனிதனும் இந்த உலகிலில்
சொந்த மனிதனடா – அவன்
இந்த உலகில் வந்து கிடப்பது
நொந்து கிடந்திடவோ – அட
இந்து மதத்திலுக் கிந்த நிலைதனைத்
தந்தது எந்த மறை – அது
வெந்து மடிந்திட உந்தியெழுந்திடும்
செந்தீ எழுந்திடு

(இரத்தக் கவிதைத் தொகுதியில் காலஞ் சென்ற கவிஞர் சுபத்திரன்)

*என்று போராட்டத்தோடே எழுந்து, போராட்டத்தை முன்னெடுப்பதில் ஓர் உந்துசக்தியாக திகழ்ந்து, போராட்டத்திற்கு மேலும் வலுச்சேர்த்ததே இந்தக் கவிதை பற்றிய யதார்த்த உண்மையாகும்.*

*இந்த வகையில் மறையாத மறுபாதியின் பல கவிதைகள் தோற்றத்தில் கோஷங்களாகத் தென்பட்டாலும், விழிப்புணர்வு பெற்றுவரும் எங்கள் பெண்களை முன்தள்ளி விடுவதற்கான ஓர் உந்துசக்தியாகவே அமையும். அதேவேளை இத் தொகுப்பில் தமது உணர்வுகளை பதிவு செய்திருக்கும் இக் கவிஞர்கள், கவிதை பற்றிய தமது புரிதல்களை மேலும் செழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு பெண்ணிலைவாதம் பற்றிய தேடல்களை இன்னும் விரிவுபடுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் இத் தொகுதி கோடிடுகிறது.*

*இவை மட்டுமன்றி ......*

*ஐரோப்பிய வாழ்வில் தமக்குக் கிடைத்த சுகமே பெரிது என்று எண்ணி மாதமொரு முறை மலிவு விற்பனையில் (தமிழ்க் கடைகளில்) போடப்படும் நகைகளை வாங்கிச் சேர்ப்பதிலும், ஒவ்வொரு திருமண வைபவத்திற்கும் ஒவ்வொரு புதுச் சாறிகளை உடுத்திக் கொள்வதிலும் புதிய டிசைன் போட்ட நகைகளை அடுக்கிக் கொள்வதிலும் பெருமைப்பட்டுக் கொண்டும், போட்டி போட்டுக் கொண்டும் தமது சிந்தனைகளையும், வாழ்வியல் அர்த்தங்களையும் முடமாக்கிக் கொண்டு வாழ்கின்ற பெரும்பகுதி பெண்களின் எண்ணத்தில் ஒரு சலசலப்பைத்தானும் உண்டு பண்ணிவிட்டால் அதுவே இக் கவிதைத் தொகுதிக்குக் கிடைக்கும் அடுத்த வெற்றியாகும்.*

*ஈழத்துப் பெண் கவிஞர்களின் முதலாவது தொகுப்பு **சொல்லாத சேதிகள்** கவிதைத் தொகுதியாகும். இத் தொகுதியின் முன்னுரையில் பெண்களது சமூக-கலாச்சார ஒடுக்குமுறைகள் பற்றிய அவர்களது உணர்வினைத் தளமாகக் கொண்டே அவர்களது படைப்புக்களை நோக்குதல் வேண்டும் என்று மௌ.சித்திரலேகா குறிப்பிட்டுள்ளார். புகலிடத்துப் பெண்களின் வெளியீடாகிய **மறையாத மறுபாதி** கவிதைத் தொகுதினை மதிப்பிட முயல்பவர்களும் சித்திரலேகாவின் மேற்படி கூற்றினை நினைவுபடுத்திக் கொள்வதே சிறப்பு.*

**– லோகதாஸ்**

17 →

சுருங்கக் கூறின் சிறுவர் நிகழ்சிகள், பெரியவர்களுக்காக அமைகின்ற மரபாகிப் போன எம்மவர்களின் பொதுவான குறைபாடு தவிர 'தமிழ்த் தளிர்ச் சோலை' யின் சிறுவர் நிகழ்சிகள் சிறப்பாகவே அமைந்தன. இன்னும் வெளிச் சிறுவர்களுக்கு கூடுதல் இடமளித்து (பேச்சுப் போட்டி, கதை சொல்லல் போட்டி என்று) பெரியவர்களுக்கு என்று குறிப்பான ஒன்று, இரண்டு நிகழச்சிகளை மட்டும் ஒழுங்கு செய்திருந்தால் நிகழ்ச்சிகள் சிறப்புற வாய்பாக அமைந்திருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**SEPTEMBER**
**+**
**OCTOBER**

**1993**

Zwei Monatlich Einmal

**Impressum**
**&**
**Herausgeber :**

Manitham
Postfach-12
3000 Bern -11
SCHWEIZ

**Redaktion :**
V.Logadas
M.Narendran
S.Ragavan
&
Manitham Redaktion
komitee

**Abonnement :**
22 SFr
(pro Jahr)

**Post Konto :**
Manitham
3000 Bern-11
PC : 30-37152-1

**Bank Konto :**
Schweizerische
Kreditanstalt
3001 Bern
**Manitham**
220348-70

**Druck :**
Böhlen Druck AG
4912 Aarwangen

மனிதம் !

ஐந்தாவது ஆண்டில் கால் பதிக்கிறது. ஆசிரிய உரையாக எதை எழுத? இந்திய துணைக்கண்டத்தில் சுமார் முப்பதாயிரத்திற்கும் மேலான சனங்களைப் பலி கொண்ட பூமி அதிர்ச்சியை எழுதவா? சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இஸ்ரேல் – பலஸ்தீன ஒப்பந்தத்தை எழுதவா? ஐநூறுக்கு மேற்பட்ட சிவிலியன்களின் உயிர்களைப் பலி எடுத்த அதிகாரத் திமிர் பிடித்த ஜெல்சினின் அதிரடித்தாக்குதலை எழுதவா? மூளை குழம்புகிறது. முடிவாக.............. நாம்! ஆம்! நாம் விரும்பியும் விரும்பாலும் பத்து வருடங்களுக்கு மேலாக அகதிச் சேற்றில் புதைந்த கொண்டிருக்கிறோம்!.

சாரத்துடன் வெறும் கால்களால் சைக்கிளை மிதித்தபடி சென்ற நினைவுகளை ஒரு மூலையில் புதைத்துவிட்டு, இயந்திரங்களோடு இயந்திரங்களாய் மாறிமாறி ஓடியும் என்ன கண்டோம்.? அங்கு கிராமத்தில் நிலவு பார்த்த சோறு தின்று...... புழுதியில் புரண்டெழுந்து......... நாய்வாலைப் பிடித்திழுத்து கடி வாங்கி........ அம்மாவிடம் அடிவாங்கி...... வளர்ந்த நம் குழந்தைகளின் முன் எதிர்காலம் விரிந்து கிடந்தது. இங்கு? அளைவதற்கு புழுதி இல்லை. நிலவு பார்த்து உணவு ஊட்ட அம்மாவுக்கு நேரமில்லை. குழந்தை தானே வளர்கிறது. படிக்கிறது. வீட்டில் பாடங்களை மீட்டுவதற்கு உதவி இல்லை! பெற்றார்க்கு போதிய மொழியறிவில்லை. மொழியைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் அக்கறையும் இல்லை. இது என்ன டொச் தானே! என்று ஓர் அலட்சியப் பார்வை. சுற்றியிருக்கும் சூழலுக்கேற்ப விஞ்ஞான மயமாகி, இயந்திரங்களாக விரிந்திருக்கும் இப்புற நிலைமைகளுக் கேற்ப குழந்தைகளின் கேள்விகளில் கூட விஞ்ஞானம் இழையோடுகிறது. எங்கள் பொது அறிவுப் பஞ்சம் குழந்தையின் கேள்வி கேட்கும் ஆற்றலைக் கூட முடமாக்கிவிடுகிறது. இன்னும் தேவதூதன் என்றும் சாத்திரக்காரர்கள் என்றும் படையெடுப்பவர்களின் பின்னால் சென்று மனதின் ஒரு மூலையில் மறைந்தும் மறையாமலும் படர்ந்து போன மூடநம்பிக்கைகளுக்கு உரமேற்றுகிறோம். இன்றைய உலகின் சூழலுக்கேற்ப எமது அறிவைப் பெருக்கிக் கொள்வதில் அக்கறை செலுத்துகிறோமா?. ஐரோப்பாவில் வெளிவருகின்ற 20 க்கும் மேற்பட்ட தமிழ் சஞ்சிகைகளில் எத்தனையை எத்தனை பேர் படிக்கிறார்கள்? இந்தியாவிலிருந்த குப்பையாக இறக்குமதியாகும் சினிமாச் சஞ்சிகைகளை தேர்வதில் தான் இன்னமும் ..............................

பெண்களைப் பொறுத்தவரையும் நிலைமை இதுதான் எல்லாவற்றிற்கும் அவர் இருக்கிறார் தானே என்ற எண்ணமும் தமது அந்தரங்க சகமீனத்திற்குக் கூட அயலவரைச் கூட்டிச்செல்லும் அவலம் ! புதுப் புதுப் சாறிகளை உடுத்தி புதிய டிசைன் போட்ட நகைகளையும் அணிந்து விட்டால் போதும் என்ற மனநிலை!

www.tamilarangam.net

எமது நாட்டு நிலை......... எமது நிலைமை......
குழந்தைகளின் எதிர்காலம்.... இவை பற்றி எல்லாம் அரைகுறை அக்கறை தான். ஆக மிஞ்சினால் கனடாவுக்கு போகலாம் இது தான் வாய்ப்பாடம்.

இவை அனைத்திற்கும் மேலாக எமது சிறார்களை நெருக்கும் ஒரு புதிய பிரச்சினை பற்றி யாராவது சிந்திப்பது உண்டா? அது தான் எமக்கும் எமது பிள்ளைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடு ... நாமோ சிறு வயதிலிருந்து எமது சூழலில், எமது கலாச்சாரத்திற்கு உட்பட்டு வளர்ந்தவர்கள். எமது கலாச்சாரம் பற்றி நன்கு விளங்கியவர்கள்.

ஆனால் எமது சிறார்களின் நிலைமை வேறு. பூகோள ரீதியிலும், உளவியல் ரீதியிலும் வேறுபட்ட இன்னொரு சூழலில், வேறுபட்ட கலாச்சாரத்தின் இருப்பிடத்தில் வளர்பவர்கள். 20 வயதை எட்டினால் கூட எமது கலாச்சாரத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளும் நிலைமை இல்லை. இந் நிலைமையில் சுத்தமாக எமது கலாச்சாரத்திற்குட்பட்டு வாழும்படி நிர்ப்பந்திக்கவோ, அல்லது அப்படி ஒரு வாழ்வை, அவர்கள் வாழ்வார்கள் என்று எதிர் பார்க்கவோ முடியாது! அப்படி எதிர்பார்ப்போமாயின் அது உயிர்களுக்கும் சூழலுக்கும் உள்ள உறவு பற்றிய அரிச்சுவடியைக்கூட அறியாதவர்களின் வெளிப்பாடு எனலாம்.

எப்படியோ மேற்குலகச் சூழலில் வாழும் எமது சிறார்கள் இங்கு வாழும்வரை ஆயினும் ஒருவித கலப்புக் கலாச்சாரத்தை, அல்லது இரட்டைக் கலாச்சாரத்தைப் பேணுவதுதான் நியதி. விதியும் கூட. எமது பிள்ளைகளின் இக்கட்டான இந் நிலைமைக்கு தீர்வு யாது? பெற்றோரின் கடமை என்ன? எமது பிள்ளைகள் கலாச்சார விழுமியங்களை சேர்த்துக் கொள்வதற்கு நிதானத்துடன், கூடிய பக்கவத்துடன் வயதின் தன்மைக்கேற்ப அறிவியல் ரீதியாக ஆலோசனை வழங்க வேண்டும்.

– எமது கலாச்சாரத்துடன் ஊறிப்போன மூடப் பளக்கங்களை (சாதி, பெண்ணடிமைத்தனம், சீதனம் போன்ற) விலக்கிக் கொள்ளவும்,
– எமது கூட்டு வாழ்வியலில் காணப்படும் அன்பு, பாசம், காதல் போன்ற ஆன்மீகப் பண்பாடுகளைப் பேணவும்
– அதேவேளை மேற்குலக நாடுகளில் காணப்படும் சீரழிவுக் கலாச்சாரத்திலிருந்து பிள்ளைகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும்
– இச் சூழலில் மேலோங்கி நிற்கும் (பிள்ளைகளுக்கும் பெற்றோர்–ஆசிரியர்களுக்கிடையிலான ஜனநாயகப் பண்பு, அறிவியல் ரீதியாகச் சிந்திக்கும் தன்மை, வேலைகளில் பாகுபாடின்மை, சாதி வேறுபாடின்மை போன்ற) நற் பண்புகளைக் கற்றுக்கொள்ளவும்,

சிறார்களுக்கு ஏற்ற ஆலோசனைகளை வழங்க வேண்டும். இக் கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு இந்நாட்டுச் சூழலைப் பற்றிப் புரிந்து கொள்வதே பெற்றோரின் அவசியக் கடனாகும்.


புரட்டாதி
♦
ஐப்பசி

1993

இரு மாதத்துக்கு ஒருமுறை

❖❖❖

*சந்தா விபரம் :*

தனிப்பிரதி : 3 SFr
வருட சந்தா : 22 SFr

ஐரோப்பிய நாடுகளிற்கு ....
–25 SFr

*Postcheck Konto :*
30-37152-1
Manitham

*Bank Konto :*
Schweizerische
Kreditanstalt
3001 BERN
Nr- 220348-70

இலங்கை இந்தியா
– இலவசம்

❖


*வாசகர்களே!*
உங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்.

www.tamilarangam.net

## நான் இருந்திருந்தால் .......

– ஜே.ஆர்.

நான் ஜனாதிபதி பதவியில் இருந்திருந்தால் வடபகுதி யுத்தம் முடிவடைந்திருக்கும். இந்தியப் படையை இந்நாட்டுக்கு கொண்டு வந்தது தொடர்பாக பலதரப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். இந்தியப் படை வந்ததன் பின்பு யுத்தத்தினால் வெற்றி பெறாமல் அவர்களைத் திருப்பியனுப்பியது தவறானது. நான் இருந்திருந்தால் இந்தியப் படையை போக விட்டிருக்க மாட்டேன் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா இலங்கை சட்டக் கல்லூரி சிங்கள மன்றத்தினரால் நடாத்தப்பட்ட மாதிரிப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

### வெற்றி பெற்றால் ஒழிய இந்தியப் படையை போக விட்டிருக்க மாட்டேன்.

'1978 அரசியலமைப்புச் சட்டம்' என்ற பொருளில் நடைபெற்ற மாதிரிப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜே. ஆர் உரைமுடிவில் சட்ட மாணவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், இந்தியப் படை யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் யுத்தம் முடிவடைந்திருக்கும் எனவும் 1978-ம் ஆண்டு நான் அறிமுகப்படுத்திய அரசியலமைப்புச் சட்டம் மூலமாக இந்நாட்டின் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான படிமுறைகளை எடுத்ததாகவும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் இவ் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வாகும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தியப் படையினர் இரண்டு வருடங்கள் இலங்கையில் இருந்துள்ளனரே என மாணவர் ஒருவர் கேட்டபொழுது, அது வேறு விடயம் இரண்டு வருடங்கள் இருந்து விட்டு அடுத்த மாதத்தில் பிரச்சனையை தீர்த்திருந்தார்களானால் என்ன சொல்லப் போகிறீர்கள் என திரு ஜயவர்த்தனா திரும்பக் கேட்டார்.

இந்த யுத்தத்திற்கு தீர்வு காண்பது எப்படி? யுத்தம் புரிந்தா? பேச்சுவார்த்தை செய்தா? தலையைத் தடவியா? தவழ்ந்தா? என தான் கேள்வியொன்று கேட்பதாகக் கூறிய ஜே. ஆர் அதற்கு நீங்கள் தரும் விடை என்ன? என கேள்வி கேட்ட மாணவனைப் பார்த்துக் கேட்டார்.

1987 இல் வடமராட்சிப் போரில் வெற்றி பெற்று பிரபாகரனை கைதுசெய்வதற்கு நெருங்கியிருந்த போது அந்த நடவடிக்கையினை நிறுத்தியமை நாட்டிற்குச் செய்த துரோகம் இல்லையா? என இன்னோர் மாணவன் கேள்வி எழுப்பிய போது அது துரோகமாவது எவ்வாறு? நான் தெளிவாக்கித் தருகின்றேன் என கீழ்வருமாறு குறிப்பிட்டார்.


வடமராட்சி நடவடிக்கைகளினால் எமக்கு நல்ல வெற்றி கிடைத்தது. தொடர்ந்து எடுக்கவேண்டிய படிமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் நடந்தபொழுது யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுமாறு நான் கூறியிருந்தேன். அவ்வேளை வடமராட்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய படையும், தளபாடங்களும் யாழ்ப்பாண நகரை பிடிக்கப் போதுமானதாக இல்லை என இராணுவம் கூறியது.

உபகரணங்கள், ஆயுதக்கருவிகள் போதியதாக இல்லை. படையினரின் பலம் இரட்டிப்பாகத் தேவை. இதனால் இரண்டாவது படிமுறையாக யாழ்ப்பாணத்தைத் தேர்வது முடியாது என இராணுவம் கூறியது. அதேவேளை இந்தியத் தூதுவராக இருந்த டிக்சிற் 'யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இடமளிக்க வேண்டாம்' என விடுத்த அறிக்கையை லலித் அத்துலத்முதலி நமக்குத் தெரியப்படுத்தினார். அதேநேரம் ராஜீவ் காந்தியும் என்னுடன் தொடர்பு கொண்டு பயங்கரவாதக் குழுக்கள் அனைத்தும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இணங்கியுள்ளதாகக் கூறியிருந்தார். அதற்கிணங்க மாகாண சபைகள், வடக்குக் கிழக்கு தற்காலிக இணைப்பு போன்ற யோசனைகளுக்கு நான் அரசாங்கத்தோடு கலந்தாலோசித்து விருப்பத்தை வெளியிட்டேன். ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டேன். யுத்தம் மூன்று மாதங்களின் பின் நிறுத்தப்பட்டது. தென்பகுதி மக்கள் வடபகுதி சென்றனர் ஆனாலும் புலிகள் ஒப்பந்த ஏற்பாடுகளை மீறினர். அதைத் தொடர்ந்து ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு இந்தியப் படையினர் புலிகளுடன் யுத்தம் புரியத் தொடங்கினர். புலிகள் செய்த தவறுக்கு நான் என்ன செய்வது? இங்கு நான் செய்த தவறு என்ன? என ஜே. ஆர் வினா எழுப்பினார்.

லங்காதீப -
29. 7. 93

## இடைக்கால நிர்வாகம்

இனப்பிரச்சனை சம்பந்தமான அரசியல் பிரச்சனையில் தற்போது 'இடைக்கால நிர்வாகம்' என்ற கோரிக்கையும் அடிபடத் தொடங்கியுள்ளது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனப்பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வு எட்டும் வரை வடக்கு – கிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே அக் கோரிக்கையாகும். போராட்டத்தை விடுத்து 'ஜனநாயக அரசியலை' தழுவியுள்ள தமிழ்க் குழுக்களே இக் கோரிக்கையை முன்வைத்துள்ளன. வடக்கு – கிழக்கில் ஏற்பட்டுள்ள அகதிகள் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை என்பவற்றிற்கு இதன்மூலம் தீர்வு காணலாம் என்பதனாலேயே இக் கோரிக்கையை தாம் முன்வைப்பதாக தமிழ்க் குழுக்கள் கூறியுள்ளன. தமிழ்க் குழுக்களிலும் EPRLF அமைப்பே இது தொடர்பாக முன்னணியில் நின்று அறிக்கைகளை விடுத்து வருகின்றது. ஏற்கனவே மாகாணசபை அரசாங்கத்தில் ருசிகண்ட EPRLF இன்னோர் தடவை அதற்குத் துடிப்பதாகவே தெரிகின்றது. முஸ்லீம் காங்ரசும் இதற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

அரசாங்க தரப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக இதுபற்றி எவ்வித கருத்துக்களும் தெரிவிக்கப்படாவிட்டாலும் அரசியலமைப்பு அமைச்சர் சொக்ஸி இவ் இடைக்கால நிர்வாகம் அரசியலமைப்புக்கு ஏற்புடையதல்ல எனக் கூறியுள்ளார். ஆனால் அரசாங்கத்தைச் சேர்ந்த சபாநாயகர் முகமட், இது ஓர் நல்ல முயற்சி என்றும் இனப்பிரச்சனைக்கான தீர்வுக்கு இது ஓர் முன்னோடியாக விளங்கும் என்றும் கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாகத்தை புலிகள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள், இதனால் இதனை நடைமுறைப்படுத்துவது கடினம் என்பது ஒருபுறமிருக்க, அரசாங்க தரப்பு இவற்றில் அக்கறை கொண்டுள்ளதற்கு இரு காரணங்கள் பிரதானமாகக் கொள்ளப்பட்டுள்ளன என்றே கூறலாம்.

ஒன்று, வடக்கு – கிழக்கு தற்காலிக இணைப்பை ஏற்றே இடைக்கால நிர்வாகத்தை செயற்படுத்த வேண்டிவரும். இது வடக்கு கிழக்கு இணைப்பு உறுதியாவதற்கு வழிவகுப்பதோடு வடக்கு கிழக்கை பிரிக்க வேண்டும் என்பதற்காக தான் எடுத்துவரும் முயற்சிகளுக்கும் குந்தகமாக அமையும்.

மற்றையது, இனப்பிரச்சனைக்கான நியாயமான தீர்வினை துரிதப்படுத்த வேண்டி வரும். அரசைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக நியாயமான தீர்வு என்ற விடயத்தை தட்டிக்கழித்தே வருகின்றது. அதனுடைய நோக்கம் தீர்வு காண்பதல்ல. தீர்வினை இழுத்தடித்து காலத்தை ஓட்டுவதே.

மொத்தத்தில் இது ஓர் பயனற்ற முயற்சியாகும்.

இக்கூற்றினை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுவும் அண்மையில் அங்கீகரித்துள்ளது.

இவருடைய இக் கூற்றினை சிங்கள இனவாத அமைப்புகளும் பாராட்டியுள்ளன. சிங்கள பாதுகாப்பு அமைச்சின் தலைவர் காமினி ஜயசூரிய இதுபற்றி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள பாராட்டுத் தந்தியில் இலங்கையில் இனப்பிரச்சனை இல்லை, பயங்கரவாதப் பிரச்சனையே உள்ளது என்றும், அப் பயங்கரவாதத்தை முழுமையாக அழித்தொழிப்பேன் எனவும், நாட்டை பிளவுபட இடமளிக்காத அதேநேரம் வடக்கு – கிழக்கை இணைக்கமாட்டேன் எனவும் தங்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை சிங்கள மக்கள் மதிக்கிறார்கள் எனவும், இந்தக் குறிக்கோளில் வெற்றிபெற சிங்கள மக்களின் முழு ஒத்துழைப்பும் தங்களுக்குக் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இக் கருத்துப் பற்றி பெரிதாக கூறாவிட்டாலும் வடக்கு – கிழக்கு இணைப்பை அங்கீகரிக்கவில்லை. பாதுகாப்பு, காணி உரிமை போன்ற விடயங்கள் தீர்வில் அடங்குவதற்கும் சம்மதிக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை அங்குள்ள இரு அணிகளில் சந்திரிக்கா அணியும் அதனுடன் சார்ந்த இடதுசாரிக் கட்சிகளும் வடக்கு – கிழக்கு இணைப்பை அங்கீகரிக்கின்ற நியாயமான தீர்வை விரும்புகின்றன. இவ் அணியினுடைய வற்புறுத்தலினாலேயே கட்சியின் அண்மைக்கால போராட்டங்களில் 'யுத்தத்தை நிறுத்து' என்ற கோரிக்கையும் பிரதானமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

மற்றைய அணியான அநுரா அணியைப் பொறுத்தவரை அது தீவிரமான இனவாத அணியாக உள்ளது. இனவாத பேச்சுக்களை பேசுவதிலும், இனவாத அறிக்கைகளை வெளியிடுவதிலும் இவ் அணியே முன்நிற்கின்றது. தற்போது சந்திரிக்காவின் அணி பலமானதாக இருந்தாலும் ஏற்கனவே பலம்பெற்ற அநுரா அணியினரால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளை உடனடியாக மாற்ற முடியாத நிலையிலேயே இவர்கள் உள்ளனர்.

## இனப்பிரச்சனையும் பயங்கரவாதப் பிரச்சனையும்

இலங்கையில் இனப்பிரச்சனை இல்லை, பயங்கரவாதப் பிரச்சனையே நிலவுகின்றது என அண்மைக்காலமாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கூறிவருகின்றார். இனவாதப் பிரச்சனையொன்று இந்நாட்டில் இருக்குமானால் யாழ்ப்பாணத்தவர்கள் கொழும்பு போன்ற பிரதேசங்களில் வந்து ஒரு வீட்டில் நான்கு ஐந்து பேர் வசிக்க முடிவதும், நாடு முழுவதும் செல்வதும் எவ்வாறு முடியும். எனவேதான் இங்கு இனப்பிரச்சனை இல்லை என கூறிவருகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியினுடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்க் கட்சிகள் மட்டும் ஜனாதிபதியின் கூற்றிற்கு பலமான கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. அதுவும் தமிழ்க் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் குமார் பொன்னம்பலம் இன்னும் ஒருபடி மேலே சென்று ஐ. தே. கட்சி தமிழ் உறுப்பினர்களான மோதிலால் நேரு, திருமதி புலேந்திரன், கனேசலிங்கம் ஆகியோர் கட்சியிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் தமிழ்க் குழுக்கள் அரசுக்குக் கொடுத்து வரும் ஆதரவை நிறுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கூட ஒருபோதும் நேரடியாக இனப்பிரச்சனை இல்லை எனக் கூறவில்லை. 'இனப்பிரச்சனை உண்டு, அதனை தீர்ப்பதற்கு நான் முயற்சி செய்வேன்' என்று கூறிக்கொண்டு மறுபக்கத்தில் யுத்தத்தை நடாத்தி பொருளாதாரத் தடையையும் விதித்துக் கொண்டிருந்தார். வடக்கு – கிழக்கு இணைப்புப் பிரச்சனை தொடர்பாகவும் கூட 'எமது கட்சி இணைப்புக்கு எதிர் என்றாலும் பாராளுமன்றத் தெரிவுக்குழு இணைப்பை ஏற்றுக் கொண்டால் அதனை பரிசீலிக்கத் தயார்' என்றே கூறிவந்தார்.

ஆனால் இன்றைய ஜனாதிபதி மாத்திரம் நேரடியாக – இனவாதத்தைக் கக்கி – 'இனப்பிரச்சனையே இல்லை' என்றும் 'வடக்கு – கிழக்கு இணைப்பை உயிருள்ளவரை எதிர்ப்பேன்' என்றும் கூறிவருகின்றார்.

## தடுக்கப்படும் மக்கள் பிரதிநிதி

மத்திய மாகாண சபைக்கு மலையக மக்கள் முன்னணி சார்பில் தெரிவுசெய்யப்பட்ட அதன் தலைவர் சந்திரசேகரன் தடுப்புக் காவலை காரணம் காட்டி நீண்டகாலமாக சத்தியப்பிரமாணம் எடுக்கவிடாது தடுக்கப்பட்டார். பின்னர் ஆகஸ்ட் 17ம் திகதி சத்தியப்பிரமாணம் எடுக்கலாம் எனக் கூறப்பட்டது. அவரது ஆதரவாளர்கள் பலர் வான்களிலும் லொறிகளிலும் மாகாணசபை வளவினுள் வரவேற்பதற்காகக் காத்து நின்றனர். ஆனால் திடீரென்று சத்தியப்பிரமாணம் செய்வதற்கு செல்லும் உரிமை தடுக்கப்பட்டது. வரவேற்க நூற்றுக்கணக்கில் வந்த ஆதரவாளர்கள் ஏமாற்றப்பட்டனர்.

கடைசி நேரத்தில் மாகாண சபைக்கு செல்லும் உரிமை தடுக்கப்பட்டது தொடர்பாக வீரகேசரியும், தினகரனும் வெவ்வேறு விதமான காரணங்களைக் கூறின. வீரகேசரி, சந்திரசேகரனின் பாதுகாப்புக்கும் சந்திரசேகரனுக்கு பாதுகாப்பாக செல்லும் படையினரின் பாதுகாப்புக்கும் குந்தகம் விளையலாம் எனக் கருதியே செல்வதினின்று தடுக்கப்பட்டது எனக் கூறியது. ஆனால் தினகரன் சந்திரசேகரன் சத்தியப்பிரமாணம் எடுக்கச் செல்வதால் மலையகத்தில் அமைதிக்குப் பங்கம் ஏற்படலாம் எனக் கருதியே தடுக்கப்பட்டார் எனக் கூறியது.காரணம் எவ்வாறு இருந்தபோதும் சந்திரசேகரனின் மாகாணசபைப் பிரசன்னம் மலையகத்தில் சந்திரசேகரனின் செல்வாக்குக்கு வழிவகுக்கும் எனக் கருதியே அவர் தடுக்கப்பட்டார் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.



சந்திரசேகரன் மாகாண சபைக்கு வந்தால் மலையக மக்கள் பற்றிப் பேசுவார். அவர்களின் போராட்டம் பற்றி தீவிரம் கலந்த குரலில் பேசுவார். தொண்டமானின் நரித்தனங்கள் பற்றிப் பேசுவார். எல்லாவற்றிற்கும் மேலாக சிறையில் நடந்த சித்திரவதைகள் பற்றிப் பேசுவார். இப் பேச்சுக்கள் பத்திரிகைகளிலும் முக்கிய இடம்பெற்று மலையகமக்கள் மத்தியில் சந்திரசேகரன் பாலான ஈடுபாட்டை அதிகரிக்கும். அரசை அம்பலப்படுத்தும் அதேவேளை தொண்டமானையும் அம்பலப்படுத்தும்.

இவ் விடயங்கள் அரசுக்கும் இ.தொ.காங்கிரசுக்கும் நன்கு தெரியும். இதனாலேயே சத்தியப்பிரமாணம் எடுப்பதிலிருந்து தடுக்கப்பட்டதோடு அவர் சம்பந்தமான வழக்கும் இழுத்தடிக்கப்படுகின்றது. இவரது வழக்கை விசாரணை செய்யும் நீதிபதி விக்கினேஸ்வரன் கூட ஒருதடவை அரசியல் காரணங்களுக்காக அரசு தரப்பினர் வழக்கை இழுத்தடிக்கின்றனர் எனக் கூறியிருந்தார்.



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மக்கள்

– யதார்த்தினி

ஒவ்வொன்றின் நீதி வழும்
உருவாக்கமும் அவர்கள்
இன்னொன்றின் வார்த்தைகளை
மாற்றமே கையில் வைத்திருப்பதால்.

அல்லது இப்போ
இன்னொன்றை எங்கள் சிறுவர்கள்
இழந்ததிலே மண்ணில் வீடு
கட்டுவதேயில்லை.
அதனாலோ! பாவம்
என்னவோ? அவர்கட்கு
சுதந்திரத்தை நேரம் இல்லை.
உருவாக்குவதாய்
ஜனநாயகம் பாஸிசத்தின்
தொலைக்கப்பட்டது உதாரணமாய்
நண்பன் சொன்னான் நாங்கள்
இழப்புக்கள் உள்ளோமாம்
தவிர்க்கப்பட நன்றி
முடியாதவை எழுதியவர்கட்கும்
சிலர் சரியென்றனர் எழுதப்போகிறவர்கட்கும்
பலர் மௌனித்தனர்.

சந்தோஷம்
ரொம்ப
நாவை மறந்து சந்தோஷம்
நீண்ட நாள். நாம்
கண்களையும் தான். அதற்காவது
காதுகள் டமாரம் பயன்பட்டோமே?
எது நடந்தாலும்
மூளையிருக்கா?
மனம் வருந்துகிறோம்
எழுதியவர்கட்கும்
யாரும் கேட்பதே எழுத போகிறவர்கட்கும்.
இல்லை
அது யாருக்கும் நாங்கள் சாதாரண மக்கள்
தேவையில்லை எம்மால்
என்பதால். இதுதான்
முடியும்
சிறுவர்களை என
காணும் போது பலர் கதறுகிறார்கள்.



## இரு மனங்கள் தரும் ஒரு நெருடல்

நேரம் 6 மணியைத் தாண்டி விட்டாலும் வெயில் பயங்கரமாக இருந்தது.

'இதைவிடக் குளிர் நல்லது'

நினைத்தவாறு காலியாக இருந்த சீற்றில் இருந்தேன்.

ரயில் வெளிக்கிட இன்னும் 5 நிமிடம் இருந்தது. சேட்டின் இரண்டு தெறிகளை கழற்றிவிட்டு... ஏதாவது படிக்கலாம் என்று புத்தகத்தை எடுக்க.... ஒருவன் அவசரமாக ஓடி வந்தான். சுவிஸ் நாட்டுக்காரன். நிறம் தான் சொன்னது. மற்றபடி உடுப்புகள் தோய்த்திருந்தாலும் 'அயன்' பண்ணாமல் கசங்கி வெளிறி இருந்தது. ஆனால் ஒழுங்காக உடுத்தியிருந்தான்.

சீற் காலியா? எனக் கேட்டுவிட்டு... தன் மார்போடு அணைத்துக் கொண்டு வந்த 'Migros Bag' இனை (நம் நாட்டின் கடதாசி பாய்க் போன்றது) சீற்றில் வைத்துவிட்டு, அவசர தோரணையில் வெளியே எட்டிப் பார்த்தான். ஏதோ அவனைக் கவனிக்க வேண்டும் போலிருந்தது எனக்கு! படிக்கிற சாட்டில் கவனித்தேன்.

ஒரு பெண்ணும் அவசரமாக வியர்க்க விறுக்க ஓடி வந்தாள். இப்போதுதான் அவன் முகம் மலர்ந்தது. அவள் அவனைவிட 'கேவலமாக' இருந்தாள், மெலிதாய்... கன்னங்கள் இரண்டும் ஒட்டி...... கறுப்பாக இருந்தால் அவள் எமது நாட்டின் கிராமத்து சாதாரண பெண்தான்.

இவர்கள் தான் இந்த நாட்டின் நடுத்தர வர்க்கங்களோ??

இவன் அவளது யக்கற்றைக் கழற்றிக் கொழுவினான்.

சரியான வேலையா? –அவன்.

ஓமோம் சரியான வேலை –அவள்.

அவளது நெற்றியில் வழியும் வியர்வையை அவன் லேஞ்சியால் துடைத்து விட்டான். தலையைத் தடவி நெற்றியில் முத்தமிட்டான். ஆயாசமில்லாமல் இருந்தது. தான் கொண்டு வந்த யூஸ் ஐ எடுத்து அவளுக்குக் கொடுத்தான்.

எனக்கு ஒரு உதவி செய்வாயா? –மீண்டும் அவன்.

பாரமாக இருக்கிறது. இதனுள் இருக்கும் புத்தகங்களை உனது பாய்க்கினுள் வைப்பாயா?

கேட்டதை விட அவனது கண்கள் மிகவும் கெஞ்சின. அவனை செல்லமாக இடித்துவிட்டு... ஆம் என்றாள். 'Birds of Costa Rica' என்ற பெரிய புத்தகத்தையும் இன்னொரு புத்தகத்தையும் எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு... மிகவும் நன்றி என்றான்.

எங்கள் தமிழ்க் குடும்பங்களில் மனைவி வேலையால் வந்து இருக்கக்கூட நேரமில்லாமல் வீட்டு வேலைகளையும், கணவனையும் பிள்ளைகளையும் கவனித்தபடி –கணவனின் எரிச்சலையும் வாங்கிக் கொண்டு– ஓடியாடி வேலை செய்வதையும் நினைத்தேன்.

இவர்களிடமிருந்து நல்லது சிலவற்றையாவது நாம் கற்க வேண்டாமா?

ரயில் ஒரு வெளியில் ஓடிக் கொண்டிருந்தது.

வெளியில் சுதந்திரமாய்ப் பறந்து திரியும் பறவைகளைக் காட்டி அவளுக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான் அவன்.

– ஆனந்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தாடல்

## தேசிய இனப் பிரச்சினை

# மாறனுக்கு பதில்!

தேசிய சக்தியும், பாசிச சக்தியும் சில குறிப்புக்கள் என்ற தலைப்பில் மனிதம் 20-இல் கருத்தாடல் பகுதியில் வெளிவந்திருந்த என் கட்டுரை தொடர்பாக இதழ் 22- இல் கனடாவில் இருந்து மாறன் என்பவர் எழுதிய விமர்சனம் படித்தேன்.

உயர்ந்த சமுதாயத்தைப் படைக்கும் நோக்கில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடாத்த வேண்டிய வரலாற்றுக் கடமையைக் கொண்டிருக்கும் நாம், எமது மண்ணில் மட்டுமன்றி சர்வதேச அரங்கிலும் கூர்மையடைந்திருக்கும் தேசியப் பிரச்சனைகள் பற்றியும், இதன் வரலாற்று அனுபவங்கள் பற்றியும் இது குறித்த மார்க்சிச பாரம்பரிய அணுகு முறைகள் பற்றியும் ஒரு திறந்த மனத்துடனான ஆழமான படிப்பும், விவாதமும் இன்று நிகழ்த்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த அடிப்படையிலேயே முன்னைய எனது கட்டுரையில் மார்க்சிசம் தேசிய நிகழ்வுப் போக்கை புரிந்து கொள்வதில் தோல்வியைத் தழுவியிருக்கிறது. என்ற எப்ரகிம் நிம்னியின் கருத்தைச் சார்ந்தும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலிகளை மதிப்பிடுவதன் அவசியம் குறித்தும் சில கருத்துக்களை கூற முனைந்திருந்தேன். ஆயினும் என் கட்டுரையில் துருத்தி நின்ற அறிஞர்களின் மேற்கோள்களும் கட்டுரைக்கு அழுத்தம் சேர்க்கும் வகையில் போதிய ஆதாரமான தரவுகளையும் அளிக்காமையையும் விமர்சனமாகச் சுட்டும் மாறன்: மார்க்சிசத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதையோ கேள்விக்குட்படுத்துவதையோ திரிபு வாதம் என்கிறார்கள் என்ற ஒரு பகுதிக் கருத்தை தூக்கிப் பிடித்தபடி திரிபுவாதம் என்பதற்கு புதுவகையிலான ஒரு விளக்கத்தைக் கொடுப்பதாகவும் புரட்சிப் பாதையை சீர் குலைத்து விட்ட திரிபு வாதத்திற்கு ஒட்டு மொத்தமாக வக்காலத்து வாங்கி அதை வளர்ச்சிப் போக்காகக் காட்டும் கைங்கரியத்தை செய்துள்ளேன் என்றும் சாடுவதோடு கட்டுரையைத் தொடங்குகிறார் மாறன்.

உண்மையில் மார்க்சிச இயங்கியல் ஆய்வு முறை என்பது என்ன? உலகம், வரலாறு, சமுதாயம் எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதும் விமர்சிப்பதும் மட்டுமா? இந்த உலகை சமுதாயத்தை ஒடுக்குமுறைகளிலிருந்தும் அடக்குமுறை சுரண்டல் கொடுரங்களிலிருந்தும் எவ்வாறு விடுவிப்பது, புரட்சிகரமாய் மாற்றுவது என்ற சிந்தனையையும் உள்ளடக்கியதல்லவா?

இது குறித்து மாறன் ஆழமாக பார்க்காமல் செல்வது ஏன்? குருச்சேவும் டெங்சியா பிங்கும் மார்க்சியத்தை வளர்த்தா சென்றார்கள் அப்படி கட்டுரையில் எங்கேயேனும் சொல்லியிருக்கிறேனா! இது மாறனின் பிரத்தியேக கண்டு பிடிப்பு. உதட்டில் மார்க்சியத்தையும் நடைமுறையில் அதன் புரச்சிகரத் தன்மையை மழுங்கடித்த அப்பட்டமான திரிபுகளானவர்கள் தாம் இந்த குருச்சேவும் டெங்சியா பிங்கும்.

திரிபுவாதம் என்றால் என்ன? இது வரலாற்றில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் துரோகத்தனங்கள் எவை? இது பற்றி ஓர் ஆழமான படிப்பையோ கிரகிப்பையோ மேற்கொள்ளாமல் வாய்ப்பாடாக ரசியாவில் ஸ்டாலினிக்குப் பிறகும் சீனத்தில் மாவோக்குப் பிறகும் திரிபுவாதம் ஏற்பட்டது என்று இன்னமும் உச்சதாணம் செய்வதாவதும் மார்க்சிசத்தை திரிபுவாதத்தில் இருந்து மீட்பதற்கு பதிலாக இன்னும் அதற்கு நெருக்கடிகளையே உண்டு பண்ணும்.

மார்க்ஸ் ஏங்கல்ஸ் ஆகியோரின் பழைய வரையறுப்புக்களை புதிய நிலைமைகளில் அதற்கேற்றாற் போல் மேம்பாடு ஏதேனும் செய்வது புரட்டல் வாதம் ஆகும். என்றழைத்த ஜீனோவிய வாதகளுக்கு எதிராக ஸ்டாலின் கடுமையாக போராடியமையும். ஸ்டாலினிடம் இயங்காவியல் நிலைப்பாடு இருப்பதாக மாவோ ஸ்டாலின் மீது விமர்சனம் வைத்தமையும் இங்கு மாறனுக்கு சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமாகும்.

இங்கே எமது பார்வையை சற்று விசாலப்படுத்துவோமாயின்

மார்க்ஸ் எங்கல்ஸ் படைத்த மார்க்சியக் கோட்பாடுகளை லெனின், ஹில்:.பெர்டின், புகாரின், புளாக்கனோவ், காவுட்ஸ்கி, ஒட்டோபவர், றொட்ஸ்கி, ஸ்டாலின், மாவோ ஆகிய மார்க்சிசர்கள் பல்வேறு மட்டங்களுக்கு வளர்த்துச் சென்றார்கள். இன்னும் நவீன மார்க்சிசர்கள் என அழைக்கப்படும் சார்த்தர் லுசாச் கிராம்சி, அல்துாஸர், சார்ல்ஸ் பெத்தலகைம் போன்றோர்களும் மார்க்சியத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்திருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் புரட்சியாளர்களாக, சிறந்த தத்துவ வாதிகளாக விளங்கியவர்கள் பின்பு புரட்டல்வாதிகளாக மாறிப் போய் விட்டார்கள். என்பதற்காக அவர்களின் நல்ல


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துக்களையும் மதிப்பிடாமல் போய்விட முடியுமா என்ன?

ஒடுக்கப்பட்டு அடக்கப்பட்டு அடிமையின் தளைகளையும் வறுமையையும் சுமந்து நின்ற உலக மக்களுக்கு விடுதலையையும் சமத்துவமான வாழ்வையும் போதித்து கலங்கரை விளக்காக நிமிர்ந்து நின்ற சோசலிச ரஷ்சியாவும், சீனாவும், மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கியூபா, வியட்நாம், நிக்கரக்குவா என்று புரட்சிக்கு பிந்திய சமுதாயங்கள் எல்லாம் இன்று நம்பிக்கைகளை சிதைத்தோடு புரட்சிகரத்தத்துவமாகிய மார்க்சியத்தையும் நெருக்கடி நிலைமைக்குள் தள்ளியிருக்கிறது. இந் நிலையில் இருந்து மார்க்சிசத்தை விடுவித்து. அதன் புரட்சிகரத் தன்மையை துலங்கச் செய்ய வேண்டுமாயின் புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்கள் பற்றிய கறாரான ஆழமான படிப்பை நாம் மேற்கொள்ள வேண்டும்.

மார்க்சிசம் என்னும் சமூக விஞ்ஞானம் புரட்சிகர செயலுக்கான வழிகாட்டி என்று நாம் புரிந்து கொள்ளும் போது. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், ட்றொஸ்கி, மாவோ இவர்கள் எல்லோரும் புரட்சியாளர்கள் புரட்சிகர சமூக மாற்றத்திற்கான வழிகாட்டிகள். மாறாக இவர்களையும் இவர்களின் படைப்புக்களையும் வழிபாட்டுக்குரியவையாக கருதும் போக்கே இன்னும் நிலவச் செய்கிறது. நான் கூட ஒரு கட்டத்தில் இந்த வட்டத்துள் நின்றவன்தான். ஸ்டாலின், மாவோவை விமர்சிப்பதோ, மார்க்சிசம் தேசிய நிகழ்வுப் போக்கை புரிந்து கொள்வதில் தோல்வியை தழுவியிருக்கிறது என்று குறிப்பிடுவதாவதோ மார்க்சிசத்தின் ஆற்றலையோ புரட்சிகரத்தன்மையையோ குறைத்து மதிப்பிடுவதாக அர்த்தப்பாடாது.

இந்த வெளிச்சத்திலேயே மாறனின் விமர்சனத்துக்கு தொடர்ந்து பதில் எழுத முனைகிறேன்.

கட்டுரையின் முன் பகுதி முழுவதும் மாறன் வாதிடும் சாரம்:-

சோவியத் யூனியன் வீழ்ச்சியோ, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உடைவுகளோ தேசியப்பிரச்சனையை தீர்ப்பதில் மார்க்சிச அணுகுமுறையின் தோல்வியைக் காட்டவில்லையாம். மாறாக இவை எல்லாம் முதலாளித்துவத்தின் மீட்சியும் திரிபுப்பாதையின் பரிசு என்றே சாதிக்கிறார். இந்த அடிப்படையிலேயே தேசிய நிகழ்வுப் போக்கை புரிந்து கொள்வதில் மார்க்சிசம் தோல்வியைத் தழுவியிருக்கிறது என்ற எப்ரகிம் நிம்னியின் கருத்தை மறுதலிப்பதோடு இதை ஆதாரபூர்வமாக நிறுவக் கோருகிறார். இங்கே தான் நான் மாறனைப் புரிந்து கொள்கிறேன். மாறனைப் பொறுத்தவரை தேசியப் பிரச்சனை குறித்த மாபெரும் வரலாற்றுத் தோல்வி என்ற எப்ரகிம் நிம்னியின் கட்டுரையே, சார்ல்ஸ் பெத்தலகைம் போன்றவர்களின் புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்கள் (ரசியா, சீனா, கிழக்கு ஐரோப்பா நாடுகள்) பற்றிய ஆய்வு நூல்களையே நிறப்பிரிகையில் வெளிவந்த (மார்க்சிசம்–தேசிய இனப்பிரச்சனை–இன்று கவனத்தில் எடுக்க வேண்டிய படிப்பினைகள்) கட்டுரைகளையோ, விவாதங்களையோ மாறன் படிக்காமல் இருப்பார் என நான் கருதவில்லை. இந்த கட்டுரையாளர்கள் மாறன் கோரும் ஆதாரபூர்வமான வரலாற்று ஆய்வின் அடிப்படையிலேயே மார்க்சிச இயங்கியல் ஆய்வின் அடிப்படையிலேயே இத்தகைய ஆய்வினைச் செய்திருக்கிறார்கள்.

மாறன் இத்தகையஆய்வு நூல்களை (நான் மேலே குறிப்பிட்ட) படித்த பிற்பாடு தான் இந்த கட்டுரையை எழுதியிருப்பாராயின் அவரிடம் ஓர் வேண்டுகோள். தேசிய பிரச்சனை குறித்த அணுகுமுறையை மாறன் புரிந்து கொண்ட வகையில் (திரிபுவாதத்திற்கு முன்) தேசியப்பிரச்சனைகளை எவ்வாறு அணுகியது என்பதை ஆதாரபூர்வமாக முன்வைக்கும்படி கோருகிறேன். இருந்தும்.நான் தெரிந்து கொண்ட வரலாற்று அடிப்படையில் மார்க்சிசம் தேசிய நிகழ்வுப் போக்கு புரிதல் குறித்து சில தரவுகளை சுருக்கமாக தொகுத்து முன்வைக்கிறேன்.

மார்க்சிச ஆசான்களான–

மார்க்ஸ், ஏங்கல்ஸ்சைப் பொறுத்தவரை தேசியப் பிரச்சனை குறித்து பொதுவான கோட்பாட்டு உருவாக்கத்தைச் செய்யவில்லை தேசம், மொழி உருவாக்கத்திற்கான முன்மாதிரியாக பிரஞ்சு தேசத்தையே கண்டார்கள். (பல்வேறு பண்டைய பிராந்திய மொழிகளை நசுக்கி, நசுக்கி பாரீஸ் நகரத்தார் மட்டுமே பேசிய பிரஞ்சு மொழியைக் கொண்டு நிறுவப்பட்டதுதான் பிரஞ்சு தேசம்) மார்க்ஸ்சும், ஏங்கல்ஸ்சும் வர்க்கப் போராட்டத்திற்கே முன்னுரிமை தந்தார்கள். பிற்கால கட்டத்தில் ஜாரியத்திடமிருந்து போலந்து விடுதலை அடைவதற்கான போராட்டத்தை ஆதரித்தமையும், அயர்லாந்து விடுதலை பெறுவது அவசியமானது என்ற அவர்களின் கருத்தானதும் தேசியப் பிரச்சனையில் அவர்கள் பார்வையில் முக்கிய திருப்பமாகிறது.

தேசியப் பிரச்சனையை ஒரு முக்கிய பிரச்சனையாகக் கருதி ஒருவிவாத மேடைக்கு கொண்டு வந்தவர்கள் போல்சுவிக்குகள் தான் 1902 இல் பிளாக்கனோவ் ஆல் வரையப்பட்ட சுயநிர்ணயம் என்ற ஜனநாயக கோட்பாட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெனின் உயர்த்திப் பிடித்தார். நூற்றாண்டு பாரம்பரியத்தில் ஜாரிய ஒடுக்கு முறையின் கீழ் நசுங்கிய தேசிய இனங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையை கொடுப்பதினுடாகத்தான் பிற தேசிய இனங்களை இணைத்து வர்க்கப் போராட்டத்தை வெற்றி கொள்ள முடியும் என்று லெனின் கருதினார்.

போல்சுவிக்களின் தேசியப் பிரச்சனை பற்றிய புரிதலில் ஆரம்பத்தில் ஸ்டாலினிடம் தூரதரிசனம் இருந்தது. ஆயினும் ஸ்டாலின் தேசிய இனப்பிரச்சனையின் கமிசராக இருந்த போதும் சோவியத் யூனியனுக்கு தலைவரான பிற்பாடும் தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தை மறுதலிப்பவையாகவே நிகழ்வுகள் அமைந்தன. தேசியப் பிரச்சனை குறித்து அதிகமாவே எழுதிய ஸ்டாலின் பிற்பட்ட காலத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணயத்துக்கு எதிராக மேற் கொண்ட நடவடிக்கைகளை ரசிய பெருந் தேசிய வெறி என்று லெனின் கண்டித்தமையும் இங்கு குறிப்பிட்டு சொல்ல வேண்டும். தேசிய இனங்களுக்கு சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டை ஸ்டாலின் மீறியமைக்கு ரசிய பெருந் தேசிய வெறி காரணம் மட்டுமல்ல. அவரிடம் பதிந்திருந்த பொருளாதாரவாத கண்ணோட்டமும் இன்னொரு காரணம் என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். ஆக, சோவியத்யூனியனில் தேசியப் பிரச்சனை சரியாக தீர்க்கப்படாமையும் சுயநிர்ணயம் என்ற கோட்பாடு அர்த்தமிழந்தும் இருக்க தேசிய இனங்களின் உணர்வுகளை அமுக்கி சோசலிசம் கட்டப்பட்டது. லெனின் முன்வைத்த சுயநிர்ணயம் என்ற கோட்பாடு அவர் காலத்திலேயே நெருக்கடியைச் சந்தித்ததும் ரசிய பெருந்தேசிய வெறி ஸ்டாலின் தலைமையில் சோசலிச முகத்துடன் பிற தேசிய இனங்களின் குரல்வளை நெரித்தமையும் லெனின் தேசியப் பிரச்சனையில் நெகிழ்வுப் போக்கைக் காட்டும் படி ஸ்டாலினை பணித்தமையும், பதிலுக்கு ஸ்டாலின் லெனினை தேசிய தாராளவாதி என்று குற்றம் சாட்டியமையும் இங்கு குறித்துக் கொள்வோம். முடிவாக இத்தகைய மார்க்சிச பாரம்பரிய அணுகுமுறையில் இருந்து நாம் எதைப்புரிந்து கொள்கிறோம். தேசியப் பிரச்சனை குறித்து சரியான ஒரு கோட்பாட்டு உருவாக்கம் இல்லை. அரசியல் சுதந்திரத்தை அங்கிகரிப்பதனுடாக தேசிய இனப்பிரச்சனையின் ஆணிவேரையே தகர்த்துவிடலாம் என்ற லெனின் வார்த்தைகளின் பின்னால் தேசிய இனங்களின் கலாச்சார மனோவியல் பண்புகள் கவனிக்கப்படாமல் போனமையும், அதிகாரங்கள் மொஸ்கோவில் குவிக்கப்பட்டமையும், சுயநிர்ணயம், ஜனநாயக கோட்பாடு அர்த்தமிழந்து போனமையும் பற்றிய இன்றைய விமர்சகர்கள் முன்வைக்கும் கருத்தை நாம் நுனிகிப் பார்க்க வேண்டும். முக்கியமான அம்சம்: தேசியப் பிரச்சனை, தேசிய நிகழ்வுப் போக்கு என்பது ஒரு சிக்கலான பிரச்சனை என்பதால் இதை பொருளாதார அளவுகோல் மட்டும் கொண்டு மதிப்பிடாமல், இதற்கும் மேலாக அதை ஒரு தனிக்கட்டமைப்பாக கொண்டு இதன் பல்வேறுபட்ட முகங்களையும் இனங்கண்டு ஸ்தூலமான நிலைமைகளில் இதற்கான ஒரு பொதுக் கோட்பாட்டை முன்வைப்பதினுடாகத் தான் இது தீர்க்கப்பட முடியும்.

அடுத்து சோசலிச கட்டுமானப் பாதையிலும் மாபெரும் எதிர்ப்பு யுத்தத்தின் போதும் அந்த மக்கள் எவ்வாறு ஒரே மனிதராக அணிதிரண்டு நின்றார்கள் என்று கூறும் மாறனின் கருத்துக் குறித்து......

ஸ்டாலின் தலைமையிலான சோசலிச கட்டுமானப் பாதை, தேசிய இனங்களின் குரல்வளை நெரிப்பு, தீவிர ஜனநாயக மறுப்பு, அதிகாரம் மையப்படுத்தல் போன்ற காரணிகளினூடே வேகமாக கட்டப்பட்டதொன்றுதான். மாறன் கருதுவது போல் மக்கள் இங்கே ஒரே மனிதராக திரண்டிருக்கவில்லை. பல்வேறு முரண்பாடுகளினூடே பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தினூடே சோசலிசம் கட்டப்பட்டது. கனரக தொழில் உற்பத்திக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டு விவசாயிகள் கொடுரமாக கசக்கிப் பிழியப்பட்டார்கள். என்பதே வரலாற்றின் கசப்பான உண்மை. கொடுரமான பலாத்காரமும் இந்த பலாத்கார முகங்களை வெறுத்த விவசாயிகள், ஆயிரக்கணக்கில் தமது கால்நடைகளைக் கூட தாமே கொன்றொழித்தமையும் மாறன் சொல்லும் ஒரே மனிதராக திரண்ட மக்களின் செயற்பாடுகளில்தான் அடங்குகிறதா? இங்கே நான் கொடிய குல்லாக்களுக்காக வக்காலத்து வாங்கவில்லை. மாறாக தீவிர ஜனநாயக மறுப்பு, விவசாயிகள் கசக்கி பிழியப்பட்டமை போன்ற நடைமுறையினூடாக சோசலிச கட்டு மானப் பாதையில் முரண்பாடுகள் எவ்வாறு கையாளப்பட்டது என்று ஆழ்ந்து நோக்க வேண்டும்.

மாபெரும் பாசிச எதிர்ப்பு யுத்தத்தின் போது இரண்டு லட்சம் சோவியத் வீரர்களை இழந்து உலகை பாசிச அபாயத்திலிருந்து சோவியத்யூனியன் காப்பாற்றியது என்பது ஒருமுகம். இன்னொரு முகம்: இந்த பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் மகத்தான அக்டோபர் புரட்சியினால் தூக்கியெறியப்பட்ட ஜாரிய கெடுங்கோண்மை வீரர்களான மாகா பீட்டர், இவான் போன்றவர்கள் தேசிய வீரர்களாக சவக்கிடங்குகளிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டனர். ஸ்டாலின் தலைமையிலான சோசலிச ரசியாவைக் காப்பாற்றுவதற்காக கொடுங்கோண்மை வீரர்கள் தேசிய அடையாளமாக உயிர்ப்பிக்கப்பட்டதும். யுத்தம் முடிந்த பிற்பாடு சோசலிச ரசியாவில் தேசிய வெறியை இவர்கள் கக்கி நின்றமையையும் என்னவென்பது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறாக வரலாறு கசப்பான உண்மைகளை, படிப்பனைகளை தந்திருக்கும் போது நாம் இவை எதையுமே மதிப்பீடு செய்யாமல் ஒரு வித வரலாற்று குருட்டுத்தனத்தில் நின்று கொண்டு வரட்டுவாதம், திரிபுவாதம் என்று கண்ணைக் கட்டுகிறோம். உண்மையில் இன்று நமது கடமைதான் என்ன? மார்க்சிசத்தை நெருக்கடி நிலமைகளிலுருந்து விடுவிக்க வேண்டும். இந்த நோக்கில் சோசலிச ரசியா, சீனா வரலாற்று நிகழ்வுகளை கறாரன படிப்பு செய்ய வேண்டும். இதில் இழைக்கப்பட்ட தவறுகளை சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும். இதன் மூலமே மார்க்சிசத்தின் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் இதன் புரட்சிகர தன்மையை துலங்கச் செய்யமுடியும். இதன் வெளிச்சத்தில் விடுதலை அடையமுடியும்.

மேலும் மாறனின் கட்டுரையின் இரண்டாவது பகுதி முழுவதும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலிகளை மதிப்பிடுவது குறித்தும் புதிய ஜனநாயகப் புரட்சி குறித்தும் சில நல்ல கருத்துக்களை முன்வைக்கிறார். நடைமுறையுடன் கூடிய பிரச்சனை என்பதாலோ என்னவோ இங்கு மாறனிடம் விசாலமான பார்வை தெரிகிறது.

புலிகள் குறித்த மதிப்பீட்டில் ஆழமாகவே சொல்கிறார் புலிகள் பற்றிய மதிப்பீடுகளிலிருந்து நாம் அவர்களின் ஜனநாயக விரோத பாசிச போக்குகளை அளவிட முயற்ச்சிக்க கூடாது என்று சரியாகவே வரையறுக்கிறார். புலிகளின் அகராதியில் மக்களை அணிதிரட்டி ஒரு பரந்து பட்ட ஜனநாயக போராட்டத்தை நடாத்தும் திட்டம் இல்லை என்பதையும் நாம் அறிவோம். அதே நேரம் புலிகள் பலாத்காரத்தை, பாசிசத்தை நடைமுறைப்படுத்து வதினூடாகத்தான் மக்களிடையே காலூன்றி நிற்கிறார்கள் என்று கூறமுடியாது. இங்குதான் தமிழ்த் தேசியத்தின் நலன்கள் பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் இதில் புலிகள் வகிக்கும் பாத்திரம் இவைகுறித்து சரியான மதிப்பீட்டை செய்யாது போயின் நாம் வெறும் புலி எதிர்பாளர்களாகவே இருப்போம்.

ஆகவே, தேசிய விடுதலை போராட்டத்தை சரியான திசையில் ஆற்றுப்படுத்த புலிகள் குறித்த மதிப்பீடு அவசியமானது என்பதை மீண்டும் குறித்துக் கொள்வோம்.

மேலும் மக்கள் புலிகளின் பின் அணிதிரளவில்லை என்புதுவும் புலி உறுப்பினர்களின் வயதெல்லை கணிப்பிட்டாலே புரியும் என்று மாறன் கூறுவதினூடாக அந்த இளம் சிறார்களின் தியாகத்தை குறைத்து மதிப்பிடுவதாய் போய்விடக் கூடாது. புலி இயக்கத்தில் மட்டுமன்றி இன்று பல வறிய நாடுகளில் நிகழும் ஆயுதப் போராட்டங்களிலும் சிறுவர்கள் துவக்குகளோடு நிற்கிறார்கள். எதிர்பு புணர்வை வெளிப்புடுத்துவதிலும் உணர்ச்சி அலையில் அள்ளுப்படுவதிலும் தீவிரமான பருவம். ஆழமாக சிந்திக்கவும் நிதானமாக செயற்படவும் ஆற்றல் குறைந்த பருவம். ஒடுக்குமுறையின் கொடுரம் இவர்களை ஆயுதப் போராட்டத்தில் கவர்ந்து விடுகிறது. அராஜக பாசிச நடவடிக்கைகளினுடாக போராட்ட களத்தில் நிற்கும் இயக்கங்கள் தாம் வெற்றிவாகை சூடுதலுக்கும், வெறித்தனங்களுக்கும் இவர்களை ஒரு கருவியாக பயன் படுத்திவிடுகிறார்கள். இத்தகைய இயக்கங்கள் இந்த இளம் சிறார்களை ஒரு வித மனோ நோயாளிகளாக சகோதர படுகொலைகளையே பார்த்து ரசிக்கும் வன்முறையாளர்களாக மாற்றிவிடுகிறார்கள். இந்த அடிப்படையில் தான் புலி இயக்கத்திலுள்ள சிறு போராளிகளை நாம் மதிப்பிட வேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டமா? ஐக்கியப்பட்ட புரட்சியா என்பது பற்றி......

தமிழ் இன தேசிய விடுதலைப் போரையும் ஐக்கியப்பட்ட புரட்சி என்பதையும் எதிர் எதிராக நிறுத்துகின்ற போக்கு தேசியத்தை நிராகரித்து வர்க்கம் பற்றிப் பேசிய கடந்த கால இடதுசாரிகளால் வருகின்ற மதிப்பீடு என்று தொடரும் கட்டுரையாளர். தேசிய விடுதலைப் போராட்டமா? ஐக்கயப்பட்ட புரட்சியா என்ற கேள்வியே அடிப்படையில் தவறானது என்று வாதிடுகிறார். சரி, இதுபற்றி கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

இலங்கை என்ற தேசம் என்றைக்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கான ஒரு பொதுவான தேசமாக இருந்து வரவில்லை. பிரித்தானியர்கள் தான் இலங்கை என்ற தேசத்தை உருவாக்கியவர்கள். இது வரலாறு. இன்று இலங்கை அரசு தமிழ் பேசும் மக்களுடைய தேசத்தை பலவந்தமாக அடக்கியாள்கிறது. அந்த மக்களைப் பொறுத்தவரை இந்த அடக்குமுறையில் இருந்து விடுதலை அடைய வேண்டும் என்று விழிப்படைந்திருக்கிறார்கள். இதுதான் யதார்த்தம். தமிழத் தேசிய இனவிடுதலைப் போர் என குறிப்பிடப்படும் போது இந்த விடுதலைப் போராட்டம் அந்த மக்களின் தேசியவிடுதலைக்கான போராட்டம். மாறாக ஐக்கியப்பட்ட புரட்சி எனப்படும் போது இலங்கை என்ற தேசத்துள் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் தத்தமது தணித்துவமான விடுதலையை உறுதி செய்வதோடு வர்க்க நலன் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் போராட்டமாகவே கருதப்படுகிறது.

இன்றைய ஸ்தூலமான நிலமை என்ன? தேசிய இன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*தாத்தாவின் மேல் கொள்ளை நேசம் வைத்திருக்கும் பேத்தி தனது தகப்பனின் நடவடிக்கை தாத்தாவை பாதிக்கும் போது எழும் தார்மீக உணர்வுகளால் அலைக்கழிகிறாள். அவள் அந்த இளைஞனிடம் எழுப்பும் கேள்விதான் படத்தின் சாராம்சம். எமக்கு நெருங்கியவர்களின் தார்மீக உணர்வு குறித்து சந்தேகம் எழும் போது என்ன செய்வது? என்று கேட்கிறாள். அதற்கு அவனோ தார்மீக உணர்வுதான் முக்கியம் என்றால் நபர் யாரென்பது முக்கியமில்லை என்கிறான். இறுதியில் தாத்தாவை காணாது அவர்களின் தேடுதலுடன் படம் முடிகிறது. முடிவை பலவாறு சிந்திக்க ரசிகர்களிடம் விட்டுள்ளமை சிறப்பானது. சில காட்சிகளே வந்தாலும் சிறுவனின் இழப்பால் தவிக்கும் ஸ்ரீவித்யா சிறப்பாக நடித்துள்ளார்.*

முரண்பாடு வர்க்க முரண்பாடுகளுக்கு மேலாக கூர்மையடைந்திருக்கிறது. சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் வர்க்க நலன் அடிப்படையில் ஐக்கியப்படுவதற்குப் பதிலாக இன, மத, பிரதேச ரீதியில் கூறுபட்டிருக்கின்றனர். ஒரு தேசிய இனத்தின் மீது மற்ற தேசிய இனத்திற்கு நம்பிக்கை இல்லை. இவர்களைப் பொதுமைப்படுத்த பொதுவான கட்சியோ, வேலை முறையோ இன்று இல்லை. தமிழ்த் தேசிய விடுதலைப் போர் ஒரு தசாப்தத்துக்கு மேலாக குருதியை சிந்திக் கொண்டிருக்கிறது. இந்நிலைமையில் தமிழ்மக்களிடையே உள்ள முன்னேறிய சக்திகளின் கடமை தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதுதான்.

முன்னேறிய சக்திகள் இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை சமூக முன்னேற்றத்தை நோக்கிய தளத்தில் உழைக்கும் மக்களின் வர்க்க நலன் அடிப்படையில் புரட்சிகரமாய் முன்னெடுக்க முனைகின்றன. தேசிய விடுதலைப் போராட்டம் என்ற கண்ணியை சரியாக கைப்பற்றுவதும் இந்த நிகழ்வுப் போக்கில் முன்னேறிய சக்திகள் தலையீடு செய்வதினுடாகத் தான் தமிழ், முஸ்லிம் மக்களையும். சிங்கள,மலையக மக்களையும். தேசிய விடுதலையுடன் கூடிய ஒரு ஜனநாயக புரட்சிக்கு இட்டுச் செல்லமுடியும். இங்கு முன் நிபந்தனையாக இருப்பது தமிழ் பேசும் மக்களுக்கான தேசியவிடுதலை.

வர்க்க உணர்வுகள் முனைப்புற்றிருந்த தேசங்களில் தேசிய விடுதலைப் போரை முன்னெடுத்தமையாலும், தேசிய உணர்வு முனைப்புற்றிருந்த தேசங்களில் வர்க்க விடுதலைப் போரை முன்னெடுத்தமையாலும் தோல்வியை

*இப் படத்தைப் பற்றி தனியாக எடுத்து ஆராயக்கூடிய விடயங்கள் இருக்கின்றன என்று கருதுகிறேன். இப் படம் இங்கு ஒரு உதாரணமே. ஆயினும் இப் படத்தைப் பற்றியோ இதுபோன்ற ஏனைய படங்களைப் பற்றியோ பத்திரிகைகளும் இருட்டடிப்புச் செய்து விடுகின்றன. விளம்பரமின்மையால் இவை வந்த சுவடே தெரியாமல் முடங்கி விடுகின்றன. இத்தகைய முடங்கலுக்கு எதிராக ஜான் ஏப்றகாம் போன்றவர்களின் முயற்சி குறிப்பிடத்தக்கது. அவர் இதை மக்கள் இயக்கமாகவே முன்னெடுக்க முயன்றவர். இத்தகைய படங்கள் காலூன்ற வேண்டுமானால் தரமான சினிமாவை பார்க்கவும் ரசிக்கவும் மக்களைப் பயிற்றுவிக்கின்ற கடமைகள் உண்மையில் ஒரு இயக்கமாகவே முன்னெடுக்கப்பட வேண்டும்.*

சந்தித்த தேசங்களின் வரலாற்றை நாம் படிப்பினைகளாகக் கொள்வோம். (பொலிவியா, பிரேசில், ...)

இங்கு உணர்வுதான் ஒரு தீர்க்கமான சக்தியாகிறது. ஒரு தேசத்தில் வாழும் மக்கள் தேசியம் என்ற உணர்வு பெறாத போது அவர்கள் வெறும் இனமாகவே கணிக்கப்படுவார்கள். முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை சிங்கள அரசின் ஒடுக்குமுறைகளுக்கும் மேலாக புலிகளின் தாக்குதல்கள் அவர்களை ஒரு தேசிய இனமாக விழிப்படைய வைத்திருக்கிறது. இந்த உணர்வு புறவயத் தாக்கங்களாலும் போராட்டங்களினால் வளர்த்து செல்லப்படுகிறது. தமிழ் மக்களோடு பரந்தும் தமக்கென செறிவான பிரதேசங்களையும் கொண்டும் வாழும் முஸ்லிம் மக்களின் தேசிய நலன்களை, விடுதலையை உறுதி செய்வதினுடாகத்தான் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் சரியான திசையில் முன்னேடுக்கப்பட முடியும். அதேபோல் சிங்கள மக்களிடையே முன்னேறிய சக்திகள் தமிழ்த் தேசிய விடுதலையை அங்கிகரிப்பதனுடாகத்தான் தமிழ் மக்களிடையே நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் (இன்று வரையும் கசப்பான அனுபவங்கள்) ஒரு வர்க்கப் போராட்டத்திற்கான ஐக்கியத்தையும் கட்ட முடியும். தமிழ் தேசிய விடுதலைப் போர், ஐக்கியப்பட்ட புரட்சி என்பது இரு வேறுபட்ட கட்டங்களில் நிகழ வேண்டியவை. தமிழ் தேசிய விடுதலைப் போர் முனைப்புற்றிருக்கும் நிலையுடன் ஒப்பிடும் போது ஐக்கியப்பட்ட புரட்சிக்கான ஒரு நம்பிக்கை அரும்பைக் கூட காணமுடியாத இன்றைய யதார்த்த நிலைமையில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதே நமது வரலாற்றுக் கடமையாகும். தமிழ், முஸ்லிம் மக்களின் தேசிய விடுதலைப் ரோட்டம் ஒருங்கிசைந்து சரியான திசையில் முன்னெடுக்கப் படும் போது ஏனைய சிங்கள மலையகத் தமிழ்த் தேசியங்கள் விழிப்புணர்வு பெறுவதும், அவர்களும் போராட்ட களத்தில் குதிப்பதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

மேலும் சுயநிர்ணயம், பாட்டாளி வர்க்கம், தலைமை போன்றவற்றை தெளிவற்ற வகையிலேயே குறிப்பிட்டு செல்கிறார். பிளாக்னோவ்வால் வரையப்பட்ட சுயநிர்ணயம் என்ற ஜனநாயக கோட்பாட்டை லெனின், ஸ்டாலின் வெவ்வேறு மட்டங்களில் விளக்கியமையும்,

www.tamilarangam.net

இன்றும் சில மார்க்சியர்கள் லெனினின் தேசிய சின்னங்கள் சுயநிர்ணயக் கோட்பாட்டை ஒவ்வொரு தரப்பினரும் தம் பங்கிற்கு ஏற்ற வகையில் இந்நாள் வரையில் வியாக்கியானப் படுத்தியே வருகின்றனர்.

ஒரு தேசிய இனத்தின் முழுமையான சுதந்திரத்தை எந்தவித அந்நிய தலையீடுகளும் அற்ற வகையில் அங்கிகரிக்குமாறு சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டை மாறன் பயன்படுத்துவாராயின் இது சிறப்பாக இருக்கும். மற்றும் பாட்டாளி வர்க்கம்,பாட்டாளி வர்க்கத் தலைமை என்பது குறித்தும் போதிய ஆய்வினுடாக குறிப்பிடுவாராயின் அதைவிளக்கக் கோருகிறேன்.

எமது தேசத்தில் பாட்டாளி வர்க்கம் என்ற ஒன்று உண்டா? அல்லது உழைக்கும் மக்களைத்தான் பாட்டாளி வர்க்கம் என்று அழைக்கிறோமா? இந்த உழைக்கும் மக்களைக் கூட இன்று தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கக் கூடிய வலுவான ஒன்று திரண்ட சக்திகளாக இருக்கிறார்களா? இவை குறித்து ஸ்தூலமான ஆய்வை நாம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

– மூ.சிவகுமார்

## பிரியமானவளுக்கு

வணக்கம்,
பனித்துளிகள் துளிர்த்த
அந்தக் காலை வேளையில்
கண்ணீரால் நிரம்பிய
உன் கண்களை மட்டுந்தான்
இறுதியாக கண்டது.

அதற்குப் பின்னால்
காலையும் இல்லை ..... பனியும் இல்லை.
செதுக்கிய சிற்பமாய் பல்கலைக் கழக
மண்டபத்தினுள்
நீயும் நானும் உட்கார்ந்திருந்து .....
ஒரே பாசலில் உண்டு ......
இப்போது நினைவுகளுக்காக உதவுகிறது.

அன்பே
அந்த ஒற்றைக் கல்.
வல்லிபுரக் கோயில் வளாகம்
நல்லூர்க் கந்தன்
நாகதம்பிரான் ஆலயம்
உஸ்மானியா பள்ளி
செபமாலை மாதா எல்லாம்
இனி அடுத்த தலைமுறையின்
ஆராய்ச்சிக்காய் ......
புதையுண்டு போய்க் கொண்டிருப்பவை.

முத்த வெளியில்
ஓர் நாள் செல்லடிக்குள் அகப்பட்டு ....
இருவரும் நிலத்தில் புரண்டு .....
நெருஞ்சி முள் அவஸ்த்தைப்பட்டு .....

மேரி!
மறக்க முடியாதவை
அவை.
எங்கள் தேசத்தைப் போல.
பிரிய மாட்டோம்
என்றிருந்த எங்களை
பிரித்து விட்டவர்கள்
வாழ்கிறார்கள்.
நம் காதல் மட்டும்
கண்ணீருக்குள்.
இன்னும் எத்தனை .....?
காதலர்கள் ....?
அவஸ்தைப் படுகிறார்களோ?

மேரி!
உன்னைத் தேடி
ஈழப் பூமிக்குள் ஓடி வந்து
நான் பிரவேசிப்பேன்.
அப்போது
சுடப்படுவேன்
நான்
முஸ்லிம் என்பதற்காய்
மட்டும் .......

– இளை அப்துல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையக மக்களும் இ.தொ.கா வும்

(தொடர்-3)

– மலைமகன்

### தொண்டமானின் வளர்ச்சியும் M.G.R பாணி அரசியலும்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தற்போதைய தலைவரான தொண்டமான் ஆரம்பத்தில் முக்கியத்துவம் பெற்றவராக இருக்கவில்லை. இலங்கை–இந்தியர் காங்கிரசின் முதலாவது மாநாடு கம்பளையில் நடைபெற்றபோது அதனை முன்னின்று நடாத்தியதன் மூலமே முக்கியத்துவம் பெற ஆரம்பித்தார். 1940ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 8ம் திகதி கம்பளையில் 1வது மாநாடு நடைபெற்றபோது மாநாட்டு வேலைகளில் பெரும் பகுதியை தான் பொறுப்பெடுத்ததுமல்லாமல் வரவேற்புக்குழுவின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். இம் மாநாட்டின் வெற்றியும் அதில் தொண்டமானின் பாத்திரமும் அடுத்த சில வருடங்களில் இலங்கை–இந்தியர் காங்கிரசின் தலைமைப் பொறுப்புக்கு அவரை கொண்டு சென்றது. 1944ம் ஆண்டு இலங்கை–இந்தியர் காங்கிரசின் வருடாந்த மாநாடு நுவரெலியாவில் நடைபெற்ற போது காங்கிரசின் தலைவராக தொண்டமான் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உண்மையில் இலங்கை–இந்தியர் காங்கிரஸ் கொழும்பில் தோற்றம் பெற்றாலும் கொழும்பு வாழ் இந்திய வர்த்தக தலைமை அமைப்பில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. அது தனது வர்த்தகத்திலும் தனது இலாபத்தை இந்தியாவுக்கு கொண்டு செல்வதிலுமே அக்கறை காட்டியது. அத்தோடு இத் தலைமை பெருந்தோட்டத் துறையில் அமைப்பை விஸ்தரிப்பதிலும் அதிகளவு அக்கறை காட்டவில்லை. இந்நிலையில் அமைப்பின் இருப்புக்கு மலையகத்தில் நிலைகொண்டிருக்கும் ஒரு தலைவரைத் தேட வேண்டிய அவசியம் அமைப்புக்கு ஏற்பட்டது. தொண்டமான் அதற்குரியவராக மலையகத்தில் எழுச்சி பெற்றார். அதனால் தலைவரானார். மலையகத்தில் நிலைகொண்ட போதும் கொழும்பு வாழ் வர்த்தகர்களின் நலன்களையே பேணுகின்ற ஒருவராக இருந்தமையினால் கொழும்பு வாழ் வர்த்தகர்களும் தொண்டமானுக்கு தமது ஆதரவை வழங்கினர். 1950 இல் இதன் பெயரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என மாற்றினார்.

தொண்டமானும் இ.தொ.கா வும் இன்று செல்வாக்குப் பெற்று வளர்ச்சியடைந்து வந்ததற்கு முக்கியமாக 7 காரணங்கள் தொழிற்பட்டுள்ளன என மலையக மக்கள் முன்னணியின் செயலாளரான காதர், மோகன்ராஜ் என்ற பெயரில் எழுதிய **'20ம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்'** என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

முதலாவதாக,

மலையகத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையையும் மலையக தேசிய உணர்வுகளையும் ஏனையோர் அடியோடு நிராகரித்த அதேசமயம் இ.தொ.கா அதனையே அடித்தளமாகக் கொண்டு தன்னை கட்டி வளர்த்துக் கொண்டது. இதுவே பிரதான காரணமாகும்.

இரண்டாவதாக,

இ.தொ.கா. பணபலம் மிக்கதாகவும் அப்பணம் தொண்டமானின் கட்டுப்பாட்டில் இருந்தமையும் ஆகும்.

மூன்றாவதாக,

தொண்டமான் முதலாளியாக இருந்ததால் பதவியுயர்வு அரசாங்கப் பதவி இடமாற்றம் போன்ற சில தேவைகளை சிங்கள முதலாளித்துவ அரசியல் வாதிகளுடன் பேசிப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்தமை ஆகும்.

நான்காவதாக,

தொழிற்சங்கக் கிளைகளை எல்லாத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோட்டங்களிலும் நிறுவி ஒழுங்காக நிர்வகித்தமை ஆகும்.

ஐந்தாவதாக,

மலையக மக்களின் பாமரத் தன்மையிலும் ஊழலிலும் தமது பலத்தினை ஸ்தாபித்தமை ஆகும்.

ஆறாவதாக,

சர்வதேச அரங்கில் பிற்போக்குவாதிகள் தொண்டமானை தூக்கிப்பிடித்து தேவையான அளவு பணத்தினை அள்ளிக் கொடுத்தமை ஆகும்.

ஏழாவதாக,

சுயமாக வெடிக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களை ஆதரித்து அதன்மூலம் கிடைக்கும் அரசியல் லாபத்தை பல வழிகளிலும் கீழ்த்தரமான முறையில் கூட தானே கைப்பற்றுதல் ஆகும்.

எனக் குறிப்பிடுகிறார் காதர்.

பொதுவாக இ.தொ.கா. தானாக ஒருபோதும் போராட்டங்களை முன்னெடுப்பதில்லை. தொழிலாளர்கள் சுயமாகப் போராடும் போது அதனைச் சமரசப்படுத்தி சீரழிக்கவே முயற்சி செய்வார்கள். அதனையும் மீறி போராட்டம் முன்சென்று அரைகுறை வெற்றியைத் தழுவிக் கொண்டால் அவ் வெற்றியை உயர்த்திப் பிடித்து அரசியல் வியாபாரம் நடாத்துவார்கள். இவர்களுடைய இத்தகைய தன்மைக்கு பல நிகழ்ச்சிகளை உதாரணமாக கூறலாம். இதற்கு இவர்களது முதலாவது போராட்டமான உருளைவள்ளித் தோட்ட போராட்டம் சிறந்த உதாரணமாகும். இப் போராட்டம் 1946 ம் ஆண்டு இலங்கை-இந்தியர் காங்கிரஸ் காலத்தில் நடைபெற்றது.

## உருளை வள்ளித் தோட்ட போராட்டமும் தொண்டமானின் M.G.R பாணி நடைமுறைகளும்.

சிங்களத்தில் 'புளத்த்பிட்டிய' என அழைக்கப்படுகின்ற வெற்றிலையூருக்கு அருகில் இருந்த றேவ்ஸ் மேரி தோட்டமே உருளை வள்ளித் தோட்டமென மலையக மக்களால் அழைக்கப்பட்டது. இத் தோட்டத்தில் 400 ஏக்கர் வரை தொழிலாளர்கள் காடு வெட்டி திருத்தி மரக்கறித் தோட்டம் செய்து வந்தனர். அன்றைய காலத்தில் விவசாய அமைச்சராக இருந்த D.S.சேனநாயக்க மலையக மக்களை வெளியேற்றி சிங்கள மக்களைக் குடியேற்ற விரும்பினார். அங்கு குடியேறிய மலையக மக்கள் அரசின் அனுமதி இல்லாமல் அத்துமீறி குடியேறியுள்ளார்கள் எனக் கூறி அவர்கள் மீது வெளியேற்ற உத்தரவை பிறப்பித்தார். இவ் வெளியேற்ற உத்தரவை மலையக மக்கள் புறக்கணித்தார்கள். இதற்கு எதிராக போராடுவது என முடிவு செய்தார்கள். வேலைநிறுத்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு போராட்டம் சுயமாக எழுவதை அவதானித்த தொண்டமான் அதில் தலையிட்டு வேலைநிறுத்தத்தை ஒழுங்கு செய்தார். இதற்காக இலங்கை-இந்தியர் காங்கிரசினால் 1946 யூலை 15ம் திகதி தொடக்கம் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. 21 நாட்கள் வரை வேலைநிறுத்தம் தொடர்ந்தது. கற்றன், இரத்தினபுரி, எட்டியாந்தோட்டை, கேகாலை பிரதேசங்களைச் சேர்ந்த 121,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வேலைநிறுத்தத்தை நாடு முழுவதற்கும் விஸ்தரித்து ஒரு அரசியற் பிரச்சினையாக்கக் கூடிய சூழ்நிலை அன்று இருந்தது. தோட்டங்களுக்கு வெளியே நகர்ப்புறங்களில் இடதுசாரிக் கட்சிகளின் தொழிற்சங்கமே செல்வாக்குப் பெற்றவையாக அன்று விளங்கியிருந்தன. இக்காலத்தில் இடதுசாரிகள் இனவாத அரசியலுக்குள் நுழையவில்லை. அவர்கள் மலையக மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு ஆதரவு கொடுக்கக் கூடிய நிலையிலேயே இருந்தனர். அவர்களையும் இணைத்து பாரிய போராட்டமாக முன்னெடுக்கக் கூடிய நிலைமை இருந்தபோதும் தொண்டமான் தலைமை அதனை முன்னெடுக்காது வேலைநிறுத்தப் போராட்டத்தை இடையில் நிறுத்தி சட்டரீதியான வழிகளில் பிரச்சினையைத் தீர்க்க முனைந்தது.

இது தொடர்பான வழக்கு கேகாலை விசேட நீதிமன்றத்தில் நடைபெற்ற போது தொழிலாளர்கள் சார்பில் இலங்கை-இந்தியர் காங்கிரஸ் வழக்கில் பங்குபற்றியது. வழக்கின் முடிவில் 363 பேருக்கு எதிராக அத்துமீறல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு 1000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரூபா தண்டமும் 3 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. தொழிலாளர்கள் பணத்தினைக் கட்ட சிரமப்பட்டபோது தொண்டமான் M.G.R பாணியில் தண்டப்பணம் 4 இலட்சம் ரூபாவையும் தானே கட்டினார். அதற்காக தனது தேயிலைத் தோட்டத்தை அடகு வைத்து வட்டிக்கு பணம் பெற்றார் எனவும் கூறப்படுகிறது.

இத் தீர்ப்பு தொடர்பாக பலவேறு தரப்பினர் பக்கத்திலும் வந்த எதிர்ப்பினால் குற்றவாளி எனக் கருதப்பட்ட 363 பேருக்கும் சிறைத்தண்டனையை வழங்காமல் அரசு முன்வந்து பொதுமன்னிப்பை வழங்கியது. எனினும் தொண்டமான் இதிலும் தனது M.G.R பாணி விளையாட்டைக் காட்டுவதற்காக 362 பேரை மன்னிப்பு கேட்கும்படி கட்டளையிட்டுவிட்டு செல்வநாயகம் என்பவரை மாத்திரம் மன்னிப்பு கேட்கவிடாது பிரிவுக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்ய வைத்தார். பிரிவுக் கவுன்சில் செல்வநாயகத்துக்கு சார்பாக தீர்ப்பளித்தது. பல வருடங்களாக ஒரு இடத்தில் குடியேறியிருந்த ஒருவர் மீது அத்துமீறல் குற்றச்சாட்டு சுமத்தி அவரை வெளியேற்ற முடியாது எனத் தீர்ப்பளித்தது.

இவ் வழக்கின் வெற்றியை வைத்து தொண்டமான் மலையக மக்களின் கடவுளாகவும் இரட்சிப்பவராகவும் விளம்பரப்படுத்தப்பட்டார். முதலாளித்துவப் பத்திரிகைகள் அவரை உச்சியில் ஏற்றின. ஆனால் நடைமுறையில் மலையக மக்களின் நிலப் பிரச்சினை தீர்க்கப்படாது தொடர்ந்திருக்கும் நிலை காணப்பட்டது. அன்று மலையக மக்கள் ஏனைய நகரத் தொழிலாளர்களை இணைத்து விடாப்பிடியாக போராடியிருப்பார்களேயானால் தொடர்ந்து வந்த குடியேற்றப் பிரச்சினைளுக்கும் கூட எதிராகப் போராடி தமது நிலச் சுதந்திரத்தைப் பாதுகாத்திருப்பார்கள்.

இவ் வழக்கின் வெற்றியைத் தொடர்ந்தே தொண்டமான் இந்திய வம்சாவழி மக்களின் தனிப்பெரும் தலைவராக மாறினார். இதன் பின்னர் தொண்டமான் என்றால் இ.தொ.கா! இ.தொ.கா என்றால் தொண்டமான்!! என்ற நிலை வந்துவிட்டது. இந் நிலையினை வைத்து இ.தொ.கா வின் சர்வாதிகாரியாக அவர் மாறினார். சாதி அடிப்படையில் மு.இராஜலிங்கம் போன்ற தலைவர்களை வெளியேற்றினார். தம்மை எதிப்பவர்களை அமைப்பிலிருந்து ஓரம் கட்டி துதிபாடுபவர்களை மட்டும் அமைப்பில் வைத்துக்கொண்டார். பணத்தையும் சாதித்தடிப்பையும் கொண்டு தனது செல்வாக்கைப் பரப்பினார். இ.தொ.கா. என்ற அமைப்பை மக்கள்முன் நிலைநிறுத்துவதற்குப் பதிலாக தொண்டமான் என்ற தனிமனிதரையே இரட்சகராக மக்கள்முன் நிலைநிறுத்தினார். இதனால் கல்வியறிவு அற்ற பாமர மலையக மக்கள் தொண்டமானின் உருவப்படத்தை தமது குல தெய்வங்களின் படத்தோடு வைத்து வழிபடும் அளவுக்கு மக்களிடையே அவரின் செல்வாக்கு வளர்ந்தது.

## தொண்டமானின் வளர்ச்சியில் இடதுசாரிகளின் பங்கு

தொண்டமானினதும் இ.தொ.கா. வினதும் வளர்ச்சியில் இடதுசாரிக் கட்சிகளின் சந்தர்ப்பவாதங்களின் பங்கினை ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. இடதுசாரிக் கட்சிகள் எவையும் வளர்ந்துவரும் இந்தியத் தேசிய வாதத்தை கவனத்தில் எடுக்கவில்லை. அவர்கள் முகம் கொடுத்த தேசிய இனப் பிரச்சினைகளிலும் அக்கறை கொள்ளவில்லை. மலையக மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை நுணுக்கமாக அவதானிப்பின் தேசிய இனப்பிரச்சினைகளே என்பதையும் அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. இதனால் உருளைவள்ளித் தோட்ட நிலப்பறிப்பு, பிரஜாவுரிமைப் பிரச்சினை போன்ற தேசிய இனப்பிரச்சினைகள் தோன்றியபோதெல்லாம் இவர்கள் ஒதுங்கியே இருந்தனர், அல்லது ஓரிரு அறிக்கைகளுடன் ஒளிந்து கொண்டனர். அதேவேளை தொண்டமானை எடுத்ததற்கெல்லாம் திட்டினர். பிற்காலத்தில் இன்னும் ஒருபடி மேலே சென்று சிங்கள பேரினவாதிகளுடன் சேர்ந்து பேரினவாதத்திற்கு துணைபோயினர். இதனால் ஆரம்பகாலங்களில் இடதுசாரிக் கட்சிகளுக்குப் பின்னால் அணிதிரண்டவர்கள் கூட பிற்காலத்தில் தொண்டமானுக்குப் பின்னால் அணிதிரளத் தொடங்கினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் அக்காலத்தில் இ.தொ.கா விற்கு மாற்றீடாக மலையகத்தில் இடதுசாரிக் கட்சிகளே இருந்தன. இ.தொ.கா விலும் பார்க்க மலையக மக்களின் தேசியப் பிரச்சினைகளில் இடதுசாரிகள் அக்கறை கொண்டிருப்பார்களாயின் அவர்களுக்குப் பின்னால் மலையக மக்கள் அணிதிரண்டிருப்பார்கள். அதுவும் 1930 களின் நடுப்பகுதிகளில் மலையகப் பகுதிகளில் இடதுசாரிக் கட்சிகள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் அதற்கான சூழ்நிலை மிகவும் சாதகமாகவே இருந்தது. ஆனால் இடதுசாரிகள் இச் சூழ்நிலையை பயன்படுத்த தவறிவிட்டார்கள். இடதுசாரிகள் மாத்திரமல்ல மலையக மக்கள் மத்தியில் அவர்களின் முதல் தேசியவாதியாக இருந்த நடேசய்யர் கூட இவ்விடயத்தில் தவறிவிட்டார். மலையகத்தில் இடதுசாரிகள் விட்ட தவறு இன்று எழுந்து வரும் புதிய இடதுசாரிகளுக்கும் தேசியவாதிகளுக்கும் பெரியதொரு வேலைப்பளுவைக் கொடுத்துள்ளது. மலையக மக்கள் மத்தியில் நிலைத்து வேரூன்றிவிட்ட இ.தொ.கா வை அவர்களிடமிருந்து பிரிப்பது இலகுவான காரியமல்ல. அதற்கு நிறைய விலைகொடுத்தே ஆகவேண்டும். அதுவும் இ.தொ.கா இன்று அரசுடன் சேர்ந்துள்ள நிலையில் அப்பணி மிகவும் கடினமானது. மலையக மக்கள் முன்னணி அதற்கான விலையை ஏற்கனவே கொடுத்துள்ளது. விளைவு அதன் தலைவர்கள் சிறையின் உள்ளே உள்ளார்கள். மறுபக்கத்தில் இ.தொ.கா விடமிருந்து மலையக மக்களைப் பிரித்தெடுக்காமல் மலையக மக்களின் விடுதலை என்பது ஒருபோதும் சாத்தியமில்லை.

39 →

விடுதலையின் பேரால் அரசியல் வகுப்பெடுத்தீர்கள், செவிமடுத்தோம். ஆனால் எதிரியுடன் சேர்ந்து விடுதலை பற்றிப் பேசினால் எப்படிக் கேட்போம்? இன்று கருத்துச் சுதந்திரத்தையும் கொல்ல நினைக்கிறீர்கள். சில உரிமைகள் இருந்ததன் காரணமாகத்தான் நீங்கள் உங்கள் அமைப்பால் (பழைய அமைப்பு) கடத்தப்பட்ட போதும் வெளியில் வந்தீர்கள் என்பதை நினைக்கக் கடவீர்களாக!

சரிநிகரில் உங்களுக்கு முரணான கருத்து இருக்கலாம், அதற்காக அவர்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்க முற்படுவது எந்த வகை நியாயம் ??

## ஒரு கொலை

நாட்டிலிருந்து
சுலபமாய்
ஒரு செய்தி வந்தது.

என் தம்பி
கொலை செய்யப்பட்டானாம்
பிணங்கூட
காணாமல் போயிற்றாம்

அடங்கிப்போனேன்
என் ஆத்மாவின்
ஒவ்வொரு துகழ்களும்
எங்கோ கரைந்து போயிற்று.

அன்றிரவு
நான்
தற்கொலை செய்து கொண்டேன்.

யார் கொன்றார்
எந்தக் கைகள் கொன்றது.

உன் குரல்வளையைக் கிழித்து
அந்தத்
தேசத்தின் முனையில்
யார் கொழுவியது.

அவர்கள்
உன்னுடன்
என்னையும் கொன்றிருக்கலாம்
ஏன்
எங்கள் தலைமுறையையே
அழித்திருக்கலாம்

ஐயகோ
சிதிது சிதிதாய்
எனது தேசம்
எச்சிலாக்கப்படுகிறதே.

இன்னும் வரும்
தூக்கத்தில் புகுந்து
தொண்டையைக் கிழித்தனர்
என்று வரும்
கத்தியால் குத்தி
குருதி குடித்தனர்
என்று வரும்

அந்தத் தேசத்தில்
ஒரு இலையான்
உள்ளவரை வரும்!

– ஆனந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜேர்மனி:

# பெண்கள் சந்திப்பில் .......

—மென்மொழி

ஜேர்மனியில், 1990 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வரும் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைப் பெண்கள் சந்திப்பின் 10 வது தொடர் 25.9.93 அன்று Bruchsal என்னும் இடத்தில் இடம் பெற்றது. இச்சந்திப்பிற்கு ஜேர்மனியின் பல இடங்களில் இருந்து ஆர்வமுள்ள 35 பெண்கள் வரையில் கலந்து கொண்டனர். ஐரோப்பாவில் வேறுபட்ட சூழ்நிலையிலும் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பெண்கள் மட்டும் தனியாகக் கலந்து கொள்வது வரவேற்க வேண்டிய விடயமாகும். ஏனைய சந்திப்புக்கள் போலன்றி இதில் எல்லோரும் பெண்களாக இருப்பதனால் ஒருவித்தியாசமான சூழ்நிலை காணப்படுகிறது. பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் பற்றியும், பெண் ஒடுக்கு முறையில் எவ்வாறு பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள் எனவும் ஒவ்வொரு பெண்ணும் தனது கருத்தை மனம் திறந்து சுதந்திரமாக கதைப்பதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாக உள்ளது.

இப் பத்தாவது சந்திப்பில் பெண்களின் ஆக்கங்களைக் கொண்ட பெண்கள் சந்திப்பு மலர் 3. வெளியீட்டுடன், பல்வேறுபட்ட நிகழ்சிகளும் இடம்பெற்றன. அவற்றில் முக்கியமாக ஜேர்மன் பெண்ணிலை வாதிகளினால் கூறப்பட்ட ஜேர்மன் அரசின் 218வது சட்டம் பற்றி குறிப்பிடுவது நல்லது என நினைக்கிறேன். இவ் 218வது சட்டம் பெண்கள் கருக்கலைத்தல் தொடர்பானது. இச்சட்டம் 1993 மே மாதத்திற்கு முன்னர் இரண்டாகக் காணப்பட்டது. அதாவது கிழக்கு ஜேர்மனிக்கு என்றும் மேற்கு ஜேர்மனிக்கு என்றும் இருந்தது. கிழக்கு ஜேர்மனியில் ஒரு பெண் கருவுற்று 3 மாதத்திற்குள் அப்பெண் கருக்கலைக்க விரும்பினால் கருக்கலைக்கலாம். மேற்கு ஜேர்மனியில் ஒருபெண் கருக்கலைக்க விரும்பினால் என்ன காரணத்தினால் கருக்கலைக்கின்றார் என்று கூறவேண்டும். (காரணம்:- பாலியல் பலாத்காரம், உடல்ரீதியாக பாதிப்பு ஏற்படும் என்று டாக்டர் கூறினால், பொருளாதாரக் கஸ்ரம், வீட்டு வசதியின்மை, கருவுற்ற பெண்ணுக்கு நிலையான கணவன் அல்லது நண்பன் இல்லையெனில்) அவ்வாறாயின் கருக்கலைத்தல் தொடர்பாக ஆலோசனை வழங்கும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கருக்கலைக்கலாம். இவ் ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள் பெயரளவில் தான். ஆனால் அவை கருக்கலைத்தலுக்கு ஆலோசனை வழங்குவதிலும் பார்க்க கருவைச் சுமப்பதற்குத்தான் கூடுதலாக ஆலோசன்ன வழங்குகின்றன. மேலும் 1993 மே மாதத்திற்கு முன்னர் கருக்கலைத்தலின் போது ஏற்படும் வைத்திய செலவை காப்புறுதி செலுத்திக் கொள்ளும்.

1993 மே மாதத்திற்குப் பின்னர் கொண்டு வரப்பட்ட 218வது சட்டம் முழு ஜேர்மனிக்கும் கொண்டு வரப்பட்டது மட்டுமன்றி மிகவும் இறுக்கமானதாகவுமுள்ளது. கருக்கலைத்தலை தீர்மானிப்பது பெண் அல்ல சட்டம் தான் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு பெண் கருக்கலைக்க விரும்பினால் என்ன காரணத்தினால் கருக்கலைக்கின்றார் என்பதை நிருபித்துக் காட்ட வேண்டும் அத்துடன் கணவர், முதலாளி, பெற்றொர் ஆகியோரின் சம்மதக் கடிதமும் சமர்ப்பிக்க வேண்டும். முன்புபோல் எல்லா வைத்தியசாலைகளிலும் கருக்கலைத்தல் செய்ய முடியாது. தற்போது குறிப்பிட்ட சில வைத்தியசாலைகளில் மட்டுமே செய்யலாம். அது மட்டுமன்றி வைத்திய செலவையும் பெண்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். முன்னர் வைத்திய செலவு 500 DM தொடக்கம் 1000 DM ஆக இருந்த தொகை தற்போது 2000 DM தொடக்கம் 3000 DM ஆக உள்ளது.

ஜேர்மனின் சனத் தொகை குறைந்தால் தனது அரசியலுக்கு பாதிப்பு ஏற்படும். ஏனவே ஜேர்மன் பெண்கள் கூடுதலான பிள்ளைகளைப் பெறவேண்டும். எனக் கருதும் அரசு மாறாக அங்குள்ள வெளிநாட்டு பெண்கள் குறைவான பிள்ளைகளை பெறவேண்டும் என எதிர்பார்க்கின்றது. தற்போதைய

39 ⟶



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறுகதை :**

# அகம்

– சுருதி



எனக்கு என்ன நடந்தது.
ஒண்டுமே விளங்கவில்லை. எப்பவுமே என் பதில்கள் உதட்டளவில் மட்டுமே ஏன் நிண்டு விடுது. நான் கோழையா அல்லது பயந்த சுபாவம் உள்ளவளா. ஒன்றுமே புரியவில்லை . ஒன்றுமே புரியவில்லை. ஆர் என்ன கேட்டாலும், கதைத்தாலும் சரி நக்கலடித்தாலும் சரி என் மனதுக்குள்ளேயே கதைக்கிறேனே தவிர என்னால் உருப்படியான பதிலை வாயைத் திறந்து சொல்கிறேனா. ஆனால் பெயர் மட்டும் நல்ல பெயர்.

பக்கத்து வீட்டு மனோன்மணி மாமி கூட மகளை பேசேக்க என்னை உதாரணம் காட்டிப் பேசுவா.
'அவளின்ர மூத்திரத்தில கொஞ்சம் வேண்டிக் குடி. என்ன அடக்கம். விடிய முத்தம் கூட்டுறதில இருந்து பொழுது சாய்ந்து விளக்கு வைக்கிற வரை அவள் ராசாத்தி செய்யிறதைப் பார்' என்று!
ம்... ஆனா என்ர மனம் எவ்வளவு கோழை.

'என்ன ராசாத்தி அக்கா அதுக்குள்ள கனவு காண ஆரம்பிச்சிட்டீங்களே.'

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தேன்.
நக்கலான சிரிப்புடன் இந்தி.
'இந்தி ....'
எனக்கு சிரிப்புத்தான் வந்தது.ஆனா மனம் தான் பதில் சொன்னது.
15 வருசம் காணாத கனவே இப்ப புதிசா கண்டிடப் போறன்.

'தண்ணி இவ்வளவு ஊறிக்கிடக்கு. அள்ளிப் போட்டுவிடன். உன்னை மாதிரி நானும் கனவு காண ஏலாது. அங்க அப்பர் புட்டைத் தின்டிட்டு தொண்டை விக்கிக் கொண்டு இருக்கிறார். '

தண்ணிக் குண்டுக்குள்ள தவக்கை துள்ளித் துள்ளி பாஞ்சுது.
என்ர ஆசைக் கனவு எல்லாம் இந்த நீர்க்குமிழி மாதிரி போய்ச்சுதே. நான் ஒரு முண்டம்.
என்னுடைய வாயாலேயே 'ஓம்' என்று போட்டு இப்ப என்ன பெரிய சிந்தனை வேண்டிக்கிடக்கு, சிந்தனை!

'எடி இந்தி!
நீ முதலில தண்ணியை அள்ளிக் கொண்டு போ, நான் பிறகு அள்ளுறன்.'
'ஓ... உன்ர புளுகில என்னை அள்ள விடுற. சரி சரி... நல்லா இருந்து கனவு காணு. ஆனா குண்டுச் சிவரை உடைச்சுப்போடாத. தண்ணி கலங்கிப்போகும், பிறகு குடிக்க ஏலாது.'

நானும் ஏன் ஒருவருக்கும் பயனில்லாம போவான் என்று தானே இந்தக் கல்யாணத்துக்கு ஓமெண்டன். என்னாலதானே என்ர தங்கச்சியவைக்கும் கல்யாணம் நடக்காம போகுது. சின்னத் தங்கச்சி உமாவின்ர பள்ளிக்கூடத்தில படிக்கிற சின்ராசு, வீட்டு முன் றோட்டால அடிக்கடி சைக்கிளில போறதும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாறதுமாக இருக்கிறான். அவளும் மனதுக்க ஆசையை வைத்துக் கொண்டு பல்லை நறும்பி ஈக்குக்கட்டை காட்டுறாள்.

ஒவ்வொரு சம்பந்தத்துக்கும் ஒவ்வொரு நொட்டை அந்த நேரம் அம்மா சொல்லி அனுப்பினா. எத்தனை சம்பந்தம். முட்டுக்காரன், இந்தியாக்காரன்..... பொம்பிளைச் சகோதரம் கூட, வடிவில்லை, வசதிகுறைவு என்று தட்டிக் கழிஞ்சுது. ஆனா எனக்கு வயது மட்டும் 32 ஐத் தாண்டினது ஒருதருக்கும் நினைவு வரவில்லை.

எந்த வசதியை வைச்சு இப்படி அலைக்கழிச்சாவோ தெரியாது. ஏதோ முந்தி ஊரிலேயே முதல் முதல் கல்வீடு கட்டி நல்ல பணக்காரராக இருந்தவையாம். அது கூட பெரியம்மாவுக்கு சீதனமாக போய்விட்டது. அது இருந்தாலும் கொஞ்சம் வருகிற மாப்பிள்ளைகளிடம் வசதி எதிர்பார்க்கலாம். அப்பரோ தேத்தண்ணிக்கடை சமையல்காரர். இந்த சின்ன மண் வீட்டில என்னத்தைக் கண்டாவோ.
இருக்கிற ஒரு தையல் மெசினும், காலித் தேக்குமர அலுமாரியும்தான் அவவின்ர பெருமை பாடுற சொத்து.
அலுமாரிக்கும் கால் விழுந்துபோய்விட்டுது.

அந்த நேரம் எத்தனை பெடியள் வேலிக்குளால கடிதம் எறிஞ்சவங்கள். எல்லாம் விரித்து படிக்காமலேயே பயம் கடிதங்களை விழுங்கிவிட்டுது. இப்ப யோசித்து என்ன பலன். எல்லாம் தலைவிதி, கடவுள் செயல், விதி...!
விதி எண்டு இனிச் சொல்லக்கூடாது.அதைத்தானே நானும் சொல்லி இவ்வளவு நாளும் என்னை ஏமாத்தினேன். கடவுள் செயலாம், கடவுள்செயல்!

அம்மாவும் இவ்வளவு காலமும் நாலு மணிக்கு எழும்பி கைமணி அடிச்சு... பிள்ளையாரைச் சுத்தினா.
என்ன பலன்
ம்..ம்...... நல்ல பலன் தான்.
அதுதான் அரசமர பிள்ளையார் மாதிரி இவ்வளவு காலமும் இருந்திட்டு இந்த வயசு போன நேரத்தில இப்ப கலியாணம் கட்ட அந்த மனுசன் வந்திருக்கு. முகம் கூட ஞாபகம் இல்லை.
எல்லாம் நீர்கொழும்பு ரெண்டு சொந்தகடையும், வீடும் செய்த வேலை. ஏன் தான் யூலைக் கலவரத்துக்குள்ள எரியாம விட்டுதோ தெரியாது.

'எடி ராசாத்தி'—பக்கத்து வீட்டு பெரியம்மா.
'என்னடி தண்ணிக் குண்டில செய்யிற? நாளைக்கு பொம்பிளையா போறனீ... எவ்வளவு நேரம் தண்ணி ஊற வைக்கிற?
ஒண்டுக்குஅஞ்சு குமர்ப் பெட்டையள் இருந்து கொண்டு , உன்னை யாரு தண்ணி அள்ள அனுப்பினது?'

'இல்லை பெரியம்மா நான் தான் வந்தனான்.'
(இங்க தான் வடிவா யோசிக்கலாம்)

'அங்க சாறி சட்டை வந்திட்டு. ஏதோ நல்ல காரியம் எண்டபடியால் நேற்று பின்னேரம் குடுத்தும் இரவிரவாக முழிச்சிருந்து தைச்சு தந்திருக்கிறா. வந்து ஒருக்கா சாறி சட்டையை போட்டுப் பார்!
அங்க கொம்மா உன்னைத் தேடுறா. நீ என்னடா எண்டா தண்ணிக்குண்டில இருக்கிற.'

'இந்தா பிள்ளை ராசாத்தி... இந்த சங்கிலியையும் காப்பையும் போடு!'

வீட்டுக்க இரண்டாவது தங்கச்சி நேற்று மாப்பிள்ளை வந்து பாத்திட்டு போன தொட்டு அழுது கொண்டிருந்தாள் அக்காவின்ர வடிவுக்கு தான் கற்பனை பண்ணியிருந்த மாப்பிளை கலைஞ்சு போனதை நினைத்து.
'இவள் ஏன் அம்மா அழுகிறாள்?'

நான் என்னையே நினைச்சுப் பாத்தன்.
கட்டப் போற நானே ஒன்றும் அழவில்லை.
இவர்களும் நாளைக்கு என்னை மாதிரி இத்தனை வயது வந்து கண்ணீர் விடக்கூடாது என்று தானே என்னுடைய ஆசைகளையும் கலைச்சுப் போட்டு மரக்கட்டை மாதிரி இருக்கிறன்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்மா தங்கச்சியை பேசினா.
'நல்ல காரியமும் அதுவுமாக ஏனடி ஒப்பாரிவைக்கிற.'

ஆனா என் மனம் சொல்லிச்சு...
அவள் சரியான வேலையைத்தான் செய்கிறாள் என்று!

இக் கதை பெண்கள் சந்திப்பு மலர்-92 இலிருந்து நன்றியுடன் பிரசுரமாகிறது.

36 →

சட்டப்படி அங்குள்ள வெளிநாட்டவர்கள் 12 சதுர மீற்றர் Room பிள்ளைக்கென இருந்தால் தான் அவர்கள் பிள்ளை பெறமுடியும். அத்துடன் மறைமுகமாக ஊசி மூலம் வெளிநாட்டு பெண்களுக்கு கரத்தடை மருந்துகளை ஏற்றுதல் இம்முறை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் கல்லடசல் ஒப்பறேசன் செய்யும் வேளைகளில் அவர்களின் அனுமதியின்றி கருத்தடை ஒப்பறேசனையும் செய்து விடுகின்றார்கள்.

இத்தகைய சட்டத்தைஇல்லாமல் செய்வதே ஜேர்மன் பெண்நிலைவாதிகளின் முக்கிய நோக்கம். இதற்கு எதிராக ஒவ்வொரு மாவட்டங்களிலும் மகாநாடுகள், கலந்துரையாடல்கள் என்பன நடாத்தி வருகின்றனர். எதிர்வரும் சர்வதேச பெண்கள் தினமாகிய மார்ச் 8ந் திகதி ஜேர்மன் தழுவிய பெண்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

முதலாளித்துவ அரசாங்கங்களும் கட்சிகளும் தமது நாட்டு மக்களை அதிக பிள்ளைகளை பெறுமாறு ஊக்கிவிக்கும் அதேநேரம் மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் வறுமைக்கும் பிரச்சனைகளுக்கும் காரணம் அங்கு காணப்படும் சனத்தொகைப் பெருக்கம் தான் எனக் கூறி அதனைக் கட்டுப்படுத்த சகல வழிகளிலும் முயன்று வருகின்றது. உண்மை அதுவல்ல ஏனைய காரணிகளை தவிர்த்து சனத்தொகை மட்டும் காரணம் காட்டுவது தவறானது என சுட்டிக்காட்டினர்.

✸

# இது எந்த வகை கருத்துச் சுதந்திரம் ?

– அப்பு

தினகரன் பத்திரிகையில் புல்லட் பொக்ஸ் என்ற கட்டுரையை எழுதிவரும் சூரியதீபனை நான் முதல் முதலில் 1983 ஆரம்ப காலங்களில் எமது பகுதி சனசமூக நிலையம் ஒன்றில் சந்தித்தேன். அப்போ நான் ஈழ மாணவர் பொது மன்றத்தில் (GUES) ஓர் ஆரம்ப உறுப்பினர். என்னைப் போன்று ஆரம்ப உறுப்பினர்களாக இருந்த இன்னும் இரண்டு பேரும் சேர்ந்த எங்கள் மூன்று பேருக்கும் அரசியல் வகுப்பு எடுப்பதற்காக வந்திருந்திருந்தார் சூரியதீபன். அந்த வகுப்பில் அவர் கூறியது எனக்கு இப்போதும் நல்ல ஞாபகம்!

'என்னுடையது என்று எதனையும் நினைக்கக் கூடாது, உதாரணமாக உங்களிடம் ஒரு சைக்கிள் நின்றால் அதனை எனது என்று பூட்டி வைக்கும் மனோபாவம் கூடாது, கருத்துக்களை கூறத் தயங்கக் கூடாது, அதேபோல் ஏனையோர் கூறுவதை செவிமடுக்க வேண்டும், ஒத்துவராத கருத்துக்களாயின் விவாதிக்கலாம் .....' என்றெல்லாம் கருத்துச் சுதந்திரம் பற்றி நீண்ட பிரசங்கமே செய்தார்.

அதன் பின்னர் அவர் சார்ந்திருந்த அமைப்பு -86 இல் என நினைக்கிறேன்- அவரையும் அவருடன் இன்னொருவரையும் விசாரணை என்ற பெயரில் கடத்திய போது அதே அமைப்பில் இருந்த ஜனநாயக சக்திகள் பத்திரிகைகள் ஊடாகவும் மக்களைத் திரட்டி ஊர்வலம் நடாத்தியும் (இதில் உரும்பிராயில் நடத்தப்பட்ட ஊர்வலம் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்ட ஊர்வலம் என்பது குறிப்பிடத்தக்கது) தமது கண்டனத்தைத் தெரிவித்ததன் காரணத்தால் சூரியதீபனும் நண்பரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இன்று அதே சூரியதீபன் சரிநிகரை புலி சார்புப் பத்திரிகை என்றும், சரிநிகரில் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதுபவரை மிரட்டியும் 'புல்லட் பொக்ஸ்' ஊடாக எச்சரித்திருக்கிறார்.

இது எந்த வகையான கருத்துச் சுதந்திரம் சூரியதீபன் அவர்களே!!

← 35



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோல்வியடைந்தேன் ......



புகையிலையின் கொலை நடந்து
பசுமை போயிற்று
ஆடை கலைந்து
அம்மணமாய் வீழ்ந்த நிலம்
உலர்ந்து
புழுதி உதிர்ந்து
கிடக்கையிலும்
வீச்சமாய் குருத்தெறிந்த கெட்டுக்கள்
வானத்திற்கு சவால்விடும்.

கொடுமைதானா வெயிலிலும்
இது நடந்தது.

கோரைப்புல் சரிந்து
சடசடத்து வீழ்ந்த அதிர்விலும்
எறும்பு
ஒருகணம் நின்று
மீண்டும் தொடரும்.
காய்ந்த வரப்பில்
அறுகம்புல்லு உறைந்து
கிடக்கும்.

கிணற்றோடு புணர்ந்து எழும்
துலாக்களும்
ஆடுகால் பூவரசின்
செழிப்பு ஒழுகிய
நிழலும்
என் பால்ய பருவத்தை இழுத்து வரும்.

அந்த முரட்டு ஆலமரம்
அலையடித்த மணற் பரப்பு
ஓசை எழுப்பி
சிறகடித்துத் தவிக்கும்
குஞ்சு இலைகளுடன்
அரசமரம்
வேள்விக் காலங்களில் மட்டும்
களைகட்டும் கோவில்
நிம்மதி இழந்த முகத்துடன்
திரியும்
கோவில் பூசாரி
எல்லாமே
அந்த வாசிகசாலையின் கலகலப்பில்
உயிர்ப்புறும்.

என் பாதங்கள்
மணல் எறிந்து
தலைமீதும் தூவும்
இலேசான பொழுதுகளும்

குதிக்காலால்
மணலை உதைத்து
நண்பனுடன்
விவாதித்து நடந்த
கனத்த பொழுதுகளும்

சப்பாத்துள் எனது பாதங்கள் திணிக்கப்பட்டதால்
தொலைதூரம் போயின.

கால்படா பூமியிதில்
இன்றைய பொழுதையும்
புரிய முயற்சித்து
தோல்வியடைந்தேன்.

— பாலமோகன்